Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

SIDDHANDA SIGAMANI - TAMIL VERSION

சீந்தாந்த சீகாமணி - மூலம்

AUTHOR
Nallathur - Thuraimangalam
SRI SIVAPRAKASA SWAMIGAL

ஆசிரியர்
நல்லாற்றூர் – துறைமங்கலம்
ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்

PUBLISHER
Mailam Bommapura Adheenam
Mailam & Bommayapalayam
2014

வெளியீடு
மயிலம் பொம்மபுர ஆதீனம்
மயிலம் – பொம்மையபாளையம்
2014

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

Publication No : 89
வெளியீடு எண் : 89

SIDDHANDA SIGAMANI - TAMIL VERSION
சிந்தாந்த சிகாமணி - மூலம்

AUTHOR
Nallathur - Thuraimangalam
SRI SIVAPRAKASA SWAMIGAL

ஆசிரியர்
நல்லாற்றூர் - துறைமங்கலம்
ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்

Pubshied on 28.12.2014 at all India Veerasaiva Mahasabha Lingayath Maha Sangamam Held at Kottayam in Kerala.

இந்நூல்
கேரள மாநிலம், கோட்டயத்தில் 28.12.2014 அன்று நடைபெற்ற அகில இந்திய வீரசைவ லிங்காயத்து மகா சங்க விழாவின் போது வெளியிடப்பெற்றது.

PUBLISHER
Mailam Bommapura Adheenam
Mailam & Bommayapalayam
Villupuram District, Tamil Nadu - 604 304.
Phone : 04147 - 241223 Cell : 09842204762
2014

வெளியீடு
மயிலம் பொம்மபுர ஆதீனம்
மயிலம் & பொம்மையபாளையம்
விழுப்புரம் மாவட்டம், தமிழ்நாடு - 604 304.
தொலைபேசி எண் : 04147 - 241223
செல்பேசி எண் : 09842204762
2014

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஸ்ரீ பாலசித்த குருவே போற்றி!
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க!

குருமரபு வாழ்த்து

பரசிவமார் திருக்கயிலைப் பரம்பரையின்
வீரசைவ பரமே காட்டப்
பரனருளால் பொம்மபுரக் கடலுதித்த
சங்குகன்னப் பால சித்தர்
வரமயிலார் முருகனுப தேசமுடன்
வந்துகுரு வாகி யாண்ட
திரமிகுபேர் சிவஞான பாலயநற்
குருமரபு சிறந்து வாழி!

கலிவிருத்தம்

அம்மா சிவஞா னிஅடிக் கமலம்
மும்மா யைகடந் துமுயங் கும்அது
சும்மா தலைமீ துசுமத் தினனால்
கைம்மா றுளதோ கடையேன் இடையே!

– ஸ்ரீசிவப்பிரகாச சுவாமிகள்
(சிவஞான பாலய சுவாமிகள் கலம்பகம் – 24)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூல் குறிப்பு

1)	தலைப்பு	: சித்தாந்த சிகாமணி (வீர சைவ தத்துவ நூல்)
2)	ஆசிரியர்	: நல்லாற்றூர் – துறைமங்கலம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்
3)	பதிப்பு	: முதற்பதிப்பு டிசம்பர் 2014
4)	உரிமை மற்றும் வெளியீடு	: மயிலம் பொம்மபுர ஆதீனம் மயிலம் – 604 304. பொம்மையபாளையம் – 605 104.
5)	பொருள்	: வீரசைவ தத்துவ நூல்
6)	தாள்	: 70 GSM Maplitho
7)	அளவு	: 1/8 டெம்மி
8)	எழுத்து	: 12.5
9)	பக்கங்கள்	: 232 + 2 = 234
10)	விலை	:
11)	படிகள்	: 200
12)	அச்சிட்டோர்	: ஸ்ரீ மாருதி லேசர் பிரிண்டர்ஸ் 173, பிட்டர்ஸ் ரோடு, இராயப்பேட்டை, சென்னை – 14. 044– 2852 0403
13)	வெளியீடு எண்	: 89
14)	ISB No.	: ISBN–13–978-81-926955-5-6

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Sri Murugan Thunai
Thirukailaya Paramparai Mailam Bommapuram Adheenam,
Srimath Sivagnaana Balaya Swamigal
Thirumadam
Mailam – 604 304. Bommayapalayam - 605 104.

BENEDICTION

Nallathur – Thuraimangalam Sri Sivaprakasa Swamigal, the blessed principle disciple of Mailam – Bommapura Adheenam has authored 34 Spiritual and Classical Tamil Book. His Master piece **"Sithantha Sigamani"** translated from the Sanskrit Language has acclaimed as the Philosophy of Veera Saivam.

All the Spiritual creations of Sri Sivaprakasa Swamigal was brought out as a single volume, respectively in 1944 entitled **"Sivaprakasar Senthamizh Noolgal"** by the good will of the 18th Pontiff Sri-La-Sri Sivagnana Balaya Swamigal and another one entitled Nallathur – Thuraimangalam Karpanai Kalangiyam Sri Sivaprakasa Swamigal Senthamizh Noolgal by the interest of the 19th Pontiff Sri-La-Sri Sivagnana Balaya Swamigal in 2004. The Spiritual work entitled **"Sithantha Sigamani"** is an integral part of the volume released already.

At Present the Malaya version of **"Sithantha Sigamani"** is scheduled to be released on Sunday the 28th December 2014 at Kottayam in Kerala at the Conference of **All India Veera Saiva Lingayat Maha Sangam.**

On the very occasion it has been spiritual decided to bring out the Printed Tamil version of **"Sithantha Sigamani"** authored by Sri Sivaprakasa Swamigal.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

In this regard I shower my blesses all those who have laboured and sponsored to bring out this noble endeavour and especially to Mrs. **Kalaivani Sridharan,** Proprietress of **Maruthi Achagam Chennai** and her employees for aesthetically preparing this spiritual work and hope will get the blessings of Sri Bala Sithar, Adhi Sivagnani and Lord Sri Murugan forever.

Hope this spiritual volume will go a long way for the benefit of the People of all walks of Life.

Mailam
28.12.2014

Sree Sivagnana Balaya Swamigal
20th Pontiff

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம்

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம்

மயிலம் - 604 304 & பொம்மையபாளையம் - 605 104

விழுப்புரம் மாவட்டம்

ஆசியுரை

மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடத்தின் அருட்சீடர் நல்லாற்றூர் – துறைமங்கலம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் ஆவார். அவர்கள் 34 நூல்கள் இயற்றிய உள்ளார்கள். அவர்கள் இயற்றிய நூல்களில் **"சித்தாந்த சிகாமணி"** என்னும் நூல் வடமொழியில் இருந்து மொழி பெயர்ப்பு செய்யப் பெற்ற வீரசைவ தத்துவ நூலாகும். **"சிவப்பிரகாசர் செந்தமிழ் நூல்கள்"** என்னும் பெயரில் 1944 ஆம் ஆண்டு மயிலம் பொம்மபுர ஆதீனம் 18 ஆம் பட்டம் சுவாமிகளும், **"நல்லாற்றூர் துறைமங்கலம் கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் செந்தமிழ் நூல்கள்"** என்னும் 2004 ஆம் ஆண்டில் மயிலம் பொம்மபுர ஆதீனம் 19 ஆம் பட்டம் சுவாமிகளும், **"ஸ்ரீசிவப்பிரகாச சுவாமிகள் படைப்புகளை"** ஒரே நூலாக வெளியிட்டு அருளியுள்ளார்கள். அந்நூல்களில் **"சித்தாந்த சிகாமணி"** என்ற இந்நூல் அச்சு செய்யப் பெற்றுள்ளது.

தற்போது கேரள மாநிலம், கோட்டயத்தில் 28.012.2014 ஞாயிறு அன்று நடைப்பெற்ற அகில இந்திய வீரசைவ லிங்காயத்து மகா சங்க விழாவின்போது **"சிந்தாந்த சிகாமணி"** என்னும் நூல் **"மலையாள"** மொழியில் வெளியீடு செய்யப் பெறுகிறது. அத்தருணத்தில் **"ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்"** தமிழில் எழுதிய **"சித்தாந்த சிகாமணி"** என்னும் நூலை அச்சு செய்து வழங்கலாம் என எண்ணிய நிலையில் இந்நூல் வெளியீடு செய்யப்பெறுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மேலும் இந்நூல் உருவாக்கத்திற்கு உதவிய அன்பர்களுக்கும், குறுகிய காலத்தில் சிறந்த முறையில் அச்சு செய்து உதவிய சென்னை மாருதி அச்சக உரிமையாளர் திருமதி. **கலைவாணி ஸ்ரீதரன்** அவர்களுக்கும், அச்சகப் பணியாளர்களுக்கும் எல்லா நலன்களும், வளங்களும் பெற ஸ்ரீபாலசித்தர், ஆதிசிவஞானி குருவருளும், ஸ்ரீதிருமுருகன் திருவருளும் துணை நிற்பதாகுக.

மேலும் அறிஞர் பெருமக்களும், ஆன்மீக அன்பர்களும், சான்றோர்களும், இந்நூலை கற்று அதன் பயனை அடைவார்களாகுக.

மயிலம்
28.12.2014

ஸ்ரீசிவஞான பாலய சுவாமி
20 ஆம் பட்டம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)





ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்

20ஆம் பட்டம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மயிலம் - பொம்மபுர ஆதீனத்தைத் தோற்றுவித்தருளியவர் மற்றும் அவர்தம்வழி குரு மரபினர்

வ.எண்	குருமகா சந்நிதானங்கள்	அருளாட்சி முறைமை	அருளாட்சி செய்த ஆண்டுகள்		குருபூசை நட்சத்திரம்
1.	ஸ்ரீ பாலசித்தர்	(ஆதீனத்தைத் தோற்றுவித்த முதல் குரவர்) 500 ஆண்டுகளுக்குமேல்			ஆனி - திருவாதிரை
2.	ஆதிசிவஞானி தவத்திரு ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	2ஆம் பட்டம்	கி.பி.12 – 17ஆம் நூற்றாண்டு வரை		வைகாசி - விசாகம்
3.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	3ஆம் பட்டம்	குன்னம்பாளையம்	கி.பி. 1645 – 1695	தை - திருவாதிரை
4.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	4ஆம் பட்டம்	சிதம்பரம்	கி.பி. 1695 – 1727	கார;த்திகை - திருவாதிரை
5.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	5ஆம் பட்டம்	கந்தப்பனூர்	கி.பி. 1727 – 1733	மாசி - சதயம்
6.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	6ஆம் பட்டம்	கரையாம்புத்தூர்	கி.பி. 1733 – 1746	வைகாசி - பூசம்
7.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	7ஆம் பட்டம்	மாத்தூர்	கி.பி. 1746 – 1761	மாசி - பூராடம்
8.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	8ஆம் பட்டம்	குமாரசார்வாய்	கி.பி. 1761 – 1770	புரட்டாசி - கார;த்திகை
9.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	9ஆம் பட்டம்	சிவகுன்றம்	கி.பி. 1770 – 1773	வைகாசி - மூலம்
10.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	10ஆம் பட்டம்	விருத்தாசலம்	கி.பி. 1773 – 1784	மார;கழி - சித்திரை
11.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	11ஆம் பட்டம்	சிதம்பரம்	கி.பி. 1784 – 1809	புரட்டாசி - சுவாதி
12.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	12ஆம் பட்டம்	கல்யாணபட்டினம்	கி.பி. 1809 – 1817	வைகாசி - பூரட்டாதி
13.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	13ஆம் பட்டம்	விருத்தாசலம்	கி.பி. 1871ல்; 18 நாள்கள் மட்டும்	வைகாசி - சுவாதி
14.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	14ஆம் பட்டம்	சிதம்பரம்	கி.பி. 1871 – 1843	புரட்டாசி - ரேவதி
15.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	15ஆம் பட்டம்	நல்லாற்றூர்	கி.பி. 1843 – 1887	சித்திரை - புனர;பூசம்
16.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	16ஆம் பட்டம்	நல்லாற்றூர்	கி.பி. 1887 – 1916	ஆடி - பூராடம்
17.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	17ஆம் பட்டம்	நல்லாற்றூர்	கி.பி. 1916 – 1928	மாசி - அசுவினி
18.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	18ஆம் பட்டம்	சிதம்பரம்	கி.பி. 1928 – 1965	புரட்டாசி - ஆயில்யம்
19.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	19ஆம் பட்டம்	பொம்மையபாளையம்	கி.பி. 1965 – 2011	ஆனி - உத்திராடம்
20.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	20ஆம் பட்டம்	மயிலம்	கி.பி. 2011 முதல்	

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொருளடக்கம்

வ.எண்	தலைப்பு	பக்கம்
சித்தாந்த சிகாமணி நூல்		1
	விநாயகர் வணக்கம்	1
	பரசிவ வணக்கம்	1
	பராசக்தி வணக்கம்	2
	வசவதேவ வணக்கம்	2
	நூல் வரலாறு	2
	நூற் பெயர்	3
	அவை அடக்கம்	4
	ஆக்கியோன் பெயர்	4
	இரேணுகர் காதை	5

முதல்பரிச்சேதம்

1)	அங்கத்தலம் – பத்தத்தலம்		20
	1)	பிண்டத்தலம்	21
	2)	பிண்ட ஞானத் தலம்	23
	3)	சமுசார நீக்கத் தலம்	24
	4)	குருகாருணியத் தலம்	27
	5)	இலிங்க தாரணத் தலம்	30
	6)	விபூதி தாரணத் தலம்	39
	7)	உருத்திராக்க தாரணத் தலம்	46
	8)	பஞ்சாக்கர செபத் தலம்	49

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

	9)	பத்தித் தலம்	54
	10)	உபயத் தலம்	63
	11)	திரிவித சம்பத்தித் தலம்	64
	12)	சதுர் விதசாரத் தலம்	65
	13)	உபாதிதானத் தலம்	67
	14)	நிருபாதிக தானத் தலம்	68
	15)	சகசதானத் தலம்	68
2) மாகேசத் தலம்			70
	16)	மாகேச்சுரத் தலம்	71
	17)	இலிங்கநிட்டைத் தலம்	73
	18)	பூருவாச்சிரய நிரசன்த் தலம்	74
	19)	அத்துவித நிரசனத் தலம்	75
	20)	ஆவாகன நிரசனத் தலம்	77
	21)	அட்டமூர்த்தி நிரசனத் தலம்	78
	22)	சர்வகத நிரசனத் தலம்	80
	23)	சிவஜகந்மயத் தலம்	81
	24)	பத்த தேகிக தேவத் தலம்	83
3) பிரசாதித் தலம்			85
	25–1	பிரசாதித் தலம்	86
	26–2	குருமான்மியத் தலம்	87
	27–3	இலிங்கமான்மியத் தலம்	88
	28–4	சங்கம மான்மியத் தலம்	90

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

29–5 பத்தமான்மியத் தலம் 91
30–6 சரண மான்மியத் தலம் 93
31–7 பிரசாத மான்மியத் தலம் 95
4) பிராணலிங்கித் தலம் 96
32–1 பிராணலிங்கித் தலம் 98
33–2 பிராணலிங்கார்ச்சனத் தலம் 100
34–3 சிவயோக சமாதித் தலம் 101
35–4 இலிங்க நிசத் தலம் 104
36–5 அங்கலிங்கத் தலம் 106
5) சரணத் தலம் 108
37–1 சரணத் தலம் 109
38–2 தாமச நிரசனத் தலம் 110
39–3 நிர்த்தேசத் தலம் 112
40–4 சீல சம்பாதனத் தலம் 113
6) அயிக்கியத் தலம் 115
41–1 அயிக்கியத் தலம் 115
42–2 ஆசார சம்பத்தித் தலம் 117
43–3 ஏகபாசனத் தலம் 119
44–4 சகபோசனத் தலம் 120

இரண்டாவது பரிச்சேதம்

1) ஆசாரலிங்கத் தலம் 122
45–1 தீட்சாகுருத் தலம் 123

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

	46–2 சிட்சாகுருத் தலம்	124
	47–3 ஞானகுருத் தலம்	125
	48–4 கிரியாலிங்கத் தலம்	126
	49–5 பாவலிங்கத் தலம்	127
	50–6 ஞானலிங்கத் தலம்	128
	51–7 சுயத் தலம்	129
	52–8 சரத் தலம்	130
	53–9 பரத் தலம்	131
2) குருலிங்கத் தலம்		132
	54–1 கிரியாகமத் தலம்	133
	55–2 பாவாகமத் தலம்	135
	56–3 ஞானாகமத் தலம்	137
	57–4 சகாயத் தலம்	140
	58–5 அகாயத் தலம்	141
	59–6 பரகாயத் தலம்	143
	60–7 தருமாசாரத் தலம்	144
	61–8 பாவாசாரத் தலம்	146
	62–9 ஞானாசாரத் தலம்	148
3) சிவலிங்கத் தலம்		150
	63–1 காயாநுக்கிரகத் தலம்	150
	64–2 இந்திரியாநுக்கிரகத் தலம்	151
	65–3 பிராணாநுக்கிரகத் தலம்	153

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

66–4 காயார்ப்பிதத் தலம் 154

67–5 கரணார்ப்பிதத் தலம் 155

68–6 பாவார்ப்பிதத் தலம் 156

69–7 சீடத் தலம் 157

70–8 சிசுருடைத் தலம் 158

71–9 சேவியத் தலம் 160

4) ஜங்கமலிங்கத் தலம் 161

72–1 சீவான்மாத் தலம் 161

73–2 அந்தரான்மத் தலம் 165

74–3 பரமான்மத் தலம் 166

75–4 நிர்த்தேகாகமத் தலம் 168

76–5 நிர்ப்பாவாகமத் தலம் 170

77–6 நட்டாகமத் தலம் 171

78–7 ஆதிப்பிரசாதித் தலம் 173

79–8 அந்தியப்பிரசாதித் தலம் 174

80–9 சேவியப்பிரசாதித் தலம் 176

5) பிரசாதலிங்கத் தலம் 177

81–1 தீட்சாபாதோதகத் தலம் 178

82–2 சிட்சாபாதோதகத் தலம் 179

83–3 ஞானபாதோதகத் தலம் 181

84–4 கிரியாநிட்பத்தித் தலம் 182

85–5 பாவநிட்பத்தித் தலம் 183

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

86–6 ஞானநிட்பத்தித் தலம் 184
87–7 பிண்டாகாசத் தலம் 186
88–8 விந்தாகாசத் தலம் 188
89–9 மகதாகாசத் தலம் 189
90–10 கிரியாப்பிரகாசத் தலம் 192
91–11 பாவப்பிரசாதத் தலம் 193
92–12 ஞானப்பிரகாசத் தலம் 195
6) மகாலிங்கத் தலம் 196
93–1 சுவிகிருதப் பிரசாதத் தலம் 197
94–2 சிட்டோதனத் தலம் 198
95–3 சராசரலயத் தலம் 199
96–4 பாண்டத் தலம் 200
97–5 பாசநத் தலம் 201
98–6 அங்கலேபத் தலம் 202
99–7 சுபராஞ்ஞத் தலம் 203
100–8 பாவாபாவலயத் தலம் 203
101–9 ஞானசூனியத் தலம் 204
ஸ்ரீ ரேணுகாகஸ்த்ய சம்வாதம் 206
விபீஷணாபீஷ்டதானம் 208
ஸ்ரீ ரேணுகர் ஸ்ரீசைலம் அடைதல் 211
வாழ்த்துக் கவிகள் 213
மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடுகள் 214

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

19. சித்தாந்த சிகாமணி

பாயிரம்

விநாயக வணக்கம்

(கலி விருத்தம்)

மனவ னத்தில் மதம்எனும் யானையைச்
சினவி நிற்கும் திகழ்இள வெண்மதி
புனைநு தல்கண் புராரி அளித்துஅருள்
நனைக வுள்களி நாகுஇள வேழமே.

பரசிவ வணக்கம்

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

உலகுஎனும் ஓவியங்கள் திகழ்த்தும்ஒரு
படம்ஆகி ஒளிகள் எல்லாம்
இலகுபர ஒளியாகிச் சச்சிதா
நந்தமாய் ஏகம் ஆகிப்
பலகலைகள் பரப்பிரமம் பரசிவம்
மாலிங்கம்எனப் பகரா நின்ற
திலகநுதல் உமைகணவன் திருவடித்தா
மரைவணக்கம் செய்து வாழ்வாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பராசக்தி வணக்கம்

மாயைஎனும் மணல்கொடுஉலகு எனும்சிற்றில்
இழைத்துஆடும் வளமை யாளை
மூயமல இருள்இரிக்கும் செழுஞ்சுடரை
உயிர்கள்எல்லாம் முன்னம் ஈன்ற
தாயைஒரு பரசிவனைப் பெயராக்குஞ்
சமவாய சத்தி தன்னைத்
தூயஅறிவு ஆனந்த வடிவாளை
மலைமகளைத் தொழுதல் செய்வாம். 2

வசவதேவ வணக்கம்

எண்நிகழ்ந்த அண்டம்எல்லாம் வலம்புரிந்தது
எனஉமைமான் ஈன்ற வேழம்
தண்நிகழ்ந்த நறுங்கொன்றைச் சடைஒருவன்
தனைச்சூழ்ந்த தகைமை போல
மண்நிகழ்ந்த சிவசரணர் தமைஎல்லாம்
தொழும்தகைமை வாய்ப்ப எங்கள்
உள்நிகழ்ந்த வசவன்எனும் பெயர்உடையோன்
தனைவணங்கி உவகை கூர்வாம். 3

நூல் வரலாறு

ஓங்குபுகழ்ச் சித்தரா மேசன்என
ஒருகுரவன் உளன்அ வன்சேய்
தாங்குவிறல் சைவசிகா மணிமுத்தி
தேவன்அவன் தநயன் மாயை
நீங்குகுணக் குன்றுஅனைய சித்தநாதப்
பெயரோன் நிகழ்த்து அவன்பால்
வாங்குதிரைக் கடற்கண்மதி போல்சிவயோ
கிப்பெயரோன் வந்துஉ தித்தான். 4

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவபத்தி எனும்அமுத மொடுவிளங்கும்
சிவஞானத் திங்கள் ஈனும்
உவமிக்க அரியதிருப் பாற்கடலாம்
சிவயோகி உலகம் உய்ய
அவஉற்ற உளத்தினொடும் காமிகமே
முதலாய ஆக மங்கள்
நவைஅற்ற சிவபுரா ணங்கள் எனப்
பட்ட எல்லாம் நயந்து பார்த்து. 5

மறைநெறிகள் வழுவாமல் அயல்நெறிகள்
தடுமாற மதிஞர் எல்லாம்
அறிவுஅமைதி பெறவீர சைவநெறி
அனைத்தும்ஒருங்கு அமைந்து காண
நிறைவுதரும் ஆகமவே தங்கள்புரா
ணங்கள்தொறும் நெற்றி நாட்டத்து
இறைவன்உமை யொடுமுருகற்கு அருளியதாய்
அறிஞர்உளம் இசைவது ஆகி. 6

சங்கர சம் பிரதாயன் ஆய இரே
ணுகண்முனிவர் தங்கட்கு எல்லாம்
புங்கவன்ஆ கியகலய முனிக்கு உரைத்தது
ஆகி இவண் பொருந்தி ஒன்று
தங்கள்தலை யிட்ட ஒரு நூறுதலம்
புணர்வீர சைவ நூலை
இங்குஉரைசெய் தனன்அதனைத் தமிழ்ப்படுத்தி
முறைபிறழாது இயம்பல் உற்றேன். 7

நூற்பெயர்

முந்துஉறும் எச் சைவதந்திரங்களுக்கும்
விளங்குதனி முடியாய் வீர
தந்திரம்உத் தரம்ஆகித் தனக்குமேல்
இலாமையினால் சாற்றும் நாமம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நந்துஉறு சித் தாந்தசிகா மணி ஆகும்
சிவாத்துவித ஞான வாழ்வைப்
பந்தம்அறத் தரும் இதன்கண் திகழ்வீர
சைவர்மனம் பட்டு நிற்கும். 8

அவை அடக்கம்

. உலகில்மலி புகழ்படைத்த சிவயோகி
தனதுபேர் உணர்வி னாலே
மலைவுஅதுஅற அருளியஇச் சித்தாந்த
சிகாமணியில் மதிசெ லுத்திக்
கலைமுழுதும் உணர்ந்தவர்முன் யான்மொழியக்
கருதல் ஒரு கடுகு நாட்டி
அலைகடலைக் கடைந்துசுவை அமுதுஎடுப்பக்
கருதலொடு ஒப்புஆகும் அன்றே. 9

ஆக்கியோன் பெயர்

. தலம்குலவும் மலயம்அமர் கலய முனிக்கு
இரேணுகண்தண் ணளியால் ஈந்த
நலம்குலவு சித்தாந்த சிகாமணியைத்
தமிழ்க்கவியால் நன்கு செய்தான்
இலங்குதமிழ்க் கடலைஒரு நாவாயால்
கடந்து உலகம் இறைஞ்சாநின்ற
பொலம்கழல்எம் பெருந்தகையாம் சிவப்பிரகாச
ஐயன்எனும் பொருவு இலானே. 10

பாயிரம் - முற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இரேணுகர் காதை

பிரபஞ்ச உற்பத்தி

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

ஆதியில் அநாதி கன்மத்து
ஆர்உயிர்க்கு உலகம் ஆகச்
சேதநமயமாய் ஒன்றாம்
சித்தாந்த சிவன் தனாது
பேதம்இல் சத்தி யாலே
பெற்றதுஓர் மூர்த்தி எய்தி
மாதுஒரு பாகன் ஆகும்
மகேசனாய் வயங்கா நின்றான். 11

சந்திர மவுலி எம்மான்
சகம்எலாம் படைக்கும் முன்னம்
வந்துஉற இறைவன் ஆகும்
மலர்அயன் தன்னை நல்கி
அந்தம்இல் விச்சை எல்லாம்
அருளினன் அருளினாலே
முந்துஉறும் அயன் படைப்புத்
தொழில்இடை முயற்சி பெற்றான். 12

சங்கரன் ஆணை கொண்டு
சகம்புரி தொழிலில் புக்க
பங்கயன் மாயை மாலில்
பட்டு அளிக்குறும் உபாயம்
அங்கு உணர்கிலனாய் மீண்டும்
அரவுஅணி பெருமான் பாதச்
செங்கமலங்கள் போற்றி
நின்றுஇது செப்பல் உற்றான். 13

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

. தேவர்கள் தலைவ முக்கண்
செல்வயான் முதலாய் உள்ள
யாவையும் ஆக்க வல்ல
இறைவமுற்று உணர்ந்த மேலோய்
ஓவரும் மயலால் மாழ்கி
உணர்ந்திலேன் தமிய னேற்கு
மூவுல கினையும் ஆக்கும்
உபாயம்நீ மொழிதி என்றான். 14

. நான்முகன் இதனைக் கூற
நனைஅவிழ் கொன்றை வேணிக்
கூன்முகம் மதிஅ ணிந்த
கொழும்பவளக் குன்று அன்னான்
தான்முகம் மலர்ந்து உரைத்தான்
சகம்புரி வகையு ரைத்தும்
தேன்முகம் மலரின் மேலோன்
தெரிந்திலன் தியங்கிச் சொல்வான். 15

. உலக காரணப் படைப்பின்
உபாயம்நீ அருளி னாலே
பலமுறை உரைத்தும் நெஞ்சில்
பட்டதுஇன்று அமல நீமுன்
மலர்தலை உலகம் ஆக்கின்
மற்றுஅது கண்டு தேறி
இலகுஉற அடிய னேன்பின்
இயற்றுவல் என்று சொன்னான். 16

ஈசுவர சிருஷ்டி

. விதிஇது புகன்று நிற்ப
மின்அவிர் சடையில் கீற்று
மதிபுனை கடவுள் தன்போல்
வளர்ஒளி வடிவர் ஆகி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முதிர்அறிவு உடையர்ஆகி
முழுதையும் அளித்து அழிக்கும்
அதிசய நிலை அடைந்த
கணங்களை அளித்தான் முன்னர். 17

சாற்றுஉறும் கணங்கள் தம்முள்
இரேணுக தாருகப் பேர்
ஏற்றுஉளர் இருவர் எங்கள்
ஈசனுக்கு இனியர் அன்னோர்
ஆற்றலை யாவரானும்
அறைந்திடற்கு அரியர்மாயை
மாற்றிடும் வலியர் விச்சை
யாவையும் வல்லர் அம்மா. 18

தெளிதரும் உளத்தர் மாறாச்
சிவானந்த அமுதம் உண்டு
களிதரு நலத்தர் கல்விக்
கடல்கரை கண்டோர் ஞான
ஒளியினர் வேத சாரம்
உணர்ந்தவர் அகந்தை இல்லோர்
விளிவுஉற விடயம் ஐந்தும்
எளிதுஎன வென்ற வீரர். 19

அனையவர் தம்மை நோக்கி
ஆலயத்து உள்இ லங்கும்
புனைமணி வாயில் காப்புப்
புரிசடைக் கடவுள் நல்க
இனிதுஎன அவரும் ஏற்றுஅவ்
ஏவலின் சிறந்தோர் ஆகித்
தனிவிழி நுதல்இ மைக்கும்
சங்கரன் பால்இ ருந்தார். 20

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கயிலைச் சிறப்பு

கலிநிலைத் துறை

வேதன் இந்திரன் செங்கண்மால் புன்புகழ் மேவி
ஓதி மம் களிறு உவணன் ஆ யவர்தமை உயர்த்த
ஆதி அம்பிகை நாயகன் பெரும்புகழ் அவனை
காதல் கொண்டு தாங்குஉற்றது போன்றது கயிலை. 21

தெள்ளு சோதிஅம் கயிலைமால் வரையினில் சிறிது
வெள்ளி தான்கொடு திசைமுகக் கம்மியன் விரகால்
அள்ளி வான்இருள் விழுங்குவான் அமைத்தது ஒன்று அன்றோ
எள்ளு றாமதிஎன்பது இவ் வுல கங்கள் எல்லாம். 22

சபாமண்டபச் சிறப்பு

அன்ன மாகயி லாயம்ஓர் அருமறை ஆகச்
சென்னி மாமொழி ஆகும்ஓர் செம்பொனால் இயன்ற
தன்னை நேர்மணி மண்டபத்து அரியணை தன்னில்
முன்னம் ஓர்பகல் உமையொடு முதல்வன்வீற் றிருந்தான். 23

மகாசபை கூடுதல்

இந்தி ரன்சுரர் அரிஅயன் இயக்கர்கந் தருவர்
சந்தி ரன்கதிர் உரகர் சித்தர்கள் விறல்தகுவர்
முந்து றும் கண நாயகர் முனிவரர் வசுக்கள்
வந்து கண்டனர் உமையொடு பரமனை மகிழ்ந்து. 24

கலிவிருத்தம்

பாடுவர் சிலர்சிலர் பணிவர் முன்னர்நின்று
ஆடுவர் சிலர்சிலர் ஆர்ப்பர் மென்மலர்
சூடுவர் சிலர்சிலர் துதிப்பர் அன்பினால்
வாடுவர் சிலர்சிலர் மகிழ்ந்து வாழ்த்துவார். 25

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இன்னணம் இவர்பல இயற்றல் கண்டுஉமை
தன்னொடும் அரியணை தன்னில் மேவிய
மின்அவிர் சடையினன் விளங்கு பேரவை
முன்உற நிகழ்ந்ததுஓர் முறைமை கூறுவாம். 26

அண்டர்கள் தமக்குஎலாம் அரிய தன்கவுள்
கொண்டருள் மெல்லிலை கொடுப்ப நூற்கடல்
கண்டிடும் இரேணுக கணேசன் என்பவற்
பண்டுறும் உவகையால் பரன்அ ழைத்தனன். 27

அழைத்தருள் உவகையால் அவ்வி ரேணுகன்
தழைத்துஉயர் கல்வியம் தாரு கன்தனைப்
பிழைத்தனன் கடந்துநம் வினைபி ழைப்பவே
மழைத்திரு மிடற்றினோன் மருங்கு வந்தனன். 28

மிடைந்திடு தனது பேர் அவையில் மெய் உணர்வு
அடைந்திடு தாருக நாமத்து அன்பனை
கடந்துறும் இரேணுக கணேசர் பார்த்து இது
மடங்கல்அம் தவிசு உறை வள்ளல் கூறுவான். 29

மதிஉறும் இரேணுக! மன்னு பேரவை
இதில்எமது அடிமையாய் இலங்கு தாருகற்
கதிதரு காலினால் கடக்கப் பட்டது என்
விதிதவ றினை எனா விளம்பல் மேயினான். 30

சிவபக்தர்கள் மகிமை

கருதும்நம் பத்தரைக் கடத்தல் கேட்டினுக்கு
ஒருதனி மூலமாய் உடம்பின் ஆயுளும்
அரிதுஉறு செல்வமும் குலமும் அன்றுதாம்
பெரிதுஉறு கீர்த்தியும் பெயர்த்து அழிக்குமால். 31

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கழிந்துஉள மயலின் மார்க் கண்டன் ஆகும் என்
தொழும்பு உடை யவனை முன் தொடர்ந்து இகழ்ந்துஎனது
எழும் கழல் உதையினால் இன்றும் உள்உறு
தழும்புஉறும் உடலினன் தண்டன் ஆயினான். 32

தறிபவம் மரம்உடைச் சங்கு கண்ணனும்
அறிவுஉணர் பிருகுவும் ஆம் என் தொண்டரால்
பறிபடு தலையன்ஆய்ப் பவங்கள் பத்தினும்
மறிபடும் மால்என மதித்திடாய் கொலோ. 33

திருமறு மார்பன் முன் செய்ய என் தொழும்பு
உரம்உறு ததீசியால் ஒடிந்த நேமியான்
பொரும்மறம் இழந்தனன் புகழ்க் கணேசரால்
வரும் மறிமுகமொடு தக்கன் மாழ்கினான். 34

தகும் செயல் உடைய நம் சுவேதன் தன்னைமுன்
இகழ்ந்தனன் மறலி எம் மால்எ ரிந்தனன்
புகன்றிடின் இன்னும்நம் பொருவுஇல் தொண்டரால்
உகும் திறல் உடையவர் உளர்அ நேகரே. 35

இரேணுகர் அவதரிக்கும் காரணம்

சாதம் இல் தாருகன் தனைக்க டந்தனை
ஆதலின் இரேணுக வரவு தாங்குறு
மேதினி தனில் ஒரு பிறப்பு மேவு என
ஓதினன் அடியவர்க்கு உதவி செய்பவன். 36

அறம் தனி முதல்வ நீ அழைக்கும் ஓகைதான்
பெறப்பெறும் அடியனேன் பேதைத் தன்மையால்
சிறப்புஉறு தாருகன் கடந்த தீமையைப்
பொறுத்துஅருள் என அடி பணிந்து போற்றினான். 37

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அரும் துயர் வடிவமாய் அகன்ற மண்ணிடை
வருந்தஉறு பிறவியை மன்னி நின்னையான்
பிரிந்தனன் அலமரும் பெற்றி என் கொலோ
திருந்துஅடி யவர் இடர் தீர்க்கும் எந்தையே. 38

மானிடப் பிறவியை மயக்கும் மண்ணிடை
யான்எடுத் திடாவகை அருள்செய் என்றலும்
தேன் எடுத்து இதழ் அவிழ் செய்ய கொன்றையோன்
தான் உளத்து அருளினால் சாற்றல் மேயினான். 39

என்நிகர் இரேணுக இன்று மண்ணிடைத்
துன்னுறு பிறவியால் துயரம் எய்தலை
என் அடியவர் தமக்கு எவ்இடத்தினும்
இன்னல் வந்து அடைகுவது இல்லை இல்லையே. 40

கண்டவர் தமக்கு எலாம் கயிலை காட்டுறும்
வண்தவர் பருப்பத மலையைத் தென்திசை
கொண்டுஉள தெலுங்கினில் கொல்லி பாகம் என்று
ஒள்தலம் ஒன்று உளது உரைப்பின் ஆயிடை 41

என்உரு ஆய சோமேசன் என்ன ஓர்
தன்நிகர் பரசிவலிங்கம் தங்குமால்
அன்னதில் மானிடப் பிறவி அன்றியே
மன்னுதி உலகுஎலாம் வியக்கும் வண்ணமே. 42

மறையொடு மறைமுடி மதம்அதுஆகும் என்
நிறையும்அத் துவித நூல் நிலத்தில் யாவரும்
அறிவுஉற மொழிதி என் அடியர் மேன்மையும்
குறைவுஇல்என் மேன்மையும் கொடுத்தி எங்கணும். 43

இரேணுகர் உலகில் வருதல்

அம்கணன் இவ்வகை அருள மெல்அடிப்
பங்கயம் முடிமிசைபட இறைஞ்சியே
எம் கணநாயகன் விடைகொண்டு எய்தினான்
பொங்குஒலி உததிசூழ் புவியை நோக்கியே. 44

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இரேணுகர் அவதரித்த தலம்

எய்திய இரேணுகன் இறைவன் கூறிய
மெய்திகழ் இலிங்கமெய் மேவித் தோன்றினான்
கொய்துணர் மலிபொழில் கொல்லி பாகம் வாழ்
செய்தவம் உடையர்தாம் சென்று கண்டனர். 45

இரேணுகர் அவதாரம்

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

நீற்றுஒளி விளங்கக் கண்டி
நிறைஅணி அணிந்து வேணி
தோற்ற அழகு இலங்க ஞானச்
சோதியின் வயிற்றில் தோன்றிப்
போற்ற இளம் கதிர் போல் நின்ற
புண்ணியன் தன்னைக் கண்டோர்
ஆற்றவும் வியப்பு உற்றோராய்
அடிஇணை பணிந்து சொல்வார். 46

சோதி மாலிங்கம் தன்னில்
தோன்றும்நீ யாரை என்ன
ஆதியாம் இறைவன் பாங்கர்
அமர்தரும் இரேணுகன் யான்
வேதநாயகன்வி டுப்ப
விடைகொண்டு இங்கு எய்தி னேன் என்று
ஓதினான் வீர சைவத்து
ஊதியம் ஆகி நின்றான். 47

இரேணுகர் பொதிகை அடைதல்

விளங்குறு சிவ சித் தாந்த
மென்பயிர் தன்னை வேறாய்
உளம்கவல் சயின புத்தர்
ஆதியர் உணர்வு இல் நூல்ஆம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வளர்ந்துஎழு களை களைந்து
வளர்ப்பதற்கு உற்றேன் நான் என்று
இளம்கதிர் அனையான் வானத்து
எழுந்துபோய் மலயத்து உற்றான். 48

பொதிகை மலைச் சிறப்பு

ஓங்கிய விந்த வெற்பு அங்கு
ஒருகரம் சுமக்கல் ஆற்றாது
ஏங்குபு பிலத்தில் வீழக்
கண்ட அவ் விருடி தன்னைத்
தீங்குஅறும் முனிவர் எண்ணி
லோரொடு சிகரம் தன்னில்
தாங்கிய மலய வெற்பின்
தன்மை யார் சாற்ற வல்லார்? 49

மலயசம் என்றும் மிக்க
மலயமாருதம்ஆம் என்றும்
உலகுஒரு மூன்றி னும்தன்
ஓங்குறு புகழ் சென்று எய்த
நலம்மலி சந்தும் காலும்
நல்கிய அதுபோல் தன்பேர்
இலகுறு மலைக ளுள்ஒன்
றேனும்ஈந் ததுதான் உண்டோ. 50

இரேணுகர் அகத்தியரைக் காணுதல்

அப்பெரு மலையம் தன்னை
அடைந்துஅ கத்தியன் இருக்கும்
செப்பு அரும் வளம் ம லிந்த
இடத்தினைச் சென்றுகண் ணுற்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒப்புஅரும் உவகை கூர்ந்த
உளத்தொடு கணங்கள் கோமான்
எய்ப்புஅறும் முனிவ ரோடு அங்கு
இருந்துள முனியைக் கண்டார். 51

வந்துஎதிர் நின்ற ஞான
வாரியைக் கண்ணில் கண்டு
சந்திரமவுலி தன்பால்
சார்ந்துஉள இரேணு கப்பேர்
முந்துஉறுபவன் ஆம் என்று
முனிவனும் உணர்வால் கண்டு
சிந்தனை மகிழ்ந்து எழுந்து
திருவடித் தலத்தில் வீழ்ந்தான். 52

பின்னர்அங்கு அவனைத் தான்ஓர்
பெரும் தவிசு உறஇ ருத்தித்
தன்நிகர் அமல உலோபா
முத்திரை தந்த நீரால்
பொன்அடி விளக்கி நூலில்
புகல்முறை அருச்சித்து ஏத்தி
அன்னவன் அருகு வேறுஓர்
ஆதனத்து அமர்ந்து இருந்தான். 53

இருந்துள முனியை நோக்கி
இரேணுகன் நன்றாய் நின்பால்
அரும்தவம் நடந்ததே என்று
அருளினால் வினாய் நினக்குப்
பொருந்துறும் இடையூறு எண்ணிப்
புரிபவர் யாவர் என்று
திருந்திய உளத்தன் ஆகிச்
செப்புவன் உவமை மாற்றம். 54

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விந்தமும் நின்னால் கீழ்போய்
வீழ்ந்தது நகுடன் நின்னால்
முந்துஅரவு உருவம் ஆனான்
முழங்கு வெண் திரை சுருட்டும்
சிந்துவும் அருந்தப் பட்டுச்
சேறலாது ஒழிந்தது அன்று
வந்து ஒரு தகுவன் உன்தன்
வயிற்றிடை அற்றான் அன்றே. 55

செங்கண்மால் விடையான் நல்கும்
சிவதரு மோத்த ரத்தை
எங்கள்மா முருகன் நாமத்து
இலங்குஇலை வேலோன் நல்க
அம்கண்மா ஞாலம் உய்யப்
பெற்றனை அரும் தவத்தோர்
தங்கள் மாநிதி அனாய் உன்
தனை நிகர்பவர் யார் சொல்லாய். 56

. என்றுஉரை செய்ய எங்கள்
இரேணுகன் முனிவன் கேளா
நின் தனிவரவு எனக்கே
நேர்தலால் தவத்தோன் யானே
நன்றிகள் அனைத்தும் உள்ளேன்
ஞானநல் விழியும் பெற்றேன்
வென்றனன் பலமும் மேல்ஆம்
வீடு அடைந்து உய்ந்தேன் யானே. 57

புண்ணிய மூர்த்தி நீ என்
பொருட்டு இவண் அடைந்தாய் நின்னைக்
கண்ணுறில் வினைகள் எல்லாம்
கதிர்எதிர்ப் பனியை ஒக்கும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பண்ணிய தவம் நிறைந்து
பயன்தரு காலத்து அல்லால்
அண்ணல்உன் வரவு எவர்க்கும்
அரிது அரிது என்று சொல்வான். 58

பற்பல கலைஉ ணர்ந்தும்
பற்றிலன் துணிவு மாறா
உற்பவம் ஒழியும் வண்ணம்
உயிர் சிவத்து ஏகம் ஆகும்
பொற்பு அருளுவதாய் வேதப்
பொருள்படு சிவ சித் தாந்தம்
சிற்பர யோகி நின்னால்
தெளிந்திட விழைவல் என்றான். 59

இரேணுகர் காதை முற்றும்.

உபதேசம்

இரேணுகர் அகத்தியருக்கு உபதேசம் செய்தல்

கலிவிருத்தம்

முனிவன் இன்ன மொழிய உளங்கொளா
இனியன் என்னும் இரேணுகன் முக்கணான்
தனை நினைந்து சமாதி அடைந்துபின்
நினைவு அடைந்து நிகழ்த்துதல் மேயினான். 60

அரும்தவத்தர் அரச உனக்கு இவண்
திருந்து மெய்ச் சிவ ஞான தெளிவினைப்
பொருந்தும் மிக்க சித் தாந்தம் புகலுதும்
ஒருங்கு சித்தத்து உவந்து செவிக்கொளே. 61

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பேத இச்சையின் பின்னப் பொருள்களும்
ஓது பற்பல ஆய ஒழுக்கமும்
ஆதல் பெற்றிடும் ஆசு இல் சித் தாந்தநூல்
மாத வத்தர் வழுத்தும் முனிவனே. 62

ஆய்ஞ்ச சாங்கியம் ஆசுஅறு யோகம் நல்
பாஞ்ச ராத்திரம் பாசுபதத்தொடு
வாய்ஞ்ச வேதம் இவை பிரமாணமாய்த்
தாம்செய் வாதத்தில் தள்ளுவ அல்லவாம். 63

சாங்கி ஆதிகட்கு என்றும் தலைமையாம்
ஓங்கு மா மறையும் மறையைத் தொடர்ந்து
ஈங்கு நின்ற தனால் அவை யாவையும்
தாங்கும் ஞானத் தகைமைய என்பவே. 64

யோக சாங்கியம் ஓர் ஐந்து இராத்திரம்
ஆகும் வேதத்து ஒருபுடை அன்னபோல்
ஏக தேசம் உறா மறை எங்கும்ஆம்
மாகம் வீழ் மலை மாதவ சைவமே. 65

ஓங்கும் வேதத்து ஒருபுடை ஆகிய
சாங்கிய ஆதியில் சைவம் சிறந்ததாய்த்
தீங்குஇல் வேதம் எலாம் தொடர் செய்கையால்
நீங்கு பாசம் முனிவ நிலைக்குமால். 66

பிரமம் ஓதும் சித்தாந்தப் பெயர்பெறு
தரும சைவம் என் தந்திரம் நான்மறைப்
பொருளது ஆகலின் அம்மறை போலவே
வரம தாம் பிர மாணம் எனப்படும். 67

கண்ணு தல்பெருங் காரண னால் பல
எண்ணும் ஆகமம் சைவம் இலாகுளம்
பண்ணு பாசுபதமொடு சோமம் என்று
அண்ணல் மாமுனி அன்று அறையப்படும். 68

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓது வாமம் ஒழிவு அறும் தக்கணம்
மேதை ஆகும் மிசிரம் முனிவர
தீதுஇ லாதசித்தாந்தம் எனவரு
பேதம் நான்கு பெறும் புகல் சைவமே. 69

வாமம் சத்தி பரஞ்சொல் வயிரவர்க்கு
ஆம் அம் தக்கணம் அம்மி சிரத்து எழு
நாமம் கொண்டு உறு மாதர் நணுகுவார்
ஏமம் செய் மறை யில் மதம் அற்றதே. 70

மறைஉ ரைக்கும் தருமம் வகுத்தலால்
புறம தத்தோடு நின்று பொருதலால்
திறம்அ டுத்தசித் தாந்த சிவாகமம்
அறம் உரைக்கும் மறைமதம் ஆகுமால். 71

செப்பும் வேத சித் தாந்தம் அபேதமாம்
ஒப்புஇல் மெய்ப்பொருள் ஒன்றே உரைத்தலால்
இப் பெ ரும் சொற் கலைகள் இரண்டையும்
வைப்பர் ஒப்பு என மானத்து அறிஞரே. 72

வீரசைவ விளக்கம்

ஏகன் உற்று அருள் காமிகமே முதல்
ஆக மத்தில் நிறைந்திடும் உத்தர
பாகம் முற்றும் பகர் வீர சைவம்ஆம்
சோகம் அற்றுஉயர் தொல்மதம் தோன்றுமால். 73

சித்தம் ஆகும் சிவமயம் ஆகிய
வித்தை யூடு விசேடம்அது ஆகியே
எத்தினால் இங்கு இரமிப்பன் அன்னவன்
பொய்த்திடாத புகழ் வீர சைவனே. 74

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தீது அகன்ற சிவசீவ ஐக்கியமாம்
வீதரும் பெரு வித்தையில் நன்குஉறச்
சாதம் இன்றி ரமிக்கும் அச் சைவன் மற்று
ஓதில் அன்னோன் உயர்வீர சைவனே. 75

வித்தை யூடு விரவிய மாயையைக்
கைத்து நாய் எனக் கண்டு விடுதலை
வைத்த ஆதி வருணம் உணர்த்துறும்
உத்தியால் உயர் வீர மா கேசன் ஆம். 76

வேறு

அரிய வே தாந்தத்தின் ஆகும் ஞானமே
மருவுஅரும் வித்தை என்று உரைப்பர் மற்று அதில்
விரவினோன் யாவன் மற்று அனையன் வீரன் என்று
உரைதரு கிற்பர் மெய் உணர்ந்து உளோர்களே. 77

உள்புறம் பூசனை உடையர் சைவரும்
திட்பமா யேசரும் ஆவர் தேர்ந்திடில்
கொட்புஅறு சிவன்அரன் போலக் கூறிய
பெட்பு உறும் அவர்களும் பின்னம் ஆயிடார். 78

மிறைஅரும் சைவர் மெய்ஞ்ஞான வேள்வியும்
கறையில் மா யேசர் ஒண் கரும வேள்வியும்
பெறுநர் என்று உரைத்திடும் பெற்றி யால் அகம்
புறம் உறு நெறியினர் புகன்றுளோர்களே. 79

விலகுறு பலநெறிவீர சைவம்தாம்
மலைவுஅறு பத்தன்முன் வழக்க பேதமும்
தலநெறி விபேதமும் தரிக்கும் தன்மையால்
இலகுவர் அறுவகை யினர் என்று எண்ணவே. 80

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தலத்தொடு பலவகைத் தருமம் ஆதலால்
இலக்கு அதிகாரிகள் பேதம் எய்தலால்
விலக்கு அரும் அறிஞராம் வீர சைவர்தம்
கலைத்திறம் அதுவும் ஓர் ஆறு காண்டமாம். 81

உபதேசம் - முற்றும்.

முதல் பரிச்சேதம்

அங்கத்தலம்

(இதன் பிரிவு)

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஆதிதனில் அரும் பத்தத் தலம்மாகே
சத்தலம்பின் அடுக்கும் பின்னர்
சாதம் உறும் பிரசாதித் தலம்அதன்பின்
பிராணலிங்கித் தலமா கும்பின்
போது சர ணத் தலம்ஆ றாவது அயிக்-
கியத்தலமாம்புகன்ற அவற்றுள்
மாதவ முன் புஉறுபத்தத் தலமொடுஅதன்
திறம் உரைத்தும் மகிழ்ந்து கேண்மோ. 82

1-ஆவது பத்தத்தலம்

இதன்உட்பிரிவு

பரசிவபத்தியுளன் எவன் அவனே
பத்தன் எனப் படுவன் அன்னோன்
தருமம் உரை செய்திடுதல் தலம் ஆகும்
அதன் திறத்த தலம்மூ ஐந்துஆம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நிரையின்அவை பிண்டம் அதன் ஞானமொடு
சமுசார நீக்கம் ஆசான்
அருள் இலிங்கம் நீறுமணி முறைதரித்தல்
அஞ்சுஎழுத்தும் அறிந்து கூறல். 83

பத்திநெறி குருலிங்க வந்தனை சங்
கமபூசை பகர்ந்த அன்னோர்
வைத்த பிர சாத உணவு அவரிடத்தில்
செயும் தான வகைஉ பாதி
மெய்த்த நிரு பாதியொடு சகசம் என
மூதறிஞர் விளம்பா நின்ற
இத்தலத்தில் வருநெறிகள் அனைத்தும் இயற்
றுதல் பத்தர்க்கு இயல்பு மாதோ. 84

ஓம் சிவாய நம:

முதலாவது

1. பிண்டத்தலம்

பண்டுஒ ராயிரம் பிறவியில் பயின்ற புண்ணியத்தால்
மண்டு தீவினைப் பரப்பு அறப் புனித மாமனத்தைக்
கொண்ட தேகியே கடல்குடித் துஉயர்குறு முனிவ
பிண்ட நாமம் உற் றிடும் என அறைகுவர் பெரியோர்.85

உலகு இறந்து சிந் மய அவிகாரியாய் ஒளியாய்
இலகுறும் பரசிவ ன்தன துஅம்சமாய் இருந்த
அலகுஇ றந்துஉள சீவர்கள் அநாதியாம் அவித்தை
மலம்உ றும்பரி சால்பல பிறவியின் வருவார். 86

அனையர் நெஞ்சிடை இயக்கும் அம் மயேசன் உற்று அருள்வன்
பனிய இந்து காந்தத்தினில் புனல் கதிர்ப் பளிங்கில்
கனலும் வெவ்அழல் வித்தினில் முளை எனக் கலந்து
முனைவர் சிங்கம் என்று உரைத்திட மலையொடுமுனிவோய். 87

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வெற்புஎ ழும்கதி ரிடத்தில் விம்பப் பதி விம்பம்
உற்ப வம் பெறு மாறுஎன ஒரு பிர மத்தில்
முன்ப கர்ந்திடு சீவனோ டுஈசன்ஆம் முறைமை
கற்பி தம்பெறும் என்பர் பல் கலைநெறி கற்றோர். 88

அறிவ தே வடி வு ஆம்பர தத்துவம் அதனில்
நிறைவ தாகிய பிரேரகத்துவமொடு நிலைத்த
மறிவுஇல் போத்துருத்துவம் மிகு போக்கியம் வருமால்
குறைவுஇ லாது எழும் முக்குண பேதமே கொண்டு. 89

மடிவு இலாத முக்குண வடிவு ஆகிய மாயை
முடிவுஇ லாத மெய்ச் சிவத்துஉறும் அக்குணம் மூன்றும்
விடமம் மேவுற விளம்புமுப் பொருள்பெயர் விரியும்
கடிவுஇ லா நிலைப் பிரமம் ஆம் ஒரு பொருள் கண்ணே. 90

தக்க சத்துவ உபாதிகொள் பிரம சைதந்யம்
ஒக்க ஈசனாம் சத்துவ ரசோ மயம் உயிராம்
மிக்க தாமதம் உடையதே போக்கிய விளைவுஆம்
இக்க ணக்கில்முப் பொருளும் வந்து உறும் சிவத்து இசைந்து. 91

சுத்தம் என்றுஉள உபாதியில் தோய்ந்திடும் ஈசன்
மெய்த்தி டும் பதி யாகிய பிரேரகன் மிசிரம்
உய்த்த போத்துரு பசு என அறைவர்பே ருணர்வோன்
அத்தன் அவ்வுயிர் சிற்றுணர்வு உடையது என்று அறியே 92

மிகுதி கொள்மறை உணர்வதுஅவ் வியர்த்தமாம் பெயர்கொள்
பகுதி நண்ணினர்க்கு அமோககா ரணிஎனும் பரையே
தகுதி கொண்டிடும் சுத்தமாம் அசுத்தமும் சாற்றின்
தொகுதி கொண்டிடும் மோக கா ரணிஎனத் துணியே. 93

மாயை கொண்டுஇறை பற்பல மூர்த்திகள் மருவும்
தூயது அன்றெனும் அவித்தையால் தோன்றுவர் பலராய்
ஏய சீவர்கள் அநாதியே முத்தன்அவ் ஈசன்
தீய பந்தனை அநாதியே உற்றுளர் சீவர். 94

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பரம ஞானம்அற்று அநாதியாம் பாசம்உற்று அநாதி
கரும ஏதுவால் அடுத்துள காயங்கள் மருவி
மிருகம் ஆதியாம் பற்பல பிறவியின் விரவித்
தெரும ரும் சுழன் றிடும் பெருந் திகிரிபோல் சீவன். 95

சாதி ஆயுவோடு உணவது தரும் விட மத்திற்கு
ஏது வாய்உறும் கருமம் எந் திரம்எனச் சுழல்வோர்க்கு
ஆதி யாம் இறை இயக்குவோ னாய்க்கரி யாகிப்
போத கம் புரிந்து அருளும்நன் னெறியினைப்
பொருந்தி. 96

கூறு சீவனும் வினைபரி பாகமே கொண்டு
மாறு மாமல வாதனை மருவினோன் ஆகி
ஆறு மாமுடி புனைந்தருள் பரசிவன் அருளின்
பேறு கூடுறச் சுத்தமாம் மனமொடு பிறக்கும். 97

பாகம் ஆகிய நல்வினைப் பயன்கொடு சுத்தம்
ஆகும் மாமன முன்இடத்து அங்கணன் அருளால்
ஏக மாம்சிவ பத்தி தோன் றுறும் அவன் ஈற்றுத்
தேக மோடு நல் பிண்டம்என் பெயர்கொடு செறியும். 98

பிண்டத்தலம் - முற்றும்.

ஓம் மஹேஸ்வராய நம:

இரண்டாவது

2. பிண்டஞானத் தலம்

உற்றிடும் உடல்உயிர் உணர்வி வேகமே
பெற்றவன் எவனவன் பிண்ட ஞானி என்று
அற்றமது அறும்மலை அமர்ந்த மாதவ
கற்றறி புலவர்மெய் கழறு வார்அரோ. 99

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உடல்உயிர் எனும்உல காய தன்பொறி
அடல்உயிர் என்னும் மற் றொருவன் அன்றியே
புடைவரு புத்தியே என்னும் புத்தன் இவ்
விடலுறும் இவைகள் ஆன் மாவின் வேறவாம். 100

உயிரின் வே றாகிநின்று உணரப் பட்டிடுஞ்
செயிர்உறும் உடலொடு இந்திரிய புத்தியின்
அயல்விழி வரிய ஆன் மாவுண் டாம் என
நயமுடன் உணர்பவன் பிண்ட ஞானியே. 101

வினைவழி திரிதரு மெய்யும் வேறதாய்
நினைவுஅரு நித்தஆன் மாவும் நித்தமாய்
அனையஆன் மாவின் வே றுஆய ஈசனும்
பினம்உற அறிபவன் பிண்ட ஞானியே. 102

பிண்டஞானத்தலம் - முற்றும்.

ஓம் சம்பவே நம:

மூன்றாவது

3. சமுசார நீக்கத் தலம்

கலிவிருத்தம்

சுத்தம் அதுஉறுமனம் தோன்றும் நித்தியா
நித்திய விவேகிபால் நின்ற வாதனா
சத்தியின் மிகுசமு சாரம் விட்டுஒழி
புத்திவந்து உறும்எனப் புகல்வர் கற்றுளார். 103

பெண்டு எழு வாய்தரு பேறு இமைப்பினில்
விண்டிடும் இம்மையும் மேய புண்ணியம்
உண்டுஒழி துயர்முதல் உறுது றக்கமும்
கண்டுஎவர் விரும்புவார் கற்று உளோரினே. 104

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிறந்தவர்க்கு உண்மையே பெறும் இ றப்பும்மற்று
அறிந்தவர்க்கு அன்னதே பிறப்பும் இவ்வகை
செறிந்துள பிறப்புடன் இறப்பில் சீவனும்
அறிந்திடு சகடமே போல வந்துறும். 105

மீனொடு கமடமே வெண்பற் பன்றி மா
மானிட அரிமுத லாக வந்துள
ஏனைய பிறப்பினும் எய்தும் மாயவன்
தானும் அம் மரணநோய் தள்ள வல்லனோ. 106

ஆவிமுன் வினைவசத்து அந்த ணாதியாய்
மேவுறு சாதியின் விரவித் தோன்றியே
தாவுற அடரும்முத் தாப அங்கியால்
வேவுறு நிலைமையாம் விளம்ப வேண்டுமோ. 107

பொய்த்திடா துஅடையுறும் வினையிற் போதரும்
அத்தியான் மிக முத லாய வெந்துயர்க்
கொத்தினால் மிகும்இடர் கொண்டு ளோர்தமக்கு
எய்த்திடாது இமைதல்எவ் விடத்து உண் டாகுமோ. 108

ஆதியத் துஆன்மிகம் பவுதி கம் பின் ஆம்
ஓதுதெய் வீகம்மூன்று ஆவ தாகுமாற்
போதும் அத் தியான்மிகம் புறம்உட் கொண்டுஇரு
பேதம்உற் றிடும்எனப் பேசு வார்அரோ. 109

வளிமுத லனதர வரல் பு றத்ததாம்
உளின்அது மடிவில் கா மாதி உய்க்குதல்
களிஅரசு ஆதிநோய் பவுதி கம் கருது
அளிஇடர் முதல தெய் வீகம் ஆகுமால். 110

இனைய வெந்துயர் பலஇசைந்து கட்டுறும்
வினையொடு திரிதரும் உயிர்க்கு விண்ணிடை
எனினும்இம் மண்ணிடை எனினும் ஓர்கணம்
துனியறும் படி சிறு சுகமும் இன்று அரோ. 111

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மின்னினும் அலையினும் விளக்குள ழுஞ்சிகை
தன்னினும் நிலைஅறத் தபுசெல் வத்தினை
மன்உறு பொருள்என மதிப்ப ரோகணம்
என்னினும் அறிஞரோடு இருந்து ளோருமே. 112

மலசல நிறைதரு கடத்தை வன்துயர்
அலைபடு துரும்பினை அழியும் மின்னினும்
நிலையறும் இவ்வுடல் தன்னை நிந்தைசெய்
புலைமனை தன்னையார் பொருந்து வார்களே. 113

நித்தியா நந்தசிற் சொரூபம் நின்றிட
மித்தையாம் இயல்புடைத் துயர வீடுஎன
வைத்த ஆ கத்தினை மகிழ்ந்து இருந்திடும்
புத்தியார் செய்குவர் புலவர் தம்மினே. 114

ஓதியான் இடர்தரும் உடம்பில் மக்களில்
மாதரில் உறவினில் மற்று ளோர் தமில்
கோதுறு தனத்தினில் குலத்தில் போக்குறு
காதலில் அநித்தியம் காண்பன் என்றுமே. 115

பொறிகளில் விரத்தியாய்ப் பொருவில் தம்மையே
அறிவுற விழைவுடை அறிஞர்க்கு ஆழ்துயர்
மறிவுறு குடும்பநோய் மாற்றும் ஏதுவில்
செறிவுறும் உளம்எனச் செப்பு வார்அரோ. 116

ஆசஅறு மனமுடன் அநித்த நித்தமும்
தேசுஉற உணர்ந்துநல் தெய்வ வாழ்வினும்
நேசம்அது அகன்றுஉள நெறியி னோன்இடைப்
பாசம்அது அறுசிவ பத்தி தோன்றுமால். 117

சமுசாரநீக்கத்தலம் – முற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் பிநாகிநே நம:

நான்காவது

(4) குருகாருணியத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

மலர்தலை உலகம் எல்லாம்
மலிபெரும் புகழொடு ஒன்றி
இலன்என இவறல் மோகம்
இரித்துத் தத் துவம்உ ணர்ந்து
புலநெறி கடந்து சாந்தம்
பொருந்திச்சித் தாந்த மோடு
பலகலை தெரிவுற்று ஐயம்
பாற்றிட வல்ல னாகி. 118

அறநெறி வாய்மை மேவி
ஆரிய குலத்தால் போந்த
முறைநெறி ஒழுக்கம் எய்தி
முத்திதே யத்தன் ஆகிப்
பொறையொடு பொருந்தி அக்க
மணிதிகழ் பூதி யென்று
நிறைவுற அணிந்து இலிங்க
நிலைபெற உடல்த ரித்து. 119

அகத்துறு தியானம் மேவி
அருச்சனை புரிவோன் ஆகி
உகப்புறும் அங்க லிங்க
யோக தத் துவம் உணர்ந்தே
இகப்புஅறு தலங்கள் ஓர்வுற்று
எய்தி அத் துவித ஞானம்
தகச்சிவம் உணர்த்த வல்ல
தயங்குஞ்சீர் குரவன் தன்னை. 120

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மாசறு மனத்தன் ஆகி
மதியுடை விராகி ஆனோன்
பாசம்அது அனைத்தும் நீக்கும்
பரசிவம் உணரத் தோன்றும்
நேசமோடு அடைவன் பாம்பின்
நெளிதிரைக் கடல் வ றப்ப
ஆசமநம் செய்து ஓங்கும்
அகத்தியப் பெயரி னானே. 121

திங்கள்ஆ றேனும் ஆண்டொன்று
ஆயினும் தேசி கன்தன்
பொங்குஅருள் காணுங் காறும்
புரிந்துநற் பணிகள் காணின்
அங்குஅருள் சீல சீடன்
அஞ்சலி செய்து நின்றே
பங்கமாம் பிறவி நோயென்
பரிந்துஅருள் புரிக என்பான். 122

புனித மா ணாக்கன் இன்ன
புகன்றுஅருள் இரந்து நிற்ப
அனையவன் தனது சத்தி
பாதம்உற்று அறிந்து பின்னர்
வினைதபு தீக்கை யோடு
மேவுவித்து அருள்வன் என்ப
தனிவரு பரமா நந்த
தத்துவக் குரவன் அன்றே: 123

மூவகை உறும்அத் தீக்கை
முறைதரு வேதா என்றும்
தாவின்மந் திரம் அது என்றும்
தகுதிகொள் கிரியை என்றும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மேவுறும் அவற்றுள் வேதா
மெய்க்குரு காட்சி யானே
ஆவிகொள் சிவம் விளங்க
அத்த மத் தகயோ கத்தால். 124

மந்திரம் அதனை யே தன்
மைந்தனுக்கு உபதே சித்தல்
சிந்தைசெய் மந்தி ரப்பேர்த்
தீக்கையாம் குண்டம் ஆதி
தத்திரங் கொண்டு செய்த
தக்கநல் கிரியை என்பர்
அந்தம் அது அடைந்த அந்தக்
கிரியையை அறைதும் மாதோ. 125

தீங்குஅறு திங்கள் நல்ல
திதிகால வாரம் ஒன்ற
ஓங்குறு பூதி தாம்பூ
லத்தொடும் உதவிப் பத்தர்க்கு
ஈங்குஅறல் ஆடல் ஆதி
இயற்றிவெண் துகில்பு னைந்து
பாங்குறு சீடன் தன்னைப்
பகர்முறை அருகு அழைத்து. 126

உத்தர திசையை நோக்கி
உற்றதன் பாங்கர்ச் செய்த
சித்திர மண்ட பத்தில்
குணக்கு எனும் திசையை நோக்கி
வைத்துஅருள் புரியும் ஆசான்
மலிசிவத் துதிகள் தாம்செய்
வித்துஅக இருள் இரிக்கும்
தியானமும் விரவு விப்பன். 127

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முன்னர்நன் னீற்றுப் பட்ட
மொழிஇடம் வழாது அணிந்து
பின்னர்மெய்க் குரவ ராய்ஐம்
பிரமமே வடிவாய் உற்ற
தன்னிகர் கும்ப நீர்அச்
சற்குரு வழியின் வந்த
செந்நெறி உடைய ஆசான்
சிதறுக சீடன் மீது. 128

ஆண்டுஅரு கிருந்த சுத்தன்
ஆகிய மாணாக் கன்தன்
மாண்தகு வலக் கா தின்கண்
பவப்பிணி மருந்தாய் நல்லோர்
வேண்டும்அஞ் செழுத்தும் மெல்ல
விளம்புபு சொரூபம் சந்தம்
காண்தகும் இருடி மிக்க
கடவுள்நல் நியாசம் சொல்க. 129

குருகாரணியத்தலம் - முற்றும்.

ஓம் சசிசேகராய நம:

ஐந்தாவது

(5) இலிங்க தாரணத்தலம்

சந்திர காந்தத் தேனும்
தபந காந் தத்தி லேனும்
சுந்தர சயிலம் தன்னில்
தோன்றிய சிலையி லேனும்
வந்துறு படிகத் தேனும்
மகிழ்வாண லிங்கத் தேனும்
முத்துஅழ குறும் இ லிங்கம்
ஒன்றுகொள் நிற்க மன்னோ. 130

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இலக்கணம் முழுதும் ஒன்றி
இலங்குமான் ஐந்தும் ஆடிக்
குலக்கடி மலர்சந்து ஆதி
கொண்டு அருச் சிக்கப் பட்டு
விலக்குஅரு மனுவால் சுத்தம்
மேவும்அவ் விலிங்கம் தன்னில்
கலைக்கதி வழாது சைவ
கலையைஉய்த் திடுவன் ஆசான். 131

சீடனது உயிரை அந்தச்
சிவலிங்கம் தன்னில் உய்த்துப்
பீடுறும் இலிங்கம் அன்னோன்
பிராணனில் உறவு இருத்தி
ஏடென விரும்பும் ஆசான்
இவ்வகை ஏக பாவம்
கூடுற இயல்இ லிங்கம்
கொடுக்கஅச் சீடன் கையில். 132

இலங்குழிப் பிராண லிங்கம்
இனியநின் பிராண னே போல்
சலம்தவிர் உனக்கு மைந்த
தரிப்பதுஎவ் விடத்தும் என்றும்
விலக்குவது அன்று எங் கேனும்
வீழ்ந்திடின் மெய்யில் நின்றும்
நலங்கிளர் முத்தி சேர்வான்
நல்லுயிர் விடுக வல்லே. 133

நூல்நெறி முழுதும் ஆய்ந்த
நுண்உணர் உடையோன் தன்னால்
தான்இனிது இவ்வாறு ஓதிச்
சாற்றிடப் பட்ட சீடன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மேனியில் உயிர்வாழ் காறும்
விடாதுநன்கு உறத் த ரிக்க
கூன்இள மதி அ ணிந்த
குழகன்மெய்ச் சிவலிங் கத்தை. 134

புண்ணியம் அனைத்தி னுக்கும்
புகலிடம் ஆகி நின்றுஅங்கு
எண்ணரும் பவம் அ கற்றும்
இலிங்கதா ரணம்அது என்று
கண்ணுதல் அருளிச் செய்த
காமிகா திகளை ஓர்ந்த
நுண்உணர் வுடைய எல்லா
முனிகளும் நுவல்வர் அன்றே. 135

தகைபெறு பரம லிங்க
தாரணம் உட் பு றம்பாம்
வகைபெற இரண்டாம் என்பர்
மாதவர் அவற்றுள் ஆதி
பகவன்என் பெயர் பு னைந்த
பரம சிந் மய லிங் கத்தை
அகமதில் உறத் த ரித்தல்
ஆம்தரம் ஆகும் அன்றே. 136

மூல கா ரணமாய் ஞான
மூர்த்தியாய் இன்பம் ஆகி
மேலதாய் உண்மை ஆகி
விகற்பமோடு அழிவும் இன்றி
மால்இலாது உலகு இறந்த
பிரமமாம் மாலிங் கந்தான்
சாலவீடு உறுதல் வேண்டும்
தக்கவர் அடைதல் ஆமே. 137

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேதமாம் முடிய னைத்தும்
விளங்குறப் பிரமம் என்னும்
சோதிமா லிங்கம் எல்லா
ஆவிகள் தோறும் நிற்கும்
ஆதி ஆ தாரம் ஆசுஇல்
அகம்எனும் இதயம் நன்றிக்கு
ஏதுவாம் புருவ நாப்பண்
எனவரும் மூன்றி டத்தும். 138

அழிவுஅற அரிதாய் என்றும்
அகண்டமாய்ப் பிரமம் என்னும்
மொழிபெறு பரம லிங்க
முத்தி நே யத்தர் ஆகி
வழிபடு பவர்க்கா கத்தன்
மாயையால் கண்டி தப்பட்டு
ஒழிவற இருக்கும் என்றே
உரைப்பர்நுண் உணர்வி னோரே. 139

சரமுடன் அசரம் என்னச்
சாற்றிய உலகு உதிக்கும்
கருமமோடு இலயம் எய்தும்
காரணம் அதனால் என்றும்
உரைமனம் இறந்து ஞான
ஒளிஉரு ஆகி நின்ற
பிரமமது இலிங்க நாமம்
பெறும்என இசைப்பர் தக்கோர். 140

சாற்றருள் பரம தாய
சச்சிதா நந்த லிங்கம்
ஆற்றவும் பெரிதாம் தன்மை
அடைதலி னாலும் அன்றிச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தோற்றுறும் உலகி னுக்குக்
கருப்பமாம் தொடர்பி னானும்
போற்றறும் பிரம நாமம்
பொருந்தும்என்று அறிந்து கொண்மோ. 141

மருவும் ஆ தாரத் தேனும்
இதயநல் மலரி லேனும்
புருமா நடுவி லேனும்
பொருந்திய ஒன்றில் என்றும்
விரவுமா சோதி லிங்கம்
விடாத அநு சந்தா னம்தான்
இரவுஇல்ஆந் தரஇ லிங்க
தாரணம் என்பர் மேலோர். 142

ஆடக வுருவ மாக
அணிகொள் மூ லாதா ரத்தில்
பாடல ஒளி இ மைக்கும்
பவளம்போல் இதயம் தன்னில்
நீடுஒளி உபலம் போல
நிகழ்தரு புருவ நாப்பண்
நாடரும் உணர்வில் லிங்க
ஞானயோ கிகள் சிந் திப்பார். 143

புறத்துறு தார ணத்தில்
புகல்கோடி மடங்கு மிக்க
சிறப்புறு அக இ லிங்க
தாரணம் தீர்ந்துபாதி
பிறப்பிடை மறிதல் செய்யார்
பிறங்குஒளி இலிங்கம் தன்னைத்
துறப்புஅற இதயம் ஒன்றத்
துணிவொடு தரித்து_ளோரே. 144

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உள்ளத்தில் இலிங்கம் தன்னை
ஒழிவற விடாது பற்றல்
எள்உற்ற ஆன்ம வித்தை
சேர்ந்தமை உறுதல் அம்ம
வள்ளல்தண் அளிநல் ஆசான்
மகிழ்செய்குற் றேவல் என்னத்
தள்ளற்ற இவைகள் தாமே
காரணம் தனிமுத் திக்கே. 145

ஊனமாம் விடயம் நீத்தே
உளம்தடு மாறல் இல்லா
மானமா யோகி கட்கு
மனத்தெழுந்து இலங்கா நின்ற
ஞானமா லிங்கத்து அன்றி
நவின்றுள புறத்தில் என்றும்
தானுறாது உள வி ருப்பு என்று
உணருதி தவத்தின் மேலோய். 146

வேதனோடு அரி அ ரன்சீர்
விண்முழு தாளி ஆதி
மாதிர மன்னர் ஈண்டு
மனிதர் கந் தருவர் சித்தர்
தீதறு முனிவர் எல்லாம்
சிந்மய மாய் அ கத்துள்
சோதிகொள் பரமா நந்த
லிங்கமே துணிந்து காண்பார். 147

சச்சிதா நந்த மாகும்
தற்பர லிங்கம் தன்னை
இச்சையால் அறிஞன் ஆனோன்
எத்திறத் தானும் என்றும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அச்சம்ஆர் துயரம் எல்லாம்
அருக்கன்முன் இருளே போல
எச்சமாய் நிலாது பொன்ற
இதயத்தில் தியானம் செய்க. 148

அத்தனை அகம் த ரிக்க
அசத்தன்ஆ யினும் அ தாஅன்று
சத்தனே எனினும் ஞான
தற்பர லிங்க மே என்
புத்தியின் திட்பம் எய்திப்
புறத்துஇலிங் கம்த ரிக்க
வித்தக நெறிஉ ணர்ந்த
வீரசை வர்கள்தாம் அன்றே. 149

திரம்பெறும் இலிங்கம் மூன்று
திறத்ததாம் தூல லிங்கம்
பரம்பெறு சூக்கு மம்பின்
பராற்பரம் என்னத் தூலம்
கரம்பெறும் இட்ட லிங்கம்
கருத்தது சூக்கு மம்தான்
நிரம்புறும் இலிங்கம் தானே
நிகழ்பராற் பரம்என்று ஓர்வாய். 150

மாட்சியாய்ப் பிரம மிக்க
சிவம்என மருவி அன்றே
ஆட்சியாம் அநிட்டம் எல்லாம்
அகற்றியே இட்ட ம் ஆகிக்
காட்சியால் நிகழ்வதாம்சிற்
கனபரி ணாம லிங்கம்
பூட்சியூடு அகலாது என்றும்
புலமையோர் தரிக்க மாதோ. 151

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிரமொடு களம்நன் மார்பு
சிவந்துள உதரம் கக்கம்
கரம்எனும் இவற்றில் ஒன்றின்
கண் சிவ லிங்கம் தாங்கல்
வரமிழி நாபி யின்கீழ்
வார்மடை நுதியிற் பின்பால்
புரைதரும் இடத்தில் என்றும்
பொருந்துறத் தரிக்கொ ணாதால். 152

தம்பொரு ளாம் இலிங்கம்
தன்னைவள் இதழ்அ விழ்ந்த
வம்பலர் கந்த ம்ஆதி
மருவுற முறையிற் கொண்டு
கம்பமில் மனத்தி னோடு
கரபீடத் தினில்அர்ச் சிப்பர்
இம்பரில் என்றும் சுத்தர்
எனப்படும் வீர சைவர். 153

உரம்பெறு முத்தி நேயம்
ஊற்றமாம் வீர சைவர்
நிரந்தரம் விடாது பற்றும்
நிகழ்கர பீட பூசை
பரம்புறம் இயற்றும் பீட
பூசையின் பராரை வெற்பில்
இருந்துஉமை பாக னோடுஒப்பு
என்பதை உணர்த்த வல்லோய். 154

பனிமலர் அயன்மால் ஆதிப்
பண்ணவர் கோதம் ஆதி
முனிவரர் அனைவ ரும்தம்
முடிமிசை யென்றும் கொள்வர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தனிவரும் இலிங்கம் வாட்கண்
பொறிமுதற் சத்தி யெல்லாம்
புனைமலர் அளக மீது
பொருந்துறத் தரிப்பர் மன்னோ. 155

சதுமறை யுள்ளும் மிக்க
சாத்திரங் களினும் ஈரொன்
பதுவித புராணத் துள்ளும்
பகர்தரு காமி கம்தான்
முதல்வரும் ஆக மத்தும்
ஒழிந்திடப் பட்டி டும்சந்
ததமுமெய் விடா இ லிங்க
தாரணம் விறற்சை வர்க்கே. 156

பங்கயற் கிறைவ னின்மெய்
பவித்திரம் என இ ருக்குஒன்று
இங்குஉரைப் பதனால் தூய்தா
இலங்குறுஞ் சிவலிங் கம்தான்
தங்குறத் தரிக்கத் தக்கது
ஆகும்அச் சைவ லிங்க
மங்கலம் புனித தீக்கை
மருவுறான் அடைந்தி டானால். 157

உன்தநு அகோரம் ஆகி
உருத்ரபா வத்தின் நீங்கும்
என்றுஎசுர் உரைத்த லாலே
லிங்கதா ரகனாம் சைவன்
துன்று பா வங்கள் எல்லாம்
தொலைப்பவன் என்பர் மேலோர்
தென்றலம் குன்றின் உற்ற
செஞ்சடை முனிவர் ஏறே. 158

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நித்தலும் நியமம் செய்து
நிமலபூ சையின்கட் பட்ட
சித்தமது உடையன் ஆன
சிவலிங்க தார கன்தான்
எத்திற மலமும் நீங்கா
இருள்தெறு கதிரின் மாய்க்கும்
சுத்தமது உறும் வி பூதி
தோன்றுறப் புனைவன் அன்றே. 159

இலிங்கதாரணத்தலம் - முற்றும்.

ஓம் வாமதேவாய நம:

ஆறாவது

(6) விபூதி தாரணத் தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பூதிதனை அணிந்துஅதனிற் பட்டுஅகலாக்
கருத்தொடு நற் புனிதன் ஆகி
சோதிமய மாயசிவம் எனும்பொருளை
விளக்குதலால் தூய்தாம் வெண்ணீறு
ஓதலுறு பசிதமொடு பசுமம்எனப்
பட்டிடும்என்று உளத்தில் கொண்டு
போதும்அவன் யாவன்அவன் உயர்ந்தவன்இங்(கு)
உபாதிஅறும் பூதி யுள்ளோன். 160

மந்திரமே முதலாய நெறிவழாது
அழலினிடை வந்து தோன்றும்
சுந்தரம்ஆ கியநீற்றை உபாதிகம்என்(று)
அறைகுவர் நூல் துணிந்த நல்லோர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பந்தம்அறும் அதன்நாமம் விபூதியொடு
பசிதமணி பசுமம் சார
நிந்தையறும் இரக்கைஎனக் காரணம் ஐந்து
உற்றுஉலகில் நிகழும் அன்றே. 161

பூதியெனப் படும்செல்வ ஏதுவினால்
சிவமாகும் பொருள் தி கழ்த்தும்
ஏதுவினில் பசிதம்மிகு பாவங்கள்
தமைஅச்சத்து இசைத்த லாலே
ஓதலுறும் பசுமமாம் இடர்இடைநின்(று)
அகற்றுதலால் ஒன்றும் சாரந்
தீதுஅகல அனைவரையும் அளித்தலினால்
இரக்கையெனச் செப்பும் நூலே. 162

தோன்றியிடு நந்தை பத் திரை சுரமி
சுசீலையொடு சுமனை என்ன
வான்திறம் ஓர் ஐந்தும்எழிற் சத்தியோ
சாதமுதல் அரன் மு கத்தில்
ஏன்றமுறை கபிலைநிறம் கருமைமிகும்
வெண்மையெழுந்து இலங்கு செந்தீச்
கான்றபுகை நிறஞ்செம்மை எனும்ஐந்தும்
அவற்றின் நிறம் காண்டு கொண்மோ. 163

முன்னிகழும் விபூதிசத்தி யோசாதம்
தனில்வாம முகத்தின் கண்ணே
தன்னிகர்நற் பசிதம் அகோ ரத்தினிரும்
பசுமம்எழிற் சார ம்என்ப
துன்னல்அரும் புருடத்தில் ஈசானத்து
இரக்கைஅடைந்து உதிக்கும் என்பர்
பன்னுமுறை நத்தைமுத லாயபெரும்
பெயர்படைத்த பசுக்கள் தாமே. 164

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நித்தியகா ரியம்அதனில் விபூதிகை
மித்திகத்தில் நிகழா நின்ற
சுத்தமா கியபசிதம் பசுமமே
பரிகாரத் தொழிற்க ண்அன்றி
முத்தியாம் வினைஅதனில் இரக்கைஎலாக்
கருமத்து மொழியின் சாரம்
புத்தியான் உயர்வீர சைவர்அணி
குவர்எனவே புகல்வ ர்அன்றே. 165

நந்தைமுத லாயவற்றின் நிறமாகும்
கபிலாதி நவின்ற வன்னம்
ஐந்துமுறை விபூதிமுதல் ஐந்தினுக்கும்
ஆகுநீ றாதல் நான்காம்
அந்தமலி கற்பம்அநு கற்பம்உப
கற்பமுடன் அகற்பம் என்றே
முந்தையுள கற்பமே சிறந்ததுமற்(று)
ஏனையவும் முறையின் ஆமால். 166

சாற்றுமுறை வழாதுநவ கோமயத்தைச்
சத்தியோ சாதம் தன்னால்
ஏற்றருள்செய் பிண்டமது வாமதே
வத்தின்உற விழைந்து உலர்த்திப்
போற்றலுறு புருடத்தால் சுட்டதனை
அகோரமநுப் புகன்று ஈ சானத்து
ஊற்றமுற எடுத்திருத்தல் கற்பம்அது
கற்பாதி உரைத்து ம்அன்றே. 167

காட்டுலர்கோ மயம்பொடித்துஅம் முறைசுடுதல்
அநுகற்பம் கடையர் தீக்கண்
ஈட்டுபொடி துகில்கொடு சோ தித்துஉருட்டி
ஆன்நீர்விட்டு இசைத்த வாறே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மூட்டும்அழற் சுடுவதுஉப கற்பம்எனல்
ஆகும்இவண் மொழிந்த அன்றிக்
கூட்டுதிரு நீறுஅகற்பம் எனச் சிவா
கமம்அனைத்தும் கூறும் அன்றே. 168

கலயமுத லாயபாத் திரத்துள்அமர்
நீறொன்று கவர்ந்து மூன்றாம்
நலம்மருவு சந்திகளில் எனினும்எப்போ(து)
எனினும் அதை நானஞ் செய்த
நிலையதனில் புதுப்புனலால் கரம்விளக்கி
மவுனியாய் நீற்றை எண்கால்
பலம்உதவும் மூலமநுக் கொண்டு அபிமந்
திரித்துப்பின் பகர்ந்த வாறே. 169

சிரமதில் ஈ சானத்தால் புருடத்தால்
முகமதனில் தீர் கோ ரத்தால்
உரம்அதனில் வாமதே வத்தினால்
குய்யத்தில் ஒண்ப தத்தில்
வரமருவு சத்தியோ சாதத்தால்
பிரணவமாம் மந்தி ரத்தால்
புரமுழுதும் புனைந்திடுக அநாதிமல
இருள்துமிக்கும் பூதி தன்னை. 170

விதிமுறையின் விபூதிதனில் மூழ்குறுதல்
கங்கைமுதல் விரிநீ ராட்டின்
அதிகம்என அறிகபுற மாசுஒழிப்பது
ஆகிச்சிற் றாவி மாயும்
நதியறலில் மூழ்குதலின் விருப்புஎன்கொல்
உள்மலிநம் நசித்து மிக்க
முதிரும்அறிவு உதவியிடர்ப் பகுதி நீக்கு
நீறுநீற்றின் மூழ்கு வோர்க்கே. 171

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முண்டகனே முதலாய வானவர்நா
ரதன்முதலா முனிவர் மிக்க
அண்டர்புகழ் சநகன்முதல் யோகிகள்வா
ணாதியாம் அசுரர் எல்லாம்
வெண்திருநீ ரணிபவராய் விமலசிவ
பத்தியொடு விளங்கி நெஞ்சிற்
கொண்டவர்இப் புனிதநித்த சுத்தரா
யினர்எனவே கூறும் நூலே. 172

ஏழுமுறைஐந் தெழுத்துஓதி உடல்முழுதும்
தூளநம்செய் திட்டுப் பின்னர்
வழுஅகல உயர்திரிபுண் டரம்இடுக
அன்றிமுனம் வருமுத் தூளம்
விழுமியவொண் புண்டரத்தோடு ஒவ்வாமை
யால்அதனை விடுத்தே யேனும்
செழுமைதரு புண்டரமே யிடுகவென
அறைந்திடுவர் தீது அகன்றோர். 173

சென்னிஒளிர் நுதல்செவிகள் களம்புயங்கள்
அகல்இதயம் சிறந்த வுந்தி
மன்னுபிடர் இருவாகு வொடுகுகுத்தே
சம்கவின்கூர் மணிபந் தங்கள்
என்னவரு மூஐந்து தானத்தும்
புனல்கலந்த இனிய நீற்றால்
உன்னல் அரும் புகழ்த்திரிபுண் டரம்இடுவர்
மூலம்அது உரைத்து நல்லோர். 174

நீற்றினையொள் வாமகரம் கொண்டுவலக்
கரம்அதனால் நெறியின் மூடித்
தோற்றுறும் அக் கினி ரிதியென் பதுமுதலா
கியமநுக்கள் தொட்டுஇங்கு ஏழ்கால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

போற்றிமுனம் புகன்றஇடங் களில்புனலால்
குழைத்தஎழிற் புனித நீற்றால்
ஏற்றதிரி புண்டரம் இட் டிடுபவன் மெய்ப்
பரசிவனை எய்து வானால். 175

தன்னுடைய வலக்கரத்தின் நடுவிரல்கள்
மூன்றுகொடு தயங்கு நீற்றால்
மன்நுதலின் நீளம்அறு விரல்அளவா
யினும் கடைக்கண் மட்டா யேனும்
முன்அளக அளவேனும் வயங்குதிரி
புண்டரம்சொல் முறையின் சாத்தின்
பன்னலுறும் அழற்பொறிபோல் பவம்அனைத்தும்
தொலைக்கும்எனப் பகர்வர் நல்லோர். 176

மத்திமையோடு அநாமிகை அங் குட்டம்எனும்
இவ்விரலால் மறைக ள்எல்லாம்
வைத்ததிரி புண்டரத்தை அநுலோம
விலோமத்தால் வயங்க மல்கு
பத்திகொடு திருநுதலில் இடுபவனே
உருத்திரனாம் பகரின் இந்த
மெய்த்தவுரை தனில்ஐயம் இலை மலயத்து
இருந்துதவம் விளைக்கும் மேலோய். 177

செவ்வியவாய் ஒன்றோடொன்று புணராது
நயந்துமிகச் சேர்ந்த வெண்மை
எவ்வம்அறு செவிஅளவாய் இனைய இலக்
கணமுழுதும் இசைந்து மிக்க
அவ்வியம் இ லாத திரி புண்டர தா
ரணம் சித்தி அனைத்தும் ஆம் என்று
இவ்வுலகின் மறைமுதலாம் கலையுணர்ந்த
மூதறிஞர் எல்லாம் சொல்வர். 178

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முப்பொழுதின் ஒருபொழுதா யினும்திருவெண்
நீற்றினால் முறைவ ழாமல்
அப்புனித அருந்திரி புண் டரம்இடுவோன்
உருத்திரனே ஐய மில்லை
இப்பரிசு நல்திரிபுண் டரம்இடுவோன்
இறைதருமத்து இசைவுற்று அன்னோன்
ஒப்பரிய மும்மூர்த்தி மயன்ஆவன்
எனச்சுருதி உரைக்கும் அன்றே. 179

இந்திரனே முதலாய இமையவரும்
மலர்த்தவிசில் இருப்போன் தானும்
முந்திமலர் தனில்உலகம் பூத்தலை ஆ
ழியில்அரவில் உறங்கு வானும்
முந்துபுகழ் உருத்திரனும் வதிட்டனே
முதலாய முனிவர் தாமும்
சுதந்திரம்ஆ கிய திரி புண் டரம்அணிந்து
விளக்கமொடு தோன்று வாரே. 180

அரிய வே தாகமங்கள் அனைத்தும்விரி
புராணங்கள் அனைத்தும் எல்லா
மிருதிகளும் இதிகாச கற்பங்கள்
யாவும்எழில் விளங்கும் நீற்றால்
புரியும்இணை தவிர்திரிபுண் டரம்விதிக்கப்
படும்இனைய புண்ட ரந்தான்
உரியர்எனும் சைவர்களால் சிறப்பின்அணி
யப்படும்என்று உரைக்கும் நூலே. 181

நீங்கியதோர் ஒழுக்கமும்உடை யவன்ஆகித்
தீயொழுக்க நெறிநின் றோனாய்த்
தீங்குபுரி நாத்திகனே யெனினும் இள
நிலவுஎறிக்குந் திருவெண் ணீற்றின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓங்குதிரி புண்டர தா ரகன்மிகு பா
வங்கள்எல்லாம் ஒழிந்து நிற்பன்
வாங்குதிரைக் கடல்உலகிற் குறுமுனியென்று
உயர்ந்தபெரு மாத வத்தோய். 182

விபூதிதாரணத்தலம் - முற்றும்.

ஓம் விரூபாக்ஷாய நம:

ஏழாவது

(7) உருத்திராக்க தாரணத்தலம்

கலிவிருத்தம்

நீற்றின் மூழ்கிநல் நெற்றியில் புண்டரத்
தோற்ற ஈசனைத் தொண்டில் அர்ச் சிப்பவன்
போற்றி அக்க மணியும் புனைகவென்று
ஆற்றல் மிக்குஉயர் ஆகமம் ஓதுமால். 183

புரங்கள் மூன்றும் பொடித்துறுங் கால் அரன்
திரங்கொள் நாட்டம் திறப்பப் பல்துளி
பரந்த அன்னவற் றிற்படு பன்மணி
வரங்கொள் அக்க மணிஎன ஓதுவார். 184

உருத்தி ராக்கத்து உதித்திடும் தன்மையால்
உருத்தி ராக்கப் பெயர்பெறும் ஒண்மணி
இருக்கும் முப்பதொடு எண்வகை பேதமாய்த்
தரித்து ளோர்வினை சாடுவ ஆகியே. 185

கதிர்க்கண் ஆறிரண்டு ஆகும் கபிலமாய்
மதிக்கண் ஈரெட்டு மன்னுறும் வெண்மையை
உதிக்கும் தீக்கணில் பத்தொண் கருமையாய்
விதித்த ஈசன் விழிமணி என்பவே. 186

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பழுதி லாது பசும்பொன் நிறத்தவாய்
அழகு கூர்ந்துஅய லார்அணி யா மணி
முழுது உணர்ந்த முதல்வனைப் பூசைசெய்
விழுமி யோன் புனை கிற்பன் விழைவினால். 187

சிகையின் ஓர்முகத்து ஒன்று சிரத்தினில்
முகம் இ ரண்டு மூன்று ஆறிரண்டு உள்ளமூன்று
இகலில் பன்னொன்று இசையும் ஆ றாறுதாம்
புகழு றும்தலை தன்னில் புனைகவே. 188

ஐந்தொடு ஏழுபத்து உள்ளஅவ் வாறுகாது
உந்தும் ஆறொடுஎட்டு உள்ளஎண் ணான்குநற்
கந்த ரம்முகம் நான்குள ஐம்பதாய்
வந்த நல்மணி மார்பில் அணிவரால். 189

வாகு வில் பதின் மூன்றுஉள வேறு வே
றாக ஈரெட்டுஅங்கு ஆறிரண்டு ஆறிரண்டு
ஓகை நன்முகம் ஒன்பது உடையவாம்
மோக ஒள்மணி முன்கையில் கொள்கவே. 190

ஏழி ரண்டு மு கத்துநூற் றெட்டுஉயர்
வாழ்வு இலங்குஉப வீதம் வனைகுவர்
தாழி குஞ்சடைத் தாணுவைப் பூசனை
ஊழ் இ லங்க உஞற்றிடும் உத்தமர். 191

இனைய வாறு இங்கு இறைமணி என்றுமே
புனைகு வார்நற் புலனறு மூடரே
எனினும் அங்கவர்க்கு என்றும் மருவு தீ
வினையின் நாமமும் இன்றிது மெய்ம்மையே. 192

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கலிநிலைத்துறை

வேதி யர்க்குஅனை அத்தனுக்கு ஒள்மக வினுக்குத்
தீது இழைத்தவன் கள்உணி செய்ந்நன்றி செற்றோன்
போதம் நற்குரு தற்பரன் பொன்கொளி எனினும்
பாத கத்தினில் நீங்குவன் பரன்மணி தரிப்போன். 193

அந்த ணக்குலத்து உதித்தவன் ஆயினும் அன்றி
நிந்த னைப்புலைப் பிறப்பினன் ஆயினும் புலமை
முந்து பெற்றவன் ஆயினும் மூடன் ஆ யினுமே
சிந்தும் முற்பவம் அனைத்தையும் சிவன்மணி தரிப்போன். 194

தீண்ட லால் மனத்து உன்னலால் பூசனை செயலால்
காண்ட லால் உடற் புனைதலால் மணிவினை களைவர்
வேண்டும் ஆன்ஒரு கோடிஈத்து உறுபலன் விளைவு
பூண்டு ளோன்தனக்கு அக்கமா மணிஅருள் புரியும். 195

மரித்தல் சேர்வுறு காலையின் அக்கமா மணியை
உரைத்து நீரிடை உமையொரு பாகனை உவந்து
கருத்தினில் நாடியே குடித்திடில் துயரெலாம் களைந்து
திருத்தம் ஆகிய உருத்திர உலகினைச் சேர்வார். 196

பூதி யால்உடல் முழுதும்உத் தூளநம் புரிந்து
சாதம் மேவரும் அக்கமா மணியினைத் தரிக்கும்
மேதை யானவன் உருத்திர னேஎன விளம்பும்
ஆதி மாமறை அனைத்தும்இவ் வுரைக்குஇலை ஐயம். 197

நித்தி யம் திகழ் காமிய நிமித்தியம் நிகழ்த்தும்
எத்தி றப்பெருங் கருமங்கள் இயற்றுவோன் எனினும்
பத்தி யின்திரு நீற்றொடு பரன்மணி புனையான்
அத்தி றக்கரு மங்களின் பலன்களை அடையான். 198

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வன்னம் ஆச்சிர மத்தினில் மாசில்ஆ சாரம்
தன்னில் நிற்பவர் தம்முள்மெய் தயங்குநீற் றோடு
பொன்எ னத்திகழ் அக்கமா மணிபுனை பவனே
சொல்நி ரைத்துஉயர் சுருதியும் மிருதியும் துதிப்பான். 199

உருத்திராக்கதாரணத்தலம் - முற்றும்.

ஓம் கபர்தினே நம:

எட்டாவது

(8) பஞ்சாக்கர செபத்தலம்

அக்க மாமணி நீறுஅணி இலிங்கதா ரணன்தான்
மிக்க தாம்சிவ தத்துவம் விளங்குற விளக்கும்
நக்கன் நாமமாம் ஐந்தெழுத் தாகவே நவிலும்
தக்க வித்தையை முறையினில் செபித்திடத் தகுமால். 200

மெய்த்த ஒண்சிவ தத்துவம் அதனினும் மேலாம்
தத்து வாந்தரம் இன்மைபோல் மறைகளின் தலையாய்
வைத்த ஐந்தெழுத்து ஆகிய மந்திரம் அதனில்
உத்த ரம்பெறு மந்திரம் இலையென உணர்வாய். 201

ஆய இவ்வுல கம்தரு மூலகா ரணமாம்
தூய ஒண்சிவம் உணர்ந்திடின் மற்றுள சுரரால்
மேயு றும்பலன் என்கொல்ஐந் தெழுத்தையும் உணரில்
பாய மந்திரப் பரப்பினால் வருவதுஎப் பயனே. 202

வேதன் ஆதியாம் விண்ணவர் குழாத்தினுள் விளங்கும்
பாதி வாள்மதி முடியுடைப் பரமனே போலப்
பேத மாம்எழு கோடிமந் திரங்களில் பெரிதாம்
போத ஐந்தெழுத்து ஆகிய புனிதமந் திரமே. 203

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உலகு அனைத்தினுக் கும்தனிக் காரணம் உரைக்கும்
கலைக ளுக்குஅரிது ஆகிய பரசிவம் கண்டாய்
பலம நுக்களுக்கு ஏதுவாம் பரமவா சகமாய்
இலகும் அப்புகழ் ஐந்தெழுத்து எனஉலகு இசைக்கும். 204

அஞ்செ ழுத்து எனும் மந்திரம் அப்பர மனுக்கு
விஞ்சும் அற்புத நாமம் அவ் விமலனே நர்மி
எஞ்சல் அற்றிடும் நாமமும் நாமியும் எனலால்
நெஞ்சு அழுத்தும்அம் மந்திரத் தால்இறை நிகழும். 205

முன்னர் ஓதுக நமஎன விளம்புறும் மொழியைப்
பின்னர் ஓதுக சிவாயஎன்று இங்ஙனம் பிறங்கும்
அன்ன அஞ்செழுத்து ஆகிய மந்திர அரசைப்
பன்ன ரும்செழு மறைகளின் முடியெலாம் பரிக்கும். 206

முத்தன் ஆகிநின்று அநாதியே மும்மலங் களினும்
சுத்தன் ஆதலின் மங்கல முழுவதும் தோன்றற்கு
உய்த்தது ஓரிடம் ஆதலின் சிவம்என உரைப்பர்
சத்தன் ஆகிய சச்சிதா நந்தசங் கரனை. 207

சிவமெ னும்திகழ் ஈரெழுத்து ஒருமொழி சிறப்பாய்ப்
பவம் அ கன்றுஉள பரப்பிர மம்தனைப் பயக்கும்
நவை அ கன்றுஉயர் சிவமெனும் பெயரலா நாமம்
எவையும் நீக்குறு கவுணமாய் விரியும்என்று இசைப்பர்.
208

ஆத லால் சிவம் எனும்இரண்டு எழுத்துமே அளவில்
சோதி யாய்உறு சச்சிதா நந்தமாய்த் தோன்றும்
ஆதி நாயகன் தனக்கு முக்கியப் பெயராம்என்று
ஓதும் மாமறை முதலிய கலையெலாம் உவந்தே. 209

இனைய நாமம்உற்று அஞ்செழுத்து என்னும்மந் திரமாம்
அனைய மந்திரம் முத்தியின் விருப்புளன் ஆகிப்
புனித நெஞ்சினன் ஆயினோன் ஆதரம் பொங்கத்
தனி இ ருந்து அனு தினமும் உச் சரித்திடத் தகுமால்.210

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாச மோசகன் அநாதியாம் பரசிவம் என்னும்
ஈசன் ஆகுதல் உண்மை அவ் வாறுஎன ஓங்கித்
தேசு உலாவிய அஞ்செழுத் தும் செறி பாச
நாச காரணம் என்பர்மெய் தெரிந்துள நல்லோர். 211

ஐந்து பூதம்ஐம் பொறிகளோடு ஐம்புலன் அமர்ந்த
ஐந்தெ னும் கரு மேந்தியம் ஐவர்கா ரணராம்
ஐந்துஎ னும்தொழில் ஐம்பெரும் பிரமங்கள் அனைத்தும்
ஐந்து எழுத்தினால் உணர்த்துவர் அறிவு அறிந் தவரே. 212

ஓதும் அக்கரம் ஐந்துஉரு வாம்உயர் மநுத்தான்
ஆதி யில்பிர ணவந்தனைக் கொண்டிடும் அதனால்
வேத முற்றினும் ஆகமம் அனைத்தினும் விளங்க
வேத மற்றுயர் சடக்கரம் என்றிடப் படுமால். 213

இந்த அஞ்செழுத்து ஆகிய மந்திர இறைக்கு
முந்து உறும்பிர ணவம்பர சிவன்தனை மொழியும்
அந்த அக்கரம் ஒன்றினால் அகிலகா ரணமாய்
வந்த அச்சிதா நந்தமெய்ப் பரம்பொருள் வயங்கும். 214

சோகம் என்றுள சொரூபமே தூயமந் திரத்தான்
ஆக நன்குற அறிகுவார் அஞ்சம்என் பனதாம்
போக அந்தம்இல் ஓம்எனப் புகலும்ஓர் எழுத்தாம்
ஏக மந்திரம் உதிக்கும்என்று இயம்புவர் பெரியோர். 215

காட்டும் ஓம்எனும் எழுத்துநிட் களசிவன் தன்னை
ஈட்டும் ஐம்பெரும் பிரமமாம் தனுவுடை இறையைக்
கூட்டும் அஞ்செழுத்து உபயமாம் ஒரு பொருள் கொடுக்கும்
ஓட்டு றும்பவப் பிரணவ அஞ்செழுத்து ஒன்றி. 216

மூல வித்தைநல் சிவம்சைவ சூத்திர மொழியின்
மேலும் அஞ்செழுத்து எனும்பெயர் மேவும்மா மநுஅவ்
ஏலும் அஞ்செழுத் தினைப்பிர ணவம்புணர்த்து இசைப்பர்
மாவில் அர்ச்சனை புரிபவர் மனம் ஒரு மித்து. 217

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உத்த ரம் குண திசையினுள் ஒன்றினை நோக்கி
நித்தி யம் பிரா ணாயாமம் மும்முறை நிகழ்த்தி
அத்தன் அம்பிகை பாகனை அணியுடன் அகத்தில்
வைத்து ஒ ருங்கிய மனத்தொடுஅம் மந்திரம் செபிக்க. 218

மந்தி ரம் செபித் திடும்விதி மூன்று வா சிகமே
நந்து உ பாஞ்சு மா நதம்என வினையெலாம் நசிக்கும்
முந்து உ றும்திரு வாசிகம் மொழிந்திடின் அருகு
வந்து இருந்துளோர் கேட்டிட வழாது அறைந் திடலே. 219

அருகில் உற்றுளோர் கேட்டிடாது அணியிதழ் தீண்டி
விரகின் வித்தையை மந்தமாய் விளம்புதல் உபாஞ்சு
திரிதல் அற்றிடும் நாநுனி மெல்லிதழ் தீண்டாது
ஒருமை உற்றுஉளத்து உன்னுதல் உயர்ந்தமா நதமே. 220

கரும வேள்விநல் விரதம் தா னம்கடும் தவமாய்
மருவும் யாவுமாம் மந்திர வேள்விமா கலையின்
உருவம் ஓர்பதி னாறில் ஒன் றினையும் ஒவ் வாஇவ்
விரவு மான்மியம் வாசிக செபத்தினை மேவும். 221

வாசி கம்தனில் சதகுண மடங்குளது உபாஞ்சு
மாசில் அன்னதின் ஆயிர மடங்கு மா நதமாம்
பேசு றும் செபம் இரண்டினும் பெரும்பவம் ஒழிக்கும்
தேசு அடைந்துஉள தாகிய சிறக்கும் மா நதமே. 222

வாசி காதியின் விதிமுறை வழாதுதன் மனத்தில்
ஈசன் மேவுற அஞ்செழுத்து எனும்பெரு வித்தை
பாச நாசக னாம்படி செபிக்கமெய்ச் சிவமாம்
தேசு ளான் சிவ பூசனை செய்க இம் மனுவால். 223

பரமன் அர்ச்சனை அஞ்செழுத்து அறைந்துபத் தியினால்
ஒரு ப கல்புரி பவன் சிவ கதியினை உறுவான்
விரத நல்தவம் மகம்இவை வித்தைகொண்டு இயற்றும்
ஒருமை அர்ச்சனை தனில்கோடி கூற்றில்ஒன்று ஒவ்வா. 224

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விரதம் மேவிமெய் இளைப்பவர் கால்புனல் மிசைவோர்
பரமன் ஒண்பதம் அடைவுறார் பதிதனே எனினும்
திரிவுஇல் அஞ்செழுத்து அறைந்துஒரு கால்சிவ பூசை
புரிப வன் பவ கோடிகள் போக்கு ம்ஈது உண்மை. 225

சிறந்த அஞ்செழுத்து உயர்மனு ஒருசிறி தேனும்
மறைந்து உளார்எனின் அவர்செயும் பாதகம் அனைத்தும்
இறந்து போம் இளங் கதிர்கடல் முகட்டினுள் எழலும்
முறிந்து பேரிருள் படலைகள் இரிதரு முறைபோல். 226

எண்ணில் ஆகமம் புகல்அயன் மந்திரம் எல்லாம்
பண்ணு றும் புரு டார்த்தமே நிரந்தரம் பயிலின்
அண்ணல் அஞ்செழுத்து ஒருமுறை சிறிதுஅறைந் தவர்க்கும்
நண்ண நல்குறும் சித்திகள் அனைத்தையும் நயந்தே. 227

போதில் ஒன்றினை அஞ்செழுத் தினைப்புகன்று அமலன்
மீது அ ணிந்திடின் வாசப ஃவள்வி ஆ யிரத்தின்
ஓது றும்பலம் அனைத்தும்அங்கு அவன்அடைந்து உறுவான்
மாத வம்புரிந்து உயர்தரு மலயவெற்பு அமர்வோய்.228

மறை உ ணர்ந்துஉடன் மகம்பல இயற்றல்மா தானம்
அறையும் இன்னவை அஞ்செழுத்து அருஞ்செபம் தன்னின்
திறம் அ ணைந்துள கோடிகூற்று ஒன்றையும் சிவனாய்
பொறை இ லங்குறு மந்திரத்து இயல்பை யார் புகல்வார்.
229

முன்னர் மெய்அறிவு அறிந்துள சாநந்த முனிவன்
பன்னி அஞ்செழுத்து ஆகிய பரமமந் திரத்தை
இன்னல் வெம்நர கத்துளோர் தமையெலாம் எடுத்து
மன்னு றுந்துறக் கத்து உற வைத்தனன் மன்னோ. 230

மாசி லா வசிட் டாதி மா முனிவர்இம் மனுவால்
தேசு மேவினர் சித்திகள் அனைத்தையும் செறிந்தே
ஆசி லா அயன் ஆதியர் படைப்புமுன் னாகப்
பேசு மாதொழில் மந்திர வலியினால் பெற்றார். 231

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பரந்த சொற்களில் என்பயன் பத்தியால் சிவனைத்
திருந்த அர்ச்சனை செய்பவன் ஆகியே சிறந்த
வரம்த ரும்பிர ணவமுதல் ஆயஇம் மனுவை
நிரந்த ரம்செபிப் பவன்பர முத்தியின் நிலைப்பான். 232

பஞ்சாக்கரசெபத்தலம் - முற்றும்.

ஓம் நீலலோகிதாய நம:

ஒன்பதாவது

(9) பத்திக் தலம்

நலங்கொள் பூதி நயனத் திருமணி
அலங்கல் மேனி அ ணிந்து பு னிதனாய்ப்
புலங்கொள் அஞ்செழுத்து ஒண்மனுப் போற்றுறும்
இலிங்க தாரணன் பத்தன் எனப்படும். 233

புகழ்தல் கேட்கை புனிதற் கருதுதல்
மகிழ் குற் றேவல் அருச்சனை வந்தனை
தொகுநல் தொண்டொடு தோழமை நற்கொடை
பகரும் மற்றுஇவை நல்நவ பத்தியே. 234

கரிய கண்டக் கடவுள் புகன்றிடும்
உரிய நன்னவ பத்தி உலகினில்
அரிய பாவத் தவர்கட்கு அறத்தினால்
பெரிய வர்க்குப் பெறுதற்கு எளியவே. 235

தலைவன் ஆயினும் தாழ்ந்தவன் ஆயினும்
மலைவு இலாத மலிசிவ பத்திதான்
உலகில் யாரிடத்து ஒன்றும் அனையவன்
இலகு பத்தன் எனப்படு வான்அரோ. 236

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேதி யன்புலைக் கீழ்என வேறிலை
ஓத ரும்சிவ பத்தி உடையனே
ஏதும் ஈசற்கு இனியவன் இன்மையோன்
ஆதி வன்னத்தன் ஆயினும் அல்லனே. 237

வீர சைவர் விரும்பும்அப் பத்திதான்
ஓரி ரண்டுஇயல் ஆம்உட் புறத்தினால்
சோர்வில் உள்ளது சூக்குமம் தூலம்ஆம்
தேரின் மற்றைப் புறத்தது செப்பினே. 238

தூய தாகும் இடத்தில் சுடர்மணிச்
சீய மெல்லணை ஆகிய செங்கையில்
ஆய மெய்ச்சிவ லிங்க அருச்சனை
மாயி ரும்புறப் பத்தி மதிப்பினே. 239

உயிரில் ஈசன் உயிரருள் ஈசனில்
பயில ஒன்றுபட்டு ஒன்றையும் பற்றுறா
இயல்பு அகத்துஅதி பத்தி இசைந்துளோன்
செயல் வெ துப்பு விதையெனச் செப்புவார். 240

பெருகு சொற்கொடு என் பேறு பகர்ந்திடின்
உருகு பத்தி எவற்றும் உயர்ந்ததாம்
மருவி மற்றதை மன்னின னேல் மல
இருள் இரிக்கும் இதில்இலை ஐயமே. 241

முளையில் வித்தும் அவ் வித்தில் முளையும்போல்
தளையில் பத்தி சிவப்பிர சாதமோடு
அளவி ஒன்றின் ஒன்று ஆகும் அப் பத்திதான்
வளம் உறும்பிறப்பு ஒன்றில் வருவதோ. 242

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அறுசீர்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

எண்ணரும் பிறப்பில் சுத்தம்
எய்திநூல் நெறிவ ழாமல்
பண்ணுறும் இயல்பின் மேவிப்
படர்புலன் துறந்த ஞானிக்கு
அண்ணல்தன் அருள் பி றக்கும்
ஆங்குடன் முத்தன் ஆகி
நண்ணரும் சிவச மானம்
நணுகுவன் என்பர் மேலோர். 243

நெளிதிரைக் கடல் உ டுத்த
நிலமிசை மக்கள் தம்முள்
தெளிசிவ பத்தி தான்ஓர்
சிறிதுளோன் எனினும் அன்னோன்
எளிதினில் முப்பி றப்பின்
மேல்பிறப்பு எய்தா வண்ணம்
ஒளியொடு மருவி நிற்கும்
உண்மைஇம் மாற்றம் மாதோ. 244

சாங்கமோடு இயற்றி என்றும்
தாம்கடைப் பிடிக்கும் சேவை
ஆங்குஅது பத்தி மூன்றாம்
அகமனம் மொழிமெய்க் கூற்றால்
ஈங்குஇறை வடிவம் ஆதி
எண்ணுதல் மனத்த துஆகும்
பாங்குறு செபாதி வாக்கின்
பணிபூசை ஆதி மெய்த்தாம். 245

முப்பொறி இயற்ற வந்த
முப்பெருஞ் சேவை என்றும்
பொய்ப்பரும் புறம்அ கம் பின்
புறவகம் என்ன மூன்றாம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மெய்ப்பொருள் நினைத்தல் நெஞ்சம்
விமலன்மெய்ப் பெயர்த்து வாக்காம்
ஒப்பில்முப் புண்ட ராதி
உளதுமெய் ஒழிந்த அல்ல. 246

புறம்உற இயற்றும் பூசை
புறம்அகம் தன்னில் தானே
அறிவுற இயற்றும் பூசை
அகம்பர சிவனைப் போற்றும்
புறம்அகம் அடைந்து நிற்கும்
மனமதே புறவ கம்தான்
மறுவறு பணிஓர் ஐந்து
வகைப்படும் அதனை யும்கேள். 247

வந்துறு தவமே கன்மம்
வண்செபம் தியானம் ஞானம்
ஐந்திவை முறையின் ஆகும்
அருந்தவம் ஈசற் காக
நொந்துஉடல் இளைத்தல் ஆகும்
மற்றுள நோன்பின் நோதல்
முந்துள தவமது என்று
மொழிந்திடப் படாது கண்டாய். 248

கண்ணுதல் பூசை செய்கை
கருமம்மற்று உள்ள வல்ல
அண்ணல்தன் பிரண வத்தோடு
அஞ்செழுத்து உருத்தி ராதி
நண்ணுறப் பயிலுந் தன்மை
நற்செபம் வேதம் ஆதி
பண்ணுறப் பயின்று நிற்கை
பகர்தரு செபம் ஆ காவால். 249

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவம்உறு படிவம் ஆதி
சிந்தனை தியானம் ஆகும்
அவம்உறும் ஆன்ம சிந்தை
ஆதிய தியானம் ஆகா
நவில்தரு சிவாக மத்தின்
நற்பொருள் தெரிதல் ஞானம்
பவம்உறு மொழிந்த நூலின்
பயன்உணர்வு அன்று ஞானம். 250

செப்பிய முறையின் இன்ன
சிவமகம் ஐந்தி னானும்
பைப்பொறி அரவு அணிந்த
பரமனை அருச்சிக் கின்ற
மெய்ப்பணி புரியும் பத்தி
மேவினோன் யாவன் அன்னோன்
ஒப்புஅறு பத்தன் என்றே
உரைத்திடப் படுவன் அன்றே. 251

பந்தனை அகன்று நின்ற
பரசிவ பத்தன் தன்னை
வந்தனை புரியும் நல்லோன்
புண்ணிய வழியை நண்ணும்
நிந்தனை செய்யும் தீயோன்
நினைப்பினும் உளம் ந டுங்கும்
வெந்தழல் நிரயம் எய்தி
மெலிகுவன் ஐயம் இன்றே. 252

ஈண்டுஒளி அமல பத்தன்
இருஞ்சிவ பத்தி நீத்துக்
கோண்தரு மனத்து வெய்ய
கொடியவன் தன்னை நோக்க

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தீண்டுதல் புரிதல் ஆகா
சேர்ந்தவன் உடன் இ ருத்தல்
வேண்டுவது அன்றுஎங் கேனும்
விடுவதே இயல்பு மாதோ. 253

என்றுபெற்று அண்ணல் தீக்கை
இலிங்கதா ரணமே ஆதி
அன்றுதொட்டு அமல பத்தன்
ஆயினோன் தன்னைப் போல
நின்றநல் சிவாக மத்தின்
நெறிவழாது ஒழுகி நீங்கு
புன்தொழில் பத்தன் தன்னைப்
பூசனை புரிக வன்றே. 254

தன்னெறி ஒழுகி நிற்கும்
சங்கர பத்தர் தம்பால்
துன்னுதல் அவர்தம் இல்லில்
துய்க்குதல் செய்க பத்தன்
அன்னியர் மனைஊண் ஆகா
அருவினைப் பவிகள் நல்கும்
கொன்நிதி தன் வ சத்தது
என்னினும் கொள்ளொ ணாதால். 255

அன்னிய தெய்வம் உன்னல்
புகழ்தல் அர்ச் சித்தல் ஆகா
அன்னிய தெய்வ சேடம்
அருந்தொணா அமல பத்தன்
அன்னிய தெய்வம் மேவும்
அகம்உறான் பூச னைக்கண்
அன்னிய தெய்வ பூசை
ஆளியை நோக்கு றானால். 256

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்றுமெய்ச் சிவலிங் கத்தோடு
இசைந்துநல் வீர சைவம்
நன்றிகொள் நெறியில் நின்ற
நற்சிவ பத்தன் ஆனோன்
வல்தரை இடங்கொண்டு உற்று
வயங்குதா வரலிங் கத்தின்
நின்ற நின் மாலி யந்தான்
கொள்ளுதல் நெறியன்று ஆகும். 257

யாண்டுஒரு தாவ ரத்திற்கு
இடையூறு வரினும் பத்தர்க்கு
ஏண்தரு சிவவே டத்தோர்க்கு
இடர்கள்வந்து உறினும் நில்லாது
ஆண்டுயிர் விடுத்தே யேனும்
அளிக்கமெய்ப் பரன் பொ ருட்டு
மாண்டவன் சிவனோடு ஒன்றாம்
பதத்தினை மருவும் அன்றே. 258

கண்டனன் ஆயின் முக்கண்
கடவுளை நிந்திப் போனைத்
தண்டனை புரிந்து கொல்க
அரிதுஎனின் சபிக்க நின்று
மண்தனில் வலியன் அன்றேல்
வார்செவித் துணைகள் பொத்திக்
கொண்டவன் அகன்று செல்க
குலைகுலைத்து அமல பத்தன். 259

ஏயும் ஆ சார நிந்தை
யாண்டுளது அவ்வி டத்தில்
போயுறல் ஒழிக என்றும்
புகல்சிவ நிந்தை செய்வோன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தீயகம் உறாது நிற்க
சிவநிந்தை யவர்க்கு நூறாண்டு
ஆயினும் பரிகா ரஞ்செய்து
அகற்றிடற்கு அரிது மாதோ. 260

சிற்கன சிவலிங் கத்தைச்
சேர்ந்துபூ சனைசெய் கின்றோன்
முற்கரு மங்கள் செய்யான்
முயல்வனேல் அமல பூசை
நற்பயன் இலை உ யர்ந்த
நடையினோன் தாழ்ந்த செய்யின்
பற்பல கருமம் எல்லாம்
பயன்அறப் பதிதன் ஆவான். 261

அஞ்செழுத்து உபதே சம்கொள்
பவன் நரர் தம்மைச் சென்று
நெஞ்சுறத் துதிப்பின் அன்னோன்
நெறிஅலா நெறியின் நின்றோன்
அஞ்சுறப் படும் இ லிங்கி
அறிவில் புன் புலவன் நூல்கள்
எஞ்சறக் கற்றோ னேனும்
கற்றிலன் என்பர் மேலோர். 262

கலிவிருத்தம்

நீடுயர் பத்திநன் னெறியின் நின்றுளோன்
பாடுறு தயிலநீர் சரும பாத்திரம்
கோடல் நன்று அன்றுதான் கொள்வன் ஏவலன்
வீடுவெந் நிரயமாய் மேவி நையுமே. 263

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இறப்பினும் இருநிலத்து எய்த வந்திடும்
பிறப்பினும் மற்றினும் பிறந்த சூதகம்
மறப்பிலது ஆம் இலிங் காங்கம் மன்னினோற்கு
உறப்பெறு கில சிறி தேனும் உண்மையே. 264

பூப்புறு துடக்கிலை புனிதன் பூசனை
வாய்ப்புறு மடவரல் தனக்கு மற்றவட்கு
ஏய்ப்புறு புதல்வனை ஈன்று போந்துள
நீப்பரும் சூதக நிடேதம் இன்றரோ. 265

பரமனை அருச்சனை பயிலும் மங்கையர்
அருமக உயிர்த்திடும் அகத்தில் சூதகம்
பரவுதல் இலசிவ பாத நீர்உற
விரிதரு மருவிய பாவம் யாவுமே. 266

இறையவன் இடங்கொளும் இடங்கள் தீர்த்தங்கள்
பொறைதரு திருவிழா அணைந்து போற்றுக
உறுசிவ பத்தர்அவ் வுழியின் ஏகுவோர்க்கு
அறமுடன் உதவுக அன்ன பானமே. 267

அன்னதோ யத்தின் மே லான தானமும்
மன்னுகொல் லாமைமேல் தவமும் மற்றிலை
என்னலால் அன்னதோ யத்தை ஈத்துறும்
நன்னிலை யேசிவ பத்தர் நண்ணுவார். 268

தன்னெறி தன்குலம் சார்ந்த வர்க்கு மா
நன்னெறி பெறுசிவ பத்தன் நல்குக
கன்னியை அனையவர் களிப்ப நல்குறும்
மின்னனை யார்தமை விரும்பிக் கொள்கவே. 269

விளம்பும்இந் நிலைபெறு வீர சைவர்தாம்
உளங்கொளும் அன்புடன் உவப்புற்று என்றுமே
கொளுங் குரு வொடு சிவ லிங்கம் கோதிலா
வளந்தரு பூசனை மதித்துச் செய்கவே. 270

புத்தித்தலம் - முற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் சங்கராய நம:

பத்தாவது

(10) உபயத்தலம்

கலிவிருத்தம்

போற்றுறு குருபரன் பூசை யே இள
ஏற்றுஉயர் கொடியினோன் பூசை என்பரால்
சாற்றுறும் இவர்ஒரு தத்து வப்பொருள்
வேற்றுமை இல்லைஓர் இடத்து மெய்ம்மையே. 271

மூலகா ரணன் என முழுது அ ளித்திடும்
பால லோ சனன்தனைப் பூசை பண்ணல்போல்
ஞாலமேல் வருகுரு பரனை நாடொறும்
ஏலவே அருச்சனை இயற்ற வேண்டுமால். 272

தன்னொரு மாயையால் யார்க்கும் சங்கரன்
பன்அருங் காட்சியிற் படாது ஒ ளிக்குமான்
மன்உறு குருபரன் வடிவம் தாங்கியே
முன்உறு காட்சியின் முளைக்கும் என்பவே. 273

பிறப்புஎனும் கடலினைக் கடக்கும் பெற்றிசேர்
மறப்புஎரி தாய மெய்ஞ் ஞான மாக் கலம்
சிறப்புற அருள்குரு தேவன் வந்தனை
உறப்பெறு கிலன்எனின் வரான் உ வந்துஅரோ. 274

எக்குரு பரன் கடைக் கண்ணில் இன்பமாம்
மெய்க்குறி உடையதோர் விமல மெய்ச்சிவம்
புக்கு அது வாய்உறுந் தன்மை போந்துறும்
அக்குரு பரன் எ வர் அருச்சிக் கப்படான். 275

சார்ந்தநல் உருவமாய்த் தயங்கு பாசநோய்
மாய்ந்திட வருசிவ ஞான மாநிதி
ஆம் தகை பெறுகுரு பரனுக்கு ஆக்கையால்
ஏய்ந்துள பொருளினால் இதம்செய் கிற்கவே. 276

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஏண்உறக் கதிவிழை இயல்பி னோன்குரு
ஆணையைக் கடக்கொ ணாததைக் கடந்திடின்
காண்உறச் சகமெலாம் காட்டும் ஈசனது
ஆணையைக் கடந்தவன் ஆவன் ஆணையே. 277

உபயத்தலம் - முற்றும்.

ஓம் சூலபாணயே நம:

பதினொன்றாவது

(11) திரிவிதசம்பத்தித் தலம்

கலிவிருத்தம்

செவ்விய குருவிடைச் சிவலிங் கத்திடை
எவ்வகை அன்புடன் இனிய செய்துறும்
அவ்வகை சங்கமம் தனினும் அன்பினை
வெவ்விய வினைதபு விவேகி செய்யுமால். 278

அருள்நிலை நின்றுஉயி ர்அளிக்கும் ஈசனாம்
ஒருவனே போகமும் வீடும் ஒன்றுறத்
தருவது செயக்குரு லிங்க சங்கமே
உருவுகொண்டு உலகினில் உலவும் என்பவே. 279

சரத்தொடு திரம்எனத் தரித்துஇ ரண்டுரு
அருட்சிவன் உலகினில் அருள்செய்து உற்றிடும்
திரத்தினில் அன்புசெய் செய்கை போலவே
சரத்திலும் அன்புசெய் தன்மை வேண்டுமால். 280

மண்ணொடு சிலைஎழு வாய்கொண்டு ஆற்றிய
அண்உரு இலிங்கமாம் அதனின் மேற்பட
நண்ணிய சங்கம நாமம் நண்ணுறும்
எண்ணுதல் அருஞ்சிவ யோகி என்பவே. 281

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மந்திரம் கொண்டுஉற வந்துஇ ருந்திடும்
எந்தையிங்கு அசரமாம் இலிங்க மேனியில்
நிந்தையில் சங்கமம் தன்னில் நீக்கற
நந்திநம் சங்கரன் நண்ணும் என்றுமே. 282

ஒன்றொரு பொருள்சிவ யோகிக்கு ஈந்திடில்
பொன்றுதல் தவிர்பலன் ஆகப் போந்துறு
என்றலின் அவன்தனக்கு எத்தி றத்தினும்
நன்றுற அளிப்பதே நன்று நன்றுஅரோ. 283

ஒப்பறும் ஒருசிவ யோகி பூசையால்
எப்பயன் அடைகுவன் யாவன் அன்னது
தப்பறு பலன்எனச் சகல நூலினும்
மெய்ப்பொருள் உணர்ந்தவர் விளம்பு வார்அரோ. 284

உகந்துள பரசிவ யோகி வந்துறின்
இகழ்ந்தனன் இருந்தவன் எய்தும் தீநெறி
புகழ்ந்தவன் தனைச்சிவன் போல வே உனி
மகிழ்ந்துஉயர் பூசனை மதிஞர் செய்வரே. 285

திரிவிதசம்பத்தித்தலம் - முற்றும்.

ஓம் கட்வாங்கினே நம:

பன்னிரண்டாவது

(12) சதுர்விதசாரத்தலம்

கலிவிருத்தம்

பத்தி கொண்டரன் பாதப் புனலெனச்
சத்து எனும்குரு சங்கம மெல்லடிக்கு
உய்த்த ஒண்புன லும்களித்து உண்பரால்
நித்த லும்சிவ நேசம் அடைந்துளார். 286

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொங்கு றும்புனி தத்திற் புனிதமாய்
மங்க லம்தனில் மங்கலம் ஆகியே
சங்க ரன்திருத் தாள்புனல் தாரணம்
இங்கு அ ளித்திடும் சித்திகள் யாவுமே. 287

அத்தன் நந்தி அணிந்த மலரொடு
பத்தி ரங்கள் தலையில் பரித்துள
சுத்தன் இங்குஓர் கணத்தினில் தூங்குகை
மத்த வேழம் மகம்பயன் உண்ணுவான். 288

உருத்தி ரன்கொளும் ஓதனம் கொள்கமற்று
உருத்தி ரன்பெற்று உயிர்ப்பது உயிர்க்கஓர்
உருத்தி ரன்பருகு ஒண்புனல் உண்கஎன்று
உரைத்தி டும்கொண்டு உயர்சொல் சுருதியே. 289

நற்ப ழம்கடி நாள்மலர் பத்திரம்
எற்ப தம்புன லேமுதல் யாவையும்
தற்பெ ரும்சிவ லிங்கம் தனக்குஅரோ
அர்ப்பி தம்செய்து கொள்ளுவன் அன்பினோன். 290

உலகு அனைத்தினும் ஓங்குஒளி ஆகியே
இலகு மெய்ச்சிவ லிங்க இறைபெருந்
தலைமை பெற்றிட லால்அவன் தானுகர்
பலவும் உற்றிடல் பத்தர்க்கு இயல்புஅரோ. 291

தீது அ கற்றும் சிவன்நிரு மாலியம்
மேதி னிக்கண் விமலற் தரித்துளோர்
ஆத ரத்தின் அடைகுவது அன்றிமற்று
ஏதி லர்க்குஅஃ்து எய்த ஒணாதுஅரோ. 292

அண்ணல் ஈசனுக்கு அர்ப்பிதம் செய்துபின்
உண்ணும் ஓதனத்து ஓர்அவிழ் ஒன்றினுக்கு
எண்ணும் மாபரி யாக இரும்பயன்
நண்ணு வார்சிவ பத்தர் நயந்துஅரோ. 293

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பரமன் உண்டு பவித்திர மாயது
நிரும லம்பெற லால்நிரு மாலியம்
பெருமை தங்கு நிருமலன் பெற்றுஉணும்
கருமை தங்கு கயவர்க்கு அடாதுஅரோ. 294

சுத்த மாகும் சுடர்சிவன் உண்ணுபு
வைத்த வானிரு மாலியம் கொண்டுறப்
பத்தி ஓவிய பாவிகள் ஆம்எனக்
கைத்து ளோர் அதி காரிகள் அல்லரே. 295

அருள்இ லிங்கத் துஅரும்பிர சாதத்தால்
வரும்இ ரும்பலன் வண்குரு சங்கமம்
தரும்இ ரும்பிர சாதமும் தந்திடும்
ஒருமை கொண்டுவந்து உண்பவர்க்கு என்றுமே. 296

ஆத லால்நல் லருட்சிவ லிங்கமெய்
நாதன் ஆகிய நற்குரு சங்கமம்
காதல் ஆகிக் கசிந்து தொழுதவர்
சாதம் ஆதர வின்தரித்து உண்கவே. 297

சதுர்விதசாரத்தலம் – முற்றும்.

ஓம் விஷ்ணுவல்லபாய நம:

பதின்மூன்றாவது

(13) உபாதிதானத்தலம்

கலிவிருத்தம்

தேசி கற்கும் சிவலிங்கத் திற்கும்மால்
ஆசு அகற்றும் அருட்சிவ யோகிக்கும்
பேசல் உற்ற அவர் பிர சாதவூண்
நேசம் உற்றவர் நின்று கொடுக்கவே. 298

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தான மூவகை தக்கசோ பாதிகம்
ஏனை மாநிரு பாதி சகசம்என்று
ஊன மாம்பலன் உன்னி அளித்தலே
ஞானம் மேவிலர் நச்சுசோ பாதிகம். 299

உபாதிதானத்தலம் - முற்றும்.

ஓம் சிபிவிஷ்டாய நம:

பதினான்காவது

(14) நிருபாதிகதானத்தலம்

கலிவிருத்தம்

விடுத்து நெஞ்சம் பலனை விழைதலை
அடுத்த ஈசனுக்கு அர்ப்பிதம் என்றுஉனிக்
கொடுக்கும் அந்தக் கொடையை உரைப்பர்இங்(கு)
எடுத்து நல்நிரு பாதிகம் என்னவே. 300

நிருபாதிகதானத்தலம் - முற்றும்.

ஓம் அம்பிகாநாதாய நம:

பதினைந்தாவது

(15) சகசதானத்தலம்

கலிவிருத்தம்

இரத்தல் செய்பவன் ஈபவன் ஈத்துறும்
அருத்தம் நின்றஅ ரும்சிவம் என்றுதான்
கருத்தன் என்னும் கருத்திலன் ஆகியே
தரத்தி டும்செயல் தானம் சகசமே. 301

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இறப்ப நன்கொடை யாவினும் மேலதாய்ச்
சிறப்பு அடைந்து செயும்சக சக்கொடை
பிறப்பு எனும்துர்ப் பிணிமருந்து ஆகிய
மறப்பு அரும் சிவ ஞானம் வழங்குமால். 302

பத்த ரோடு பரமனுக்கு ஈத்துறு
மெய்த்த தானம் சகசம் விமலனுக்கு
உய்த்த போதுஒன்று உதவுநற் பாத்திரத்து
அத்தம் ஆயிரம் ஈயும் அரும்பயன். 303

பாத்தி ரம்சிவ னுங்கன பாத்திரம்
சாத்தி ரம்தெரி தக்க குரவனும்
ஏத்தி ஒன்றவர்க்கு ஈயும் அரும்பலன்
மூத்து நிற்கும் முடிவிலது ஆகியே. 304

காணு றும்சிவன் ஆகிக் கருநெறி
நாணு றும்சிவ ஞானம் மருவியே
ஏணு றும்சிவ யோகிக்கு இடும்பொருள்
மாணு றும்பர மார்த்தம் எனப்படும். 305

எக்கொ டைக்கும் எடுத்தசற் பாத்திரம்
மிக்க மெய்ச்சிவ யோகி மிகையென
ஒக்க ஒன்றிங்கு உரைப்பது இலைஇலை
பக்க நூல்கள் பலவினும் என்பவே. 306

சாந்த மாய தனிச்சிவ யோகி கை
ஏய்ந்த வோர்பிடி பிச்சை இடும்பலன்
கூர்ந்த ஓர்சத கோடி மகம்செயும்
மாந்த ரானும் மருவுதல் அன்றுஅரோ. 307

திருத்தி ஒண்சிவ யோகி பெறின்சிவன்
திருத்தி எய்துவன் அச்சிவன் எய்திய
திருத்தி கொண்டு செறியும் உலகெலாம்
திருத்தி எய்தும் சிவமயம் ஆதலால். 308

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆத லால்சிவ யோகிக்கு அனுதினம்
காத லால்எக் கருமத்தி னானுமே
ஓத னாதியில் ஒன்றும் குறைவுஅறத்
தீது இலாது திருத்திசெய் கிற்பரே. 309

தாவு இலாதுஉயர் சச்சிதா னந்தமாய்
மேவும் ஈசனுக் காக விரும்பியே
யாவும் நல்குவன் யாவன் அனையனே
ஓவி லாத ஒருபெருஞ் சங்கரன். 310

உரைத்த நன்னெறி உற்றுயர் தானியாய்
அருத்த மாமயன் ஆதியர் வாழ்வினில்
விரத்தன் ஆகும் விழுமிய பத்தனே
தரித்து நிற்கும் மாகேசத் தகைமையே. 311

சகசதானத்தலம் - முற்றும்

1-ஆவது பத்தத்தலம் முற்றிற்று.

2-ஆவது மாகேசத் தலம்

(இதன் உட்பிரிவு)

கலிவிருத்தம்

சாற்றினை உவந்துபத் தத்த லத்தினைப்
பாற்றிய வினைநெறிப் பத்தன் இங்ஙன்எவ்
வாற்றினில் அடைவன்மா கேசத் தன்மையை
மால்திரி கணேசநீ வகுத்துக் கூறுவாய். 312

மாசறு சகசநல் தானம் வல்லனாய்
வாசவன் ஆதியர் பதத்தின் மாற்றிய
நேசமோடு ஒரூபெரு நேசத்து உற்றவன்
ஈசனை இணையில் மாகேசத் தன்மையான். 313

Digitization by Hindu-Heritage-Foundation of Amerïca. HHFA(USA)

முன்னர்நம் சங்கரன் மொழிந்த வாறு இவண்
பன்னுவன் மகேசநல் தலத்தின் பான்மையும்
தன்னிகர் மகேச்சுரன் தன்மை அங்கு அதன்
பின்னர்வந்து இலிங்கநல் நிட்டை பெற்றிடும். 314

பூருவாச் சிரயம்அத் துவிதம் போந்துபின்
ஆரும்ஆ வாகனம் அட்ட மூர்த்திபின்
சாரும்யாண் டினும்நிலை தடுத்தல் பின்சிவம்
பாரமாம் உலகொடு பத்த னாம்தலம். 315

இம்முறை நவவிதம் எய்தி நின்றுள
மெய்ம்மலி மகேசநற் றலம் வி ளம்புதும்
செம்மையோடு ஒருங்கிய சித்தன் ஆகியே
எம்முனி வரஇருந்து இனிது கேட்கவே. 316

ஓம் ஸ்ரீகண்டாய நம:

பதினாறாவது

(16) மாகேச்சுரத்தலம்

உலகினை அளித்துஅருள் உருத்தி ரன்மிகும்
உலகினை உண்டிடும் ஒருவன் தன்னினும்
தலைமையன் என்றுஎவன் துணியும் தன்மையான்
இலகுறும் அனையன்மா கேசன் என்பவே. 317

விமலன்ஆ கியநுதல் விழியி னோனொடு
சமவரா கியநிலைச் சதுமு கப்பெருங்
கமலன்ஆ தியர்தமை ஒப்புக் காண்குறும்
அமைவிலான் அரியமா கேசன் ஆகுவான். 318

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பங்கயன் ஆதிய பசுக்கட்கு என்றுமே
இங்குஇறை யாகிய வீரன் தன்னையே
துங்கன்என்று உணர்திரு துணிவு பெற்றுளோன்
மங்கல நெறியுடை மகேசன் ஆகுவான். 319

பெருமலம் உற்றிடு பிரமன் ஆதியர்
தரும்வலி இலர்தனி முத்தி நல்குவோன்
நிருமல மகேசனே என்னும் நெஞ்சினோன்
மருவரு நிலையுடை மகேசன் ஆகுவான். 320

மால்அயன் ஆதியர் மருவு வாழ்வெலாம்
சாலஓர் துரும்புஎனத் தள்ளி ஐம்புல
னால்உறு சுகங்களை மகேசன் ஆற்றியே
சீலமோடு அவன்சிவா னந்தத்து எய்துவான். 321

பிறர்மனை பிறர்பொருள் பெறல் அ வாச்சினம்
அறுபகை முதல்நவை அனைத்தும் நீக்கியே
பொறையொடு பரனது புகழ் வி ரும்பினன்
நெறிதரு சிவாகம நேயம் உள்ளனாய். 322

அரற்குஉயர்வு அளித்திடும் அளவைக் கொண்டுதான்
பரற்குஇதம் செய்துநம் பரம்பொ ருட்டவாய்த்
திரத்தொழில் புரிந்துமெய்ச் சிவநிந் தைக்கணே
மரித்திடும் நிலையினும் வலியன் ஆகியே. 323

நிந்தனை உடையரை நீக்கி ஓர்சிவ
வந்தனை உடையரை மருவி என்றுமே
புந்தியின் மகிழ்பெறீஇப் புனித னாய்உறும்
மைந்துடை யவன்அரு மகேசன் ஆகுவான். 324

மாகேச்சுரத்தலம் - முற்றும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் பக்தவத்சலாய நம:

பதினேழாவது

(17) இலிங்கநிட்டைத்தலம்

கலிநிலைத்துறை

ஆவி மாளினும் சிவலிங்க நிட்டையே அடைந்தோன்
ஓவி லாநெறி நிற்கஒன்று உணர்தர உணர்த்தும்
தாவி லாத இச் சிவலிங்க நிட்டையம் தலம்தான்
தேவ தேவனைப் பொருள்எனும் மகேசனைச் செறியும்.
325

பொருள் எ லாம்சிதைந்து உயர்தலை அற்றுவீழ் பொழுது
மருள் உ லாம்சிவ லிங்க பூ சனைவிட ல்ஆகா
தெருளி னால்அரன் பூசனை செய்திடாது உண்ணும்
அருளி லான்கரத்து உற்றிடும் முத்திமா நிதியம். 326

சம்பு பூசனை ஆகிய தக்கதோர் தருமம்
இம்பர் வீடுற அளித்திடும் இனையதை அன்றி
நம்பும் ஏனைய சிறுபயன் நல்குறு தருமம்
கும்ப மாமுனி செய்வதுஎன் பெறுவது கொண்டு. 327

நியமம் கொண்டுபூ சனைசெயும் நிமலலிங் கத்தில்
செயலில் அன்புடன் அர்ப்பிதம் செய்தசே டத்தை
அயில்பு மெய்வளர்ப் பவன்எவன் அனையதன் மையனே
மயல்அ கன்றுஉயர் தருதனி வீரமா மகேசன். 328

விடுத்து மற்றுள பயன்எலாம் விமலலிங் கத்தில்
அடுத்த நெஞ்சமும் பரமலிங் கத்துஅரும் புகழே
எடுத்துஅ றைந்திடு வாயும்அர்ச் சனைசெய என்றும்
படைத்த கைகளும் உடையனே உருத்திரன் பகரின். 329

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பரம லிங்கநல் நிட்டையை உளன்பரா னந்த
ஒருபெ ருஞ்சிவம் அதனையே அடைவன்என் றுஉரைக்கும்
இருள்அ றுங்கலை யாவும்அற்று அவன்தனக்கு என்ஆம்
திரம்இ ழந்துறு துறக்க கா ரணம்எனும் செயல்கள். 330

நீறு கண்டிகை புனைந்துநன் னெறிஇடை நின்று
தேறும் அம்சிவ லிங்கமா நிட்டையில் சிறந்த
பேறு அடைந்தவன் தன்னைஅப் பிரமனே முதலோர்
மாறு அரும்துதி செய்துநின்று இறைஞ்சுவர் மன்னோ.
331

இலிங்கநிட்டைத்தலம் - முற்றும்.

ஓம்பவாய நம:

பதினெட்டாவது

(18) பூருவாச்சிரய நிரசனத்தலம்

கலிநிலைத்துறை

கொண்டு றுஞ்சிவ லிங்கநன் னிட்டையைக் கொண்டு
விண்டு றும்ட!வ நெறியடை வீரமா மகேசன்
கண்ட ருஞ்சிவ நெறிவிலக் காய்இவண் கலந்த
பண்டு றுங்கரு மங்களோ விடுத்திடப் படுமால் - 332

சோதி லிங்கநன் னிட்டையின் விலக்குஎனத் தோன்றும்
சாதி தன்குல தருமங்கள் அனைத்தையும் தணந்த
நீதி யொன்றுளன் ஆகிய நிலைபெறு மகேசன்
தீது அடைந்துள தொல்லைஆச் சிரயத்தில் தீர்ந்தோன்.
333

பற்று றுஞ்சிவ தீக்கையின் பவித்திரன் தனக்கு
முற்ற ருங்கரு மங்களின் என்பயன் மூடம்
பெற்று றும்பவப் பிணியினர் ஏயவை பெறுவார்
உற்றி டும்சிவ தீக்கையி னோன்அவை ஒழியும். 334

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மனிதர் சுத்தரும் அசுத்தரும் எனஇரு வகையர்
புனிதர் மெய்ச்சிவ தீக்கையைப் பொருந்தினர் ஒழிந்தோர்
இனிதுள னுஞ்சிவ தீக்கையை இலாதவர் என்ப
வனிதை பங்குடை அமலநூல் பெருநெறி வல்லோர்.335

வருண நன்னிலைத் தருமங்கள் இருவகைப் படும்ஒன்று
அரன்அ றைந்தது மற்றையது அயன்அறைந் ததுவாம்
பரன்அ றைந்தது பயிலுவர் சிவாச்சிர யத்தர்
பிரமன் நல்கிய தருமமே பிராகிரு தர்க்கு. 336

முந்தை உற்றுள இந்தனத் துருவங்கள் மூண்ட
வெந்த ழல்கவர்ந்து உண்ணுற விரவுறா வாபோல்
நந்து றச் சிவ தீக்கையை நண்ணினோர் தமக்குள்
பந்தம் உற்றுள சாதிவேற் றுமைஇலை பகரின். 337

பாசம் அற்றுஉயர் தீக்கையின் சிறந்துள பத்தர்
ஈச னைப்பெறு பத்தர்பால் ஓரிடத்து என்னும்
பேசில் உற்றிடு சாதிஉன் னுதல்மிகப் பிழையென்று
ஊசல் ஒத்துழல் பிறப்பு இறப்பு அகன்றவர் உரைப்பார்.
338

பூருவாச்சிரயநிரசநத்தலம் - முற்றும்.

ஓம் சர்வாய நம:

பத்தொன்பதாவது

(19) அத்துவித நிரசனத்தலம்

அறுசீர்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பூசனை செய்வோன் கொள்வோன்
பேதம்என்று உறலால் போற்றும்
பூசனை ஆதி கன்மம்
பொன்றலால் இலிங்க நிட்டை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நாசமது உறலால் எங்கும்
பெறஞானம் இலாமை தன்னால்
ஈசனை வந்திக் கின்றோன்
எங்கும்அத் துவிதம் செய்யான். 339

இறையவன் இயக்கு கின்றோன்
இயங்குறப் பட்டு நிற்போன்
அறைதரும் உயிர்என்று எண்ணி
ஆயஇவ் வேறு பாடு
பெறுமுறை அதனால் அந்தப்
பிரேரகன் தனைஅர்ச் சித்த
நெறியொடு புரிக செய்யேன்
நிகழ்த்தும்அத் துவிதம் தன்னை. 340

பராபரன் பதியாம் அந்தப்
பதிதொடர் பசுவாம் ஆன்மா
விராவிஇவர் தம்மில் என்றும்
வேறுபாடு இலரே ஆயின்
தராதலம் அதனில் ஈசத்
தன்மையோடு அடிமைத் தன்மை
வராஎன உரைப்பர் மிக்க
மறைகள்ஆ கமங்கள் வல்லோர். 341

எம்முறை பராப ரன்தான்
இலங்குறு போத கத்தான்
மெய்ம்மலி காட்சி உற்று
விளக்கமோடு எய்தி நிற்கும்
அம்முறை பெற அ டைந்து
அத்துவி தப்பேர் வாழ்க்கை
இம்மையின் ஞானம் இல்லோர்க்கு
என்றும்இன்று ஆகும் அன்றே. 342

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கரும ஏ துவினைக் கொண்டு
காண்குறும் வேறு பாடு
மருவுறும் அதனால் என்றும்
வளங்கெழும் அருச்ச ன்ஆதி
புரிதரு நெறியில் நின்றோன்
பொருந்துநற் கருமம் எல்லாம்
ஒருவவந்து எய்தும் அத்து
விதத்தினை உற்றி டானால். 343

அத்துவித நிரசனத்தலம் - முற்றும்.

ஓம் திரிலோகேசாய நம:

இருபதாவது

(20) ஆவாகனநிரசனத்தலம்

அறுசீர்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அச்சிவ லிங்கம் வந்தித்து
அத்துவி தத்தை நீத்தோன்
மெய்ச்சிவ மயமாய் நின்று
விளங்குதன் இட்ட லிங்கத்து
இச்சையின் அரனை ஆவா
கனித்திடல் இயல்புஅன்று என்பர்
பொய்ச் செயல் கடந்து மிக்க
புலக்குறும்பு எறிந்த வீரர். 344

சிற்கலை யொடுதி கழ்ந்த
சிவலிங்கம் தீக்கை தன்னால்
நற்குரு அளித்த அன்றே
நண்ணுறும் அமலன் என்றும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொற்புறும் உணர்வின் மாறாய்ப்
பொருந்தும்ஆ வாக னம்தான்
பின்பெறு தினங்கள் தோறும்
பேணுத லால்என் பேறே. 345

என்றுநல் இட்ட லிங்கத்து
இசைந்துநல் நிட்டை பெற்றோன்
தன்தனி இலிங்கம் தன்னில்
சங்கரன் தன்னை வைத்துப்
பின்தனி விடுக்க ல்ஆகா
துணிவுஇது பெருநூற்கு என்று
தென்தமிழ் மலயத்து உற்ற
சிவமுனி அறிந்து கொள்ளே. 346

ஆவாகன நிநரசனத்தலம் - முற்றும்.

ஓம் சிதிகண்டாய நம:

இருபத்தொன்றாவது

(21) அட்டமூர்த்தி நிரசனத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அத்தனோடு உயிர்க்குஇங்கு எவ்வாறு
அயிக்கஅத் துவிதம் ஆகாது
அத்திறம் இறைவ னுக்கும்
அம்புவி ஆதி கட்கும்
உய்த்துணர் அட்ட மூர்த்தித்
தன்மையங் வொருவற்கு என்றும்
வைத்ததும் அதிட்டா னத்தால்
வயங்குஒரு மையினால் அன்றால். 347

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காரிய ஞாலம் ஆதி
கருத்தன்ஒண் மகேசன் ஆகும்
சீரிய குலாலன் ஆகா
செய்கடம் அதுபோல் ஈசன்
பாரிய உலகம் ஆகான்
பராபரன் ஆன்மா என்பர்
ஏரிய நிலமுன்பு ஆய
எண்வகை உடம்பி னுக்கும். 348

நிலமுதல் ஆய எல்லாம்
அசேதநம் நின்ற ஆன்மா
மலம்உறு மூடன் ஆகும்
ஆதலால் வயங்கும் ஈசன்
நலவகை அட்ட மூர்த்தம்
ஆகிய உடம்பி னுக்கும்
இலகுறும் ஆன்மா ஆகும்
ஈசற்கும் பேதம் உண்டோ. 349

பார்புனல் அங்கி வங்கூழ்
விசும்பொடு பரிதி திங்கள்
ஆர்தரும் ஆன்மா என்னும்
அட்டமூர்த் தங்கள் தம்மில்
சீர்கெழு பரமன் தன்னை
வேறுறத் தெரிந்து காண்போன்
நேர்தரும் அட்ட மூர்த்தி
நிராசகன் ஆகும் அன்றே. 350

அட்டமூர்த்திநிரசனத்தலம் - முற்றும்.

Digitization by Hihdu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் சிவபிரியாய நம:

இருபத்தியிரண்டாவது

(22) சர்வகத நிரசனத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இருந்திடும் இறைவன் எங்கும்
என்றிடின் இறைவற்கு எங்கும்
வரந்தரு பூசை யாகும்
சிவலிங்க மாத்தி ரத்தில்
அரந்தையின் நிட்டை கூடாது
ஆதலால் அமலன் எங்கும்
பரந்தவன் என்று கூறப்
படான்என அறிந்து கொள்ளே. 351

நிறைந்தவன் எங்கு மேனும்
நிமலன்தன் ஆத ரத்தில்
சிறந்துறு நிறைந்த வன்னி
தன்மரம் செறித லேபோல்
அறிந்திதை அமலன் தன்னை
அனைத்தையும் விடுத்துத் தன்பால்
உறைந்திடும் இட்ட லிங்கத்து
உவந்து அருச் சிக்க மாதோ. 352

எங்கணும் நிறைவோன் ஆக
இயம்பினும் அமலன் தன்னைத்
தங்குறு நூல்கள் எல்லாம்
தனதுபற்று ஆகி நின்ற
மங்கலம் ஆம் இ லிங்கம்
ஆதிய வடிவில் என்றும்
அங்கணன் அதிகம் ஆக
அமர்வன்பூ சனைப் பொருட்டு. 353

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உருத்திர னினது மெய் ஏது
உற்றநன் மங்க லத்தைப்
பரித்திடும் அகோரம் ஆகிப்
பாவத்தின் அகன்று நிற்கும்
உரைத்ததில் உறைவோன் ஆகி
ஒளிர்வைநீ என்று மிக்க
கருத்தொடும் அறையா நிற்கும்
கடிவுஅறும் சுருதி அன்றே. 354

ஆதலால் அருச்ச னைக்கண்
உயர்ந்தவன் அனைத்தும் விட்டுக்
காதலால் சிறந்து மூல
காரணன் விளங்கா நின்ற
சோதியாம் இட்ட லிங்கம்
துணிவொடு பூசை செய்க
நீதியாம் அனையன் எங்கும்
நிறைதலை விலக்கி னானே. 355

சர்வகதநிரசனத்தலம் - முற்றும்

ஓம் உக்ராய நம:

இருபத்து மூன்றாவது

(23) சிவஜகந்மயத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பூசனை நியமம் தன்னால்
பொருந்திலிங் கத்தின் கண்ணே
தேசுற இலங்கா நின்ற
சிவன்தனை அருச்சிப் போனும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஈசனை உலகம் எல்லாம்
வியாபகன் என்னக் கொண்டு
பாசம்அது அகல நின்று
பாவிக்க வேண்டும் அன்றே. 356

மண்ணினில் தோன்றும் கும்பம்
மண்ணின்வேறு ஆமோ வேலைக்
கண்ணினில் தோன்றும் மொக்குகள்
நுரைதிரை கடலின் வேறோ
எண்ணிடின் பரனால் தோன்றும்
இருஞ்சரா சரமே ஆகப்
பண்ணுறுத்து உலகம் எல்லாம்
பரனில்வேறு ஆமோ ஆகா. 357

ஒண்தளிர் முதலாய் உள்ள
உருவொடு மரம்நின் றாங்கு
மண்டல முதலா உள்ள
வடிவொடு பரமன் நிற்கும்
கண்டுறும் இழையின் ஆய
காழக நூல்ஆ மாபோல்
பண்டுள உலகம் எல்லாம்
பரன்மயம் ஆகும் அன்றே. 358

தன்னொரு சத்தி கொண்ட
மலர்ச்சியால் சகங்கள் ஆகி
மன்னுறும் இறைவி ரிந்து
படம்குடி வடிவுஆ மாபோல்
இந்நிலை அதனால் எல்லாம்
இறைமயம் கயிற்றில் தோன்றும்
பந்நகம் வேறுஇ லாத
பான்மைபோல் பரனில் ஒன்றும். 359

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கயிற்றரவு இப்பி வெள்ளி
குற்றியில் கள்வன் மிக்க
வெயிற்படு கானல் தெண்ணீர்
விண்ணிற்கந் தர்வ ஊர்போல்
பயிர்ப்பறு நித்த சச்சி
தானந்த சிவத்தின் கண்ணே
செயப்படு பொருளாய்த் தோன்றும்
செப்பிய உலகம் அன்றே. 360

சிவஜகன்மயத்தலம் - முற்றும்.

ஓம் கபாலிநே நம:

இருபத்து நான்காவது

(24) பத்த தேகிகதேவத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சங்கரன் ஆகும் ஈசன்
சகமயம் எனினும் உள்ளப்
பங்கய மலரில் என்றும்
பத்தர்பாற் சிறந்து தோன்றும்
பொங்குறு கயிலை பொன்னம்
பொருப்பொடும் அந்த ரத்தும்
அங்குஅது போல்வி சேடித்து
அமர்தரும் இறைவன் அன்றே. 361

அலர்கதிர் நிறைந்து விம்பத்து
அளவுபட்டு அமர்தல் போல
உலகுஉரு வாய்நி றைந்த
ஒருவனும் பத்தர் நெஞ்ச

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மலர்மிசை இலகும் உன்தன்
வடிவெனும் இலிங்கம் ஈச
பலர்புகழ் பத்தர் தம்பால்
பதியும்என்று உரைக்கும் வேதம். 362

சுத்தர்கள் இடத்தும் தீர்ந்த
துறவினர் இடத்தும் ஞானச்
சித்தர்கள் இடத்தும் மிக்க
சிவவேடத் தவர் இடத்தும்
உத்தமர் இடத்தும் பாசம்
உதறும்மா கேசர் ஆகும்
பத்தர்கள் இடத்தும் என்றும்
பரசிவம் விளங்கும் அன்றே. 363

இந்நிலை மகேசன் என்போன்
ஏதிலர் இடத்தில் தீர்ந்த
தன்னக விழைவி னோனாய்த்
தனாதுஇட்ட லிங்கம் தன்னில்
மன்னிய மனத்தன் ஆகிச்
சகம்சிவ மயமாய்க் கண்டு
பின்னம்இல் நிலையில் நின்ற
பெயர்ப்பிர சாதி ஆவான். 364

பத்ததேசிகதேவத்தலம் - முற்றும்.

இரண்டாவது மாகேசத்தலம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

3-ஆவது பிரசாதித்தலம்

(இதன் உட்பிரிவு)

கலிவிருத்தம்

உரைத்தனை மகேசனல் ஒழுக்கம் உற்றுநீ
கருத்துறும் இரேணுக கணேசப் பேரினோய்
அருத்திகொள் மகேசனாம் அனையன் எங்ஙனம்
வரப்பிர சாதிதான் ஆகும் வண்ணமே. 365

தனக்குறும் இலிங்கநிட் டாதி சார்பினால்
வினைப்பகை கடந்துள விறல்ம கேசன்ஒண்
மனப்பிர சாதமே மருவும் ஆற்றினால்
கனப்பிர சாதியாம் என்பர் கற்றுளோர். 366

சாற்றுறு புகழ்ப்பிர சாதி யின்தல
வேற்றுமை ஏழ்வகைப் படும்வி ளம்புறின்
தோற்றுறும் இயல்பிர சாதித் தூய்த்தலம்
போற்றுற ஆதியில் பொருந்தும் என்பவே. 367

சற்குரு லிங்கசங் கமநல் பத்தர்பின்
சிற்பர சரணர்ஒண் சேட மேயென
நிற்பவர் மான்மியம் யாம்நி கழ்த்துதும்
பொற்புறு முனிவர் புகன்ற வாறுஅரோ. 368

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் காமாரயே நம:

இருபத்தைந்தாவது

(1) பிரசாதித்தலம்

கலிவிருத்தம்

சிந்தனை நிருமலம் செறியும் அக்குறி
சந்ததம் உயர்பிர சாதம் என்பரால்
வந்துறும் அதுசிவ லிங்க மாஉரு
எந்தைதன் அருட்பிர சாதத்து எய்துமே. 369

நிருமலன் தனக்குஉற நிவேதி தம்செயும்
அருநிரு மாலியம் அரிய சைவர்தம்
பெருமன நிருமலம் பெறஅ ளித்திடற்கு
ஒருபெருங் காரணம் என்பர் ஓர்ந்துளார். 370

போதகா ரணமெனும் புனிதன் நற்பிர
சாதமா கியநிரு மாலி யம்தனைத்
தீதுஇலா மனப்பிர சாதத் திற்குஉணும்
ஈதுஉளான் நற்பிர சாதி என்பவே. 371

தத்துவ சுத்தியே அந்த சுத்திதான்
அத்தன்உண்டு ஒழிபிர சாதம் ஆயினது
ஒத்திட அரியதுஓர் உணர்விற்கு ஏதுவாம்
சித்தநின் மலம்தனைச் செய்யும் என்பவே. 372

தனக்கென வீட்டுபு தந்த யாவையும்
நினைப்பஅரிது ஆகிய நிமலற்கு ஆக்கியே
மனப்பிர சாதமே மருவ உண்கஎன்று
அனைத்தையும் உணர்ந்தவர் அறைகு வார்அரோ. 373

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பரன்நிரு மாலியம் பவம ருந்துநல்
குரவுடன் இடர்இடை யூறு கொல்வது
திரம்உற ஆயுளைச் செய்வது இன்பமே
தருவது முத்தியும் தருவது ஆகுமால். 374

பத்திர மலரொடு பலாதி யாவையும்
வத்திரம் ஐந்துடை வள்ளற்கு ஆக்கியே
துய்த்துறு நிலையினோர் தொன்மை பாதகக்
கொத்தினை அடியொடுங் கொல்வர் என்பரே. 375

சம்புவின் அருட்பிர சாதம் என்னவே
நம்புறு குருவொடு ஞான சங்கமர்
தம்பிர சாதமும் தான்நு கர்ந்திடும்
வெம்புறு பவம்எறி வீர சைவனே. 376

பிரசாதித்தலம் - முற்றும்.

ஓம் அந்தகாசுர சூதநாய நம:

இருபத்தாறாவது

(2) குருமான்மியத் தலம்

கலிவிருத்தம்

சீரணி தரும்எலாச் சித்தி கட்கும்ஓர்
காரண உயர்குரு வாகும் கண்ணுதல்
தாரணி தனில்குரு வடிவம் சார்ந்துஅருள்
பேரணி கலமொடு பிறங்கும் என்பவே. 377

நிட்கள உணர்உரு நித்த னாம்சிவன்
வட்குஅறு குருபர வடிவி னால்ஒரு
பெட்புறு சகளனாய்ப் பெரிது உயிர்க்குஎலாம்
தட்குஅரும் அருள்செயச் சரிக்கும் என்பவே. 378

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பரசிவன் உயர்குரு பரம சற்குரு
வரம்உறு பரசிவன் என்ன வைப்பர்இவ்
இருவரும் வேறுஎன எண்ணு றான்பவம்
வெருவுற வருசிவ ஞானம் வேட்டுஉளான் 379

கரசர ணாதிகள் கடுக்கும் தன்மையால்
நரரொடு குரவனை ஒப்பு நாடுறார்
உரம்உறு குரவனை உவந்து போற்றியே
பரகதி வேண்டுநர் பணிதல் வேண்டுமே. 380

நற்குரு பத்தியில் லார்க்கு நாடுறின்
நற்சிவ பத்தியும் சனித்தி டாதுஒரு
சிற்கன சிவனிடை செய்யும் பத்திபோல்
சற்குரு பத்தியும் செய்யத் தக்கதால். 381

குருமான்மியத் தலம் - முற்றும்.

ஓம் கங்காதராய நம:

இருபத்தேழாவது

(3) இலிங்கமான்மியத் தலம்

கலிவிருத்தம்

அருட்குரு மான்மிய அறிவின் மேன்மையான்
மருட்கழி பரசிவ லிங்க மான்மியம்
பொருட்பட அறிகுவன் புகழ்இ லிங்கமே
தெருட்சக காரணம் என்னத் தேர்கவே. 382

ஆதியாய்ச் சச்சிதா னந்தம் ஆகிவான்
சோதியாய்த் தளையிலாச் சுத்த வாழ்வதாய்
வேதகா ரணம்எனும் விமல லிங்கம்ஓர்
நாதனாம் குருவலால் நணுகல் ஆகுமோ. 383

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேதநா ரணரும்அவ் விசும்பில் தோன்றிய
சோதியாம் இலிங்கம்முன் தொடர்ந்து காண்கிலர்
ஆதலால் யாவரே அறிவர் மாதுஉமை
பாதியா மிளிர்தரு பரம லிங்கமே. 384

பிறகட வுளர்நிக ராத பேருலகு
இறைமைகொள் பவன்எனும் இயல்பை என்றுமே
முறைதரு பரசிவ லிங்க மூர்த்தியாய்
உறைபர மன்தனக்கு ஓதும் வேதமே. 385

பெரிதுஉயர் தருபர சத்தி பீடிகை
தெரிதர வருபர சிவம்இ லிங்கம்அவ்
அரிதுஉணர் வுறுசிவ சத்தி ஆகிய
ஒருதனி இலிங்கமே உலகம் யாவுமே. 386

பற்பல மொழிகொடுஎன் பயன்வன் பாசமோடு
உற்பவம் அறுசிவ யோகி கள்மனம்
நிற்பதுஎவ் இடத்தில்அவ் விமல லிங்கமே
அற்புதம் உறுபரப் பிரமம் ஆகுமால். 387

தாமரை மலர்மிசைத் தலைவன் ஆதியாம்
காமரு கடவுளர் சனகன் ஆதியர்
மாமுனி வரர்சிவ லிங்கம் வந்தியார்
தாம்உறு நிலையினைத் தான்அ டைந்தனர். 388

இலிங்கமான்மியத்தலம் – முற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் லலாட அட்சாய நம:

இருபத்தெட்டாவது

(4) சங்கம மான்மியத்தலம்

கலிவிருத்தம்

ஆரியன் அருளினால் அறிந்துஅ டைந்துள
பேரியல் இலிங்கநற் பெருமை கொண்டுதான்
சீரிய உலகெலாம் சிவம்எ னத்தெரிந்து
ஓரியல் கொடுசரத்து உயர்ச்சி கூறுவார். 389

. உலகுஉரு வாகிய ஒருத னிச்சிவம்
இலகுஉறு தன்வடி வாக என்றுமே
மலைவுஅற உணர்பவன் யாவன் மற்றுஅவன்
அலைவுஅறு சங்கமம் ஆகும் என்பவே. 390

. சிவமயம் எனச்சகம் யாவும் தேர்பவன்
எவன்அவன் மலஇருள் இரிக்கும் சோதியாய்
அவிர்உணர் உடையவன் எவன்அ வன்தொடர்
உவமையில் ஒருசிவ யோகி என்பவே. 391

முற்றுறு காமமும் சினமும் மோகமும்
அற்றவன் உறவொடு பகையும் அற்றவன்
உற்றிடு பசும்பொனோடு ஓடும் ஒன்றுஎனப்
பெற்றவன் உயர்சிவ யோகிப் பேரினோன். 392

. நந்துறும் அரியமெய்ஞ் ஞான மெய்ச்சிவ
சிந்தனை உடையனாய்த் தீர்ந்த வெண்பவப்
பந்தனை ஒருவிய பரம யோகியே
வந்துறு பரசிவ மயன்எ னப்படும். 393

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓங்குறு புகழ்ச்சிவ யோகி தன்துணைப்
பூங்கம லத்திரு வடியில் பூந்துகள்
ஈங்குளவர் மனையிடை இசைந்து வீழ்தரும்
ஆங்குஅது புண்ணியத் தலமது ஆகுமால். 394

தரிசனம் அளித்திடும் சகல சித்தியும்
பரிசனம் அழித்திடும் பாவம் யாவையும்
பரிசுறும் மலிபுகழ்ப் பரம யோகியின்
பரிசறு பூசனை முத்தி காரணம். 395

மெய்ப்பர சிவனது மெய்ம்மை உற்றுஉணர்ந்து
அப்பர சிவசுகத்து அழுந்தும் மேன்மையால்
ஒப்பறும் ஒருசிவ யோகி சங்கம்இங்கு
எப்பயன் உதவிடாது இயம்பும் காலையே. 396

சங்கமமான்மியத்தலம் - முற்றும்.

ஓம் காலகாலாய நம:

இருபத்தொன்பதாவது

(5) பத்தமான்மியத் தலம்

கலிவிருத்தம்

குருவொடு மெய்ச்சிவ லிங்கம் கோதுஅறு
சரம்உறு புகழினைச் சாற்றும் தன்மையால்
பரவைசூழ் உலகினில் பத்தன் தானும்அவ்
வரம்உறு துதியைஅவ் வாறு மன்னுமே. 397

சந்திர சேகரன் தன்னை நல்அர
விந்தம்என் மனமொழி மெய்யி னால்தினம்
வந்தனை புரிபவன் யாவன் மற்றவன்
பந்தம்அது அறுசிவ பத்தன் ஆகுவான். 398

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாவமாய் உறுசிவ பத்தி என்பது
யாவர் ஆயினும்பெறற் குஅரியது இங்குஅது
மேவினான் யாவன்மற் றவன்வி ளம்புறின்
தாவிலாது உயர்சிவ பத்தன் தான்அரோ. 399

பவப்பிணி உளர்க்குஇறை பத்தி இன்றுஎனில்
தவப்பல வேதமும் சாத்தி ரங்களும்
உவப்புறு விரதமும் ஒண்ம கங்களும்
அவர்க்குஉத வுறுவஎன்று அறிந்தி லோம்அரோ. 400

உறுதிகொள் பரசிவ பத்தி உற்றிடார்க்கு
அறவினை எனினுமே அவம்அது ஆகுமால்
சிறுவிதி தனக்குமுன் செய்த வேள்விதான்
மறுதலை உறபயன் வழங்கிற்று என்பவே. 401

மிக்குறு பாவவல் வினையன் ஆயினும்
புக்கர பத்தியால் புனிதன் ஆகுவான்
தக்கதன் தந்தையைக் கொன்ற தண்டிதான்
சிக்குறு பத்தியால் சிவமது ஆயினான். 402

அறமொடு பாவமும் அமல பத்தியால்
நிறைபவர் தமக்குஇலை நித்த பத்திதான்
அறுபவர் தமையடைந்து ஆர்த்துக் கொண்டுபோய்ப்
பிறவியாம் கடலினுள் பெரிதுஅ முத்துமால். 403

அரவுஅணி கடவுளை அடைந்த பத்தர்கட்கு
இருவினை செயும்இடர் இல்லைப் பொங்கொலிப்
பரவையின் முகட்டுஎழும் பரிதி வானவன்
புரவிகள் தமைஇருள் துயர்பொ ருந்துமோ. 404

பந்தனை வினைசிவ பத்தர் தங்களை
வந்துஅணை வுறுகில மரைமுள் தாள்சிறு
தந்துவின் ஆகிய சங்கிலித்தொடர்
கந்துஒடி மதம்உமிழ் களிற்றைக் கட்டுமோ. 405

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மறையவன் அரசன்நல் வணிகன் சூத்திரன்
பிறன்என இலைசிவ பத்தி பெற்றுளான்
இறையவன் எனஉலகு எங்கும் வந்தனை
பெறுபவன் எவன்எனப் பேசும் வேதமே. 406

இறைவனை அடைந்தவர்க்கு இல்லைச் சாதியின்
திறம்எரி தழலிடைச் சேரின் பேதம்எவ்
விறகுள உயர்சிவ பூசை வேட்டுளோர்
கறைதவிர் நிலமிசைக் கணங்கள் அல்லரோ. 407

பத்தமான்மியத்தலம் - முற்றும்.

ஓம் கிருபாநிதியே நம:

முப்பதாவது

(6) சரணமான்மியத்தலம்

கலிவிருத்தம்

. அணங்கறு குருபரன் ஆதி மான்மியம்
இணங்குற உணர்த்துறு செயல்எ லாம்கொடு
பணிந்திட வருசிவன் பதிஎ னத்தெரிந்து
உணர்ந்திடல் சரணநல் தலம்என்று ஓதுவார். 408

. மாயையால் வரும்ஒரு வாழ்வு பெற்றுள
சேயநான் முகன்முதல் தெய்வம் விட்டுஒரு
தூயன்ஆ கியபர சிவனைத் துன்னுதல்
ஆயின்ஆ கமம்அது சரணம் ஆகுமால். 409

முக்கண னேஉயிர் முழுதும் ஆள்பவன்
அக்கட வுளைஅருள் எனஅ டைக்கலம்
புக்கவன் புகல்சர ணாக தப்பெயர்
தக்கவன் எனஉரை தருவர் மேலையோர். 410

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விடுத்துறு புலன்வழி விண்உ ளோர் பதத்து
எடுத்துள அவாஅகன்று இறையை முத்திவேட்டு
அடுத்தவ னேசர ணார்த்தி என்பவன்
குடத்தினில் உதித்துஉயர் குவட்டில் உற்றுளோய். 411

மனம்மொழி மெய்வினை கொண்டு வாண்மதி
புனைமுடி இறைவனைப் புகல்என்று எய்தினோர்க்கு
இனைவுஉறு செயல்மலி யாகம் ஆதியாம்
வினைகொடு பெறுபயன் யாது வேண்டியே. 412

பண்ணிய மகவினை பலவினால் கெடும்
விண்ணுறு பதம்அலால் வேறுஉண் டாகுமோ
கண்ணுதல் சரண்புகும் கருத்தில் மேன்மையோன்
நண்ணுவது அழிவுறா ஞான வீடுஅரோ. 413

தனைஅடை பவர்க்குத்தண் அளிசெய் கற்பகம்
எனும்அரன் இணையடி புகல்என்று எய்துறின்
நினைவரும் பாதக நீசர் ஆயினும்
பினைஅவர் பெறாதபேறு ஏது பேசினே. 414

பரமனை அடைதரும் பாச நெஞ்சினோன்
பெருமைகொள் பிறவியே பிறவி அன்னவன்
திருமலர் அடியிணை சேர்ந்தி டாதவர்
வரும்அவப் பிறப்பினைப் பிறப்பில் வைத்திடார். 415

பெறல்அரு மானிடப் பிறவி பெற்றும்ஓர்
அறிவுருவு ஆகிய அவிர்ச டைப்பிரான்
திறம்உணர் குறும்நெறி சேர்ந்தி டார்எனின்
வறிதுஅவர் உயிரொடு வாழும் நாள்அரோ. 416

புறம்திரி யாதுஉளம் புராரி தன்கணே
செறிந்திடும் ஒருபெருஞ் சிறப்புப் பெற்றுளோன்
பிறந்திடு குலமதே பெருமை பெற்றிடும்
உறைந்துஅவன் வாழும்நாள் பயனொடு ஒன்றுமால். 417

சரணமான்மியத்தலம் - முற்றும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம்பீமாய நம:

முப்பத்தொன்றாவது

(7) பிரசாத மான்மியத் தலம்

கலிவிருத்தம்

குருபரன் முதலியோர் பெருமை கூட்டுணத்
தருவது சிவப்பிர சாதம் ஆதலால்
உரைசெயும் அதனது பெருமை ஓதுவர்
இருவினை எனும்பகை எறிந்து ளோர்களே. 418

புகல்எனச் சிவபிரான் தனைப்பொ ருந்தினோர்க்கு
இகல்அறு சிவப்பிர சாதம் எய்துறும்
மிகுபவப் பகைஎன விளம்பும் அன்னதுஇவ்
அகலிடத்து அரிதுஅரிது அயல வர்க்குஅரோ. 419

மந்திரம் மகம்தவம் தியானம் மற்றுஉள
தந்திரம் அறிவுஇவை யாவும் தண்கதிர்ச்
சந்திர முடிபிர சாதம் எய்துற
வந்தன எனஅறி மனம்து ணிந்து அரோ. 420

மொழிதரு சிவப்பிர சாத மூலத்தது
ஒழிவறும் பத்திதான் ஓதும் வேதியர்
இழிவினர் எனஇலை யாரும் உய்குவர்
விழிநுத லினன்பிர சாதம் மேவினே. 421

பங்கய மலர்வன் ஆதிப் பண்ணவர்
சங்கரன் அருட்பிர சாதம் கொண்டுதம்
மங்கல பதங்களின் வாழ்வு மன்னியே
சிங்கல்இல் நித்திய சித்தர் ஆயினார். 422

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தவநிகழ் சிவப்பிர சாதம் எய்துறின்
சிவமயம் ஆகியே திகழும் யாவையும்
பவவலை அறவரு பான்மை உண்டுகொல்
அவமறும் அரன்பிர சாதம் அன்றியே. 423

பலமொழி பகர்தலால் பயன்என் மூன்றுஎனும்
உலகினுள் ஒத்ததும் உயர்வு கண்டதும்
இலைஇலை இவ்வுரை உண்மை ஈர்ஞ்சடைத்
தலைவனது அருட்பிர சாதத் திற்குஅரோ. 424

யோகம்வேண் டுறும்பிர சாதம் உற்றிட
வேகமாம் சிவமயம் ஆகும் யாவையும்
ஆகையால் சிவம்எனும் ஆவி யோன் இவன்
பேர்கிலா நிலையுடைப் பிராண லிங்கியாம். 425

பிரசாத மான்மியத்தலம் - முற்றும்.
31-ஆவது பிரசாதித்தலம் முற்றிற்று.

4-ஆவது பிராணலிங்கித்தலம்

(இதன் உட்பிரிவு)

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

பத்தனோடு ஒண்மகேசன்
பகர்பிர சாதி என்றிங்கு
ஒத்தனே வருவன் என்ன
உரைத்தனை பிராணலிங்கி
எத்திறம் அதனால் ஆவன்
இவன்இது தனையும் கூறாய்
கைத்தலம் மழுவி னோன்வாழ்
கைலையங் கணங்கள் வேந்தே. 426

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒப்பறு கரும யோகத்து
உயர்ச்சியால் பத்தன் ஆதி
முப்பெயர் புனைந்து நின்றான்
மொழிதரும் இவன்இ வற்குத்
தப்பறு ஞான யோகம்
சாற்றிடத் தக்க தீங்குத்
துப்புஉறழ் சடிலக் கற்றைத்
துகளின்மா முனிவர் ஏறே. 427

பேரறி உருவாய் நின்ற
பிரமமே இலிங்க மாம்அவ்
ஓருறும் இலிங்க சத்தி
பிராணநல் உருவாய் நிற்கும்
தேர்உறும் இனைய வாறாம்
சிவலிங்கம் தனைஉ ணர்ந்தோன்
ஏருறு பிராண லிங்கி
என்பவன் என்பர் மேலோர். 428

ஆசறு பிராண லிங்கித்
தலம்ஒரைந்து ஆகும் முன்னர்ப்
பேசுறு பிராண லிங்கித்
தலமொடு பிராண லிங்க
பூசனை அதன்பின் மிக்க
சிவயோக சமாதி பெற்று
நேசமது உறும்இ லிங்க
நிசம்அங்க லிங்கம் என்றே. 429

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் பரசு ஹஸ்தாய நம:

முப்பத்திரண்டாவது

(1) பிராணலிங்கித் தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தயங்குறு பிராண அ பாந
சமநிலை பெறலால் மூலத்து
உயர்ந்துஎழு சோதி யாதுஅவ்
ஒளிமிகு சோதி தானே
வயங்குறு பிராண லிங்கம்
என்னவே வகுக்கப் பட்டது
இயங்குறு பிராணா பாந
நிரோதிகள் என்போர் தம்மால். 430

பரிதியுள் அடங்கும் மெய்கூர்
பனிஎன யாதன் கண்ணே
திரிதரு பிராணன் ஒன்றிச்
செறிந்திடும் அதுவே கூறின்
அரிதுஎனும் பிராண லிங்கம்
என்பர்அங்கு அதுத ரித்தோன்
உரைதரு பிராண லிங்க
உரையுடை யோனாம் அன்றே. 431

அறிவுரு வாகி எங்கும்
அமர்பரப் பிரமம் ஆகும்
குறிஉயர் இலிங்க ஞான
யோகுஉடைக் குணத்தான் நெஞ்சில்
எரிசுடர் ஆகி நின்றே
இலங்குறும் அறிவி லாரால்
செறிவுறு பொருள்அன் றாகும்
என்றுஉரை செய்வர் மேலோர். 432

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இலங்குஒளி ஆகி என்றும்
இதயநல் மலரில் தோன்றி
நலம்தரு பரமா னந்த
ஞானலிங் கத்தை நீங்கிக்
கலந்துஉள புறத்தில் லிங்கக்
கருத்துளன் ஆகி உற்றோன்
மலங்குஉறு பரம மூடன்
என்னவே மதிக்கப் பட்டான். 433

புறப்பொருள் இதன்கண் செல்லும்
புத்திவிட்டு அகத்தில் என்றும்
சிறப்புறும் ஒளியாய்த் தோன்றும்
சின்மய லிங்கம் தன்னைக்
குறித்துஉணர் கருத்தின் திட்பம்
கொண்டுற நின்று உளோனே
மறுப்புஅறு பிராண லிங்கி
என்குவர் மதியின் மிக்கோர். 434

மாயையின் விகற்பம் தன்னால்
வந்துள சகம்தோன் றாமல்
போய்ஒழிந் திடுமாறு என்றும்
பொருந்துபு சிந்தை செய்து
பாயொளி அறிவா னந்த
பராபர லிங்கம் தன்னில்
தூயநெஞ்சு அடங்க வல்லோன்
துகள்அறு பிராண லிங்கி. 435

சத்தையாம் சத்தி தானே
தக்கதுஓர் பிராணன் ஆகும்
சத்தது ஆம் பிராண லிங்கம்
தற்சம ரசஞா னத்தால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வைத்ததாம் பிராண லிங்கி
எனும்பெயர் எனவ குப்பர்
தத்துவா தீதம் ஆய
தனிநிலை உணர்ந்த நல்லோர். 436

பிராணலிங்கித்தலம் - முற்றும்.

ஓம் மிருகபாணயே நம:

முப்பத்து மூன்றாவது

(2) பிராணலிங்கார்ச்சனத் தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

நன்றுறும் இதயம் தன்னில்
ஞானலிங் கத்தை எய்தி
நின்றுஎழும் அன்பி னாலே
நினைவுஎனும் மலர்கள் கொண்டு
புன்தொழில் இலாது செய்யும்
பூசனை அதுவே கண்டாய்
ஒன்றொரு பிராண லிங்க
பூசைஎன்று உரைப்பது அன்றே. 437

அகத்துறு பவனம் தன்னை
அடைத்துநுண் விசும்பு பூத்து
மிகத்தலை மதிஉ குப்ப
வீழ்அமு தினிற்கு ளிர்ந்து
தகைக்கும்ஒன் பதுவாய் உற்றுத்
தனிஅறிவு எனும்வி ளக்கிட்டு
உகப்புறும் இதயத்து ஈசற்கு
உஞற்றுக பாவ பூசை. 438

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆடுஅறல் பொறைவி வேகம்
ஆடைபூண் வாய்மை மாலை
தாள்தரு துறவு கந்தம்
சமாதிஅக் கதைஆங் கார
வீடெழு தூபம் தூய்மை
விளக்கறி வுலகம் எல்லாம்
பீடுறு நிவேத னம்தம்
பிறாற்குஒலி மணிநல் மோனம். 439

பொறிவிட ஆர்ப்பி தம்தாம்
பூலம்அவ் விடயத்து ஓய்தல்
அறுமது வலம திக்குஇங்கு
அதன்வடி வுஆகும் சத்தி
பெறுமது வணக்கம் ஆம்இப்
பெற்றியின் மனலிங் கத்தை
மறுஅறு மனத்து அர்ச் சிக்க
வாலிய பொருள்கள் கொண்டே. 440

பிராணலிங்கார்ச்சனத்தலம் - முற்றும்.

ஓம் ஜடாதராய நம:

முப்பத்து நான்காவது

(3) சிவயோக சமாதித்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

புகன்றுள பிராண லிங்க
பூசனைத் தொழிலின் கண்ணே
உகந்துள இவர்க்கு மிக்க
ஒருசிவ ரூபம் ஆகத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திகழ்ந்துஉள தியானம் தன்னைச்
செப்புறும் சமாதி என்ன
அகன்றுஅரி பரந்த ஒண்கண்
அரிவைபங் கினன்நூல் அன்றே. 441

உரைமனம் இறந்த சச்சி
தானந்த ஒளியாய் மேலாய்ப்
பரவுதத் துவங்கட்கு எல்லாம்
பரமசிற் சத்தி தன்னால்
உரம்உற ஒளிறும் அஞ்ச
உருவமாம் பரமான் மாவைத்
திரமொடு பாவ கஞ்செய்
திகழ்சோக பாவம் கொண்டு. 442

பிறங்குஒளி மாலிங் கந்தான்
பிரமம்என்று உரைப்ப நிற்கும்
சிறந்துஉள பிராணன் தன்னைச்
செப்புவர் சீவன் என்ன
அறைந்துள அவற்றின் ஏக
பாவ மா மனத்தி னானே
உறுஞ்சிவ சமாதி யோகம்
உற்றவன் என்பர் மேலோர். 443

அகம்உறு சக்க ரங்கள்
ஆறினும் உற்ற கஞ்சம்
சகம்அருள் பிரமன் ஆதி
தானம்என்று உன்னி அப்பால்
வகைஇதழ் பத்து நூறு
மருவுபங் கயம்அ தன் கண்
மிசைநிறை விமல இந்து
விம்பம்ஒன்று உளது மாதோ. 444

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அத்தட மதியில் நுட்ப
மாம்புழை ஒன்று காண்க
அத்தொளை கயிலை ஆக
அறிந்துஅவண் வீற்றி ருந்த
சத்திய ஞான ஆ னந்த
சங்கரன் தனைப்பா விக்க
எய்த்த கா ரணங்கட்கு எல்லாம்
காரணன் என்ன அன்றே. 445

புறம்திரி வதனால் தோன்றும்
புகல்சக விகற்பம் உள்ளில்
செறிந்திடு மனத்தி னோர்க்குத்
திகழ்ந்திடும் ஆன்ம ஆ னந்தம்
உறும்கடை உவகை தன்னால்
உயிர்எனும் அரணி தன்னில்
பிறந்துள ஞானத் தீயால்
பெரும்பவம் சுடுவன் அன்றே. 446

கருமவேர் செறிந்து துன்பப்
பாசிலை காட்டி நிற்கும்
ஒருபெரும் பவம ரத்திற்கு
உற்றவெம் பரசு தானாம்
பெருமல இருளி னுக்குப்
பிறங்குஒளி இரவி யாகும்
தெருமரும் மனம்அ டக்கும்
சிவன்உருத் தியானம் அன்றே. 447

சிவயோகசமாதித்தலம் - முற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் கைலாசவாசிநே நம:

முப்பத்துஐந்தாவது

(4) இலிங்க நிசத்தலம்

அருசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பொருந்துறும் இதயம் என்னும்
புனிதநல் முளரி சேர்ந்த
வரும்சிவ லிங்க மெய்ம்மை
அனுபவ சித்தி தானே
பரஞ்சுட ராம்இ லிங்க
நிசம்எனப் பகரா நிற்பர்
திருந்திய கலைகள் யாவும்
தெரிதரும் புலவர் அன்றே. 448

வேதன்ஆ தியராம் தேவர்
வேதம் ஆ தியவாம் நூல்கள்
யாதினில் அடங்கித் தோற்றம்
எய்துறும் அவ்இ லிங்கம்
ஓதரும் பிரம மேயாம்
உலகுஉதிக் குறும்இ லிங்கம்
தீதறு ஞானா னந்த
சிவமேமற்று ஒழிந்த அல்ல. 449

உரைப்பதுஎன் பலமாற் றங்கள்
உலகுஉதித்து ஒடுங்கும் வண்ணம்
தரித்திடும் இடம்அ தாகும்
சச்சிதா னந்த மேனிப்
பரப்பிர மம்தா னேகாண்
பரசிவ நாமம் கொண்டே
தெரிப்புஅறும் லிங்கம் என்று
செப்புறப் பட்டது அன்றே. 450

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மாசறு நிகழ்வே தாந்த
வாக்கியத்து உதிக்கும் ஞான
மாசறும் லிங்கம் என்ன
அறைதரு கிற்பர் சில்லோர்
பேசுறும் அதுதான் மிக்கப்
பிரமமாம் லிங்கம் தன்னால்
தேசுறு அறிவ தாகும்
செய்கையாற் பிறிதுஒன் றாமல். 451

உலகுஎலாம் தருவ தற்குஇங்கு
ஒருதனி மூலம் ஆகி
இலகுறும் அவ்வி யத்தம்
இலிங்கம்என்று இசைப்பர் மிக்க
தலைமைகொள் இலிங்க ஈசன்
தான்என வகுத்துச் சொல்வர்
நிலவும்இம் மதம்பொ ருத்தம்
அன்றுஎன நிகழ்த்தும் நூலே. 452

விரவுறு மாலிங் கம்தான்
மிளிர்தலும் மதியும் மீனும்
இரவியும் அழலும் மின்னும்
இலங்குறா இலங்கு சோதி
உருவமாம் அவ்இ லிங்கத்து
ஒளியினால் அவைஅ னைத்தும்
திரிவுஅற இலங்கும் உண்மை
செப்பும் இம் மாற்றம் அன்றே. 453

உலகுஎலாம் தோன்றி நின்று அங்கு
ஒடுங்குதற்கு இடம்தான் ஆகி
இலகுமா விலிங்கம் தன்னில்
நிலைபரம் அதனால் ஞான

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நிலையில்வாழ் பிரம மேஅந்
நிசலிங்கம் என்று கொள்ளின்
தொலை வுஇலா லிங்க உண்மை
தோன்றிடும் ஐயம் இன்றி. 454

இலிங்கநிசத்தலம் - முற்றும்.

ஓம் கவிசிநே நம:

முப்பத்தாறாவது

(36) அங்கலிங்கத் தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஞானநல் அங்கம் என்பர்
நாசமில் லிங்க ஞேயம்
தான்என அறைவர் இங்ஙன்
சாற்றிய இரண்டும் யாவன்
பால்நிகழ் வுறும்இங்கு அன்னோன்
பகர்அங்க லிங்கி என்று
நூல்நிலை உணர்ந்த மேலோர்
நுவன்றிடப் படுவன் அன்றே. 455

அங்கத்தில் இலிங்கம் ஒன்றி
அவ்விலிங் கத்தில் அங்கம்
தங்குற்று நிகழ்வோன் யாவன்
தான்அவன் அங்க லிங்கி
பொங்குற்ற மனத்தில் லிங்கம்
உணர்ந்துழிப் பூசை செய்யும்
துங்கத்தன் யாவன் அன்னோன்
துகள்அறும். அங்க லிங்கி. 456

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒருதனி யிலிங்கம் தானே
ஒளிர்தரும் பிரமம் என்றும்
வருசக மூலம் என்றும்
வான்முத்தி வைப்பது என்றும்
சுருதிகண் முதலா ய்உள்ள
தொல்லைய கலைகள் தம்மால்
பெருதுணர்ந் திடப்பட்டு ஓங்கும்
என்றறி பெரும்த வத்தோய். 457

பகர்ந்திடும் இனைய லிங்கம்
பரமுத்தி உருவம் என்ன
வுகத்துள உளத்தன் மெய்யோடு
உறினுமே முத்தன் ஆவன்
சகம்தரு மூலம் என்னச்
சம்புவாம் இலிங்கம் தன்னை
அகங்கொளும் நிலைஇ லாதான்
அருங்கதி இலாத மூடன். 458

யாவன்நல் பிராண லிங்க
பூசனை எழுவாய் மேவிப்
பாவுறு சிவமாய்த் தன்னைப்
பாவிக்கும் அறிஞன் அன்னோன்
மேவுறு ஞான பாக
விளைவினால் சரணன் நாமம்
தாவறும் உலகம் எல்லாம்
சாற்றிடப் படுவன் அன்றே. 459

அங்கலிங்கத் தலம் - முற்றும்

4-ஆவது பிராணலிங்கித்தலம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5-ஆவது சரணத்தலம்

இதன் உட்பிரிவு

கலிவிருத்தம்

பின்னர் அந்தப் பிராணலிங் கிப்பெயர்
மன்னி னோன்எவ் வகைச்சர ணப்பெயர்
தன்னை எய்துவன் சாற்றுஇது தன்னையும்
அன்னை போலும் அருட்கண நாதனே. 460

அங்க லிங்கி அரிய சதியெனத்
துங்க லிங்கம் பதியெனச் சொல்வர் இச்
சங்கம் எய்தும் தனிச்சுகம் எய்தினோற்கு
இங்கு வந்துறும் இன்சர ணப்பெயர். 461

இத்த லத்திறம் ஈரிரண்டு ஆகும்முன்
வைத்தி டும்சர ணத்தலம் மற்றுஉறும்
சித்த தாமத நீக்கம்நிர்த் தேசமோடு
எய்த்த சீலசம் பாதனம் என்னவே. 462

இனைய நான்கு தலத்தின்இ லக்கணம்
தனையும் இங்கு முறைதரச் சாற்றுதும்
நினையும் நெஞ்சம் ஒருக்கி நிலையொடு
சினம்அ விழ்ந்த முனிவ செவிக்கொளே. 463

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் கடோராய நம:

முப்பத்தேழாவது

(1) சரணத் தலம்

கலிவிருத்தம்

காந்த னைக்கொள் கனங்குழை போலவே
சாந்த மெயச்சிவ னுக்குஒரு சத்தியாய்
ஆந்த் னைக்கொண்டு அயன்முகம் நோக்குறான்
ஏய்ந்த நற்சர ணத்தலம் எய்தினோன். 464

புரக்கும் ஈசன் புலப்படின் யாவர்தாம்
விருப்பம் எய்துவர் வேறுளர் தம்மிடை
வரப்பெ றின்பெரு மாநிதி யாவர்போய்
இரப்பர் மண்ணை இடுகளனத் தேடியே. 465

பற்றுள னும் சிவா னந்தம் படைத்துளோன்
மற்றும் வேறு மனத்தில் விழையுமோ
பெற்ற வன்பெருங் கங்கைப் பெருக்கினை
உற்றி டும்கொல் வெங்கானலை ஓடியே. 466

துனனும் வெம்பவம் ஆகிய தொல்லிருள்
தன்னை வென்று துரத்திடின் சங்கரன்
என்னும் வெங்கதிர் அன்றி எழுந்துஅழி
மின் எ னும் சுரர் வென்றிட வல்லரோ. 467

பிறவி நோயினன் பிஞ்ஞகன் தன்னையே
உறுவ துஅன்றி உறான்பிற தேவரை
நிறைவு றும்சசி நிற்கஉடு உறாது
அறஅ ருந்தஅ வாவு சகோரமே. 468

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பவம்எ னுங்கடும் பாம்பினை மீட்பவன்
எவையும் நன்குஉணர் ஈசன் அலால்இலை
சிவம்உ ணர்ந்துதெ ளிபெறும் யோகிதான்
நவைத ரும்பிறிது ஒன்றினை நண்ணுறான். 469

முற்றும் மேவும்எம் முயற்சி னாலும்இங்கு
உற்ற வன்சிவன் தன்னை உ வகையே
பெற்றி டும்பர மானந்தப் ' பற்றினான்
மற்ற உம்பர்க ளால்மகிழ் உற்றிடான். 470

சரணத்தலம் - முற்றும்

ஓம் திரிபுராந்தகாய நம:

முப்பத்தெட்டாவது

(2) தாமச நிரசனத்தலம்

கலிவிருத்தம்

பராப ரற்பெற் றுஉவகை படைத்துளோன்
விராவும் அத்தமோ பாவம் விடுத்தலால்
தரா த லத்தில் தனைநிகர் தாமத
நிராச கப்பெய ரோடு நிலாவுவான். 471

இருள்த ரும்தமம் எய்தும் அறிவினோர்க்கு
அருள்த ரும்கதி இல்லை அறிவினுக்கு
ஒருபெ ரும்தனிக் காரணம் ஒண்கதி
தரும்இ ருங்குண சத்துவம் என்பவே. 472

மெய்ம்மை சாந்தி தமைவி வேகம்பொறை
செம்மை நல்ஒழுக்கம் சிவ பத்திதான்
அம்ம பூரண பாவம் அருள்துறவு
இம்மை உள்ளவன் சத்துவம் எய்தினோன். 473

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வெய்ய காமவெகுளி மயக்கமாம்
மைஉ லா மத யானை வளர்ந்து எழு
செய்ய மாசிவ ஞான மடங்கல்முன்
உய்யு மோநின்று ஒருகண மேனுமே. 474

மாசுஇ ராசதம் மன்னிய நெஞ்சினோன்
ஈச னாரிடத்து எங்கும் வெறுப்பினோன்
பேசில் அன்னவற் காணின் பெரியவர்
கூசி நிற்பர் குலைகு லைந்து உள்ளமே. 475

யாவ ரோடும் இகல்புரி கிற்பவன்
பாவ மாகும் படிற்றுரை கூறுவோன்
காஇ லாதஆங் காரம் மருவினோன்
யாவன் அன்னவன் தாமசி என்பவே. 476

மூலம் ஆகத்த மோகுண முற்றிய
மேல்உ லாவும் விருப்பு வெறுப்புஎனும்
கோல மாமரம் கூர்சிவ ஞானமாம்
ஏலும் மாமழு வால்எறி யப்படும். 477

இரவி ஆயிரம் போல இலங்குறும்
பொருவுஇல் வான்சிவ ஞானம் பொருந்துறின்
பரவும் ஒண்சிவ ஞான பதத்தர்முன்
மருவு மோதமம் ஆகிய வல்இருள். 478

தாமசநிரசனத்தலம் - முற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் விருஷாங்காய நம:

முப்பத்துஒன்பதாவது

(3) நிர்த்தேசத் தலம்

கலிவிருத்தம்

பிறப்பு மூலப் பெருந்தமம் நீக்கியே
சிறப்ப ஞான நிர்த்தேசப் படின்அதை
இறுப்பர் நின்றநிர்த் தேசம் எனக்குறித்து
ஒறுப்பு றும்புலத்து ஒட்டறும் நெஞ்சினோர். 479

குரவ னோபர தத்துவம் கூட்டுவோன்
பருவம் மேவினர் பால்வந்து இலகுற
விரவி நின்ற இருளை விளங்கிய
இரவி அன்றி இரிப்பவர் யாவரோ. 480

பிறவி நாமப் பெரும்பிணி நல்லறிவு
அறிவு றும்குரு அன்றி அகலுமோ
மறைஉ ணர்ந்த மருத்துவன் அன்றியே
செறிவு றும்பிணி யாது சிதைவதே. 481

மூட மாசில் முழுகும் மனம்எனும்
ஆடி தன்னை அறிவுஎனும் பூதியால்
நீட நின்று நிகழ விளக்குவோன்
பீடு றும்குரு என்பர் பெருமையோர். 482

தாவு இலா அப ரோட்சி த தத்துவ
சீவன் முத்தத்து இயல்புறு தேசிகன்
மேவும் இன்ப விழிக்கடை நோக்குறின்
யாவை எய்தற்கு அரியன என்பவே. 483

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நீங்க ரும்கரு ணைக்கு நிலையராய்த்
தீங்கு இலாத சிவாத்து விதத்தராய்
ஓங்கும் முத்தி உதவும் குரவர்தாம்
ஈங்கு அடைந்திடற்கு என்றும் அரியரே. 484

பொருப்பின் மேரு புணரியின்பாற்கடல்
அருக்கன் கோளில் அமரரில் சங்கரன்
மரத்தில் ஆரம் எனப்புகழ் வாய்த்தவன்
குருக்க ளில்சிவம் நண்ணும் குரவனே. 485

நிர்த்தேசத்தலம் - முற்றும்.

ஓம் விருஷபாரூடாய நம:

நாற்பதாவது

(4) சீல சம்பாதனத்தலம்

கலிவிருத்தம்

குரவன் உற்றுநிர்த் தேசித்த கொள்கையால்
ஒருமை யில்சிவ தத்துவம் ஓர்ந்திடும்
அருவி ருப்பது சீலம் அஃதுளோன்
திருமி குத்துயர் சீலி எனப்படும். 486

சரண்அ டைந்தவர் தங்களைக் காத்திடும்
பரனை நெஞ்சுறப் பாவிக்கும் தன்மையே
திரம்உ றும்பெருஞ் சீலம்என்று ஓதுவார்
உரம்உ ணர்ந்த உரனுடை யாளரே. 487

சிவனை எய்தியொன் றாந்திறத் தோன்தனை
அவனை அன்பொடு அறிந்தவ னைச்செறிந்து
உவகை ஒன்றும் உளத்தனைச் சீலவான்
இவன்எ னுங்கலை யின்திறம் யாவுமே. 488

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பற்று றும்பதி ராகப் பயத்தினால்
பொன்தி ருந்துஇழை சீலம் பொலிதல்போல்
பெற்று றும்சிவ ராகப் பெருமையோடு
உற்ற வன்திகழ் சீலம் உளான்அரோ. 489

மாதர் கட்கு மகிணன் பணிஅலது
ஏதம் உற்றிடும் இங்கிது போலவே
சோதி மெய்ச்சிவம் அன்றித் துளங்குறும்
ஏதி லர்க்குஉறு சேவை இகழ்வுறும். 490

நட்டு உறும்சிவ ஞானிகள் தம்மிடை
நிட்டை கொள்ளும் நிலையது சீலம்அவ்
ஒட்டு றும்தனிச் சீலம் உடையனே
சிட்டர் எண்ணுநற் சீலம் உளான்அரோ. 491

அங்க லிங்க அறிஞரை வேட்டுளம்
சங்க ரன்தனைத் தான்சரண் என்றுபோய்
இங்கு அடைந்த இவன்நல் அயிக்கியம்
மங்க லம்தரு நாமம் மருவுவான். 492

சீலசம்பாதனத்தலம் - முற்றும்.

5-ஆவது சரணத்தலம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

6-ஆவது அயிக்கியத்தலம்

(இதன் உட்பிரிவு)

கலிவிருத்தம்

தாமத நிரசநம் ஆதி சார்வினால்
ஏமுறு சரணனாம் இவன்அ யிக்கிய
னாம்எவ் வகையினால் நண்ணும் இங்கது
காமரும் இரேணுக கணேச கூறுவாய். 493

மலிதரு சிவசுக வாரி மூழ்குபு
நலமுறு சிவமுடன் அயிக்கம் நாடுறும்
நிலையுற அயிக்கனாம் பிராண லிங்கம்முன்
தலைமைகொள் இயல்பினால் சரணன் ஆயினோன். 494

மனும்தலம் இஃதுநால் வகைஅ யிக்கமோடு
இனங்கொள் ஆசார சம்பத்தி ஏகபா
சனம்சக போசனத் தலம்எ னப்புலன்
முனிந்துள முனிஇவை முறையின் கூறுவாம். 495

ஓம் பஸ்மோத்தாளித விக்ரஹாய நம:

நாற்பத்து ஒன்றாவது

(1) அயிக்கியத்தலம்

கலிவிருத்தம்

அழிதரு நிலைவிட யாநந் தத்துளி
விழைதலை விடுத்துள விமல நெஞ்சினோன்
எழுதரு சிவாநந்தம் என்னும் வேலையுள்
முழுகுதல் அயிக்கம்என் றுரைப்பர் முன்னையோர். 496

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தளைந்துள தளைவலி தணந்து மாசறத்
தெளிந்துள நெஞ்சினால் சிவோகம் பாவனை
உளங்கொளும் நிலைஉடை ஒருவ னேகலை
அளந்துஅறி முனிவர அயிக்கியன் ஆகுவான். 497

செயல்அறு சிதாநந்த சிவமொடு ஒன்றிய
வியல்அறும் அயிக்கியன் என்னப் பட்டவன்
மயல்அறு மாயையின் வயிறு தந்துள
துயர்உறும் உலகத்தின் தோற்றம் காணுறான். 498

தத்துவ மாம்திரை சார்ந்து பல்வகைப்
புத்தயன் அண்டமாம் புற்பு தம்செறி
மைத்தனி மாயையாம் வாரி வற்றுமால்
மெய்த்துள அயிக்கியமாம் வடவை மேவவே. 499

மறைப்புறு மாயையின் வலியி னால்உயிர்க்கு
உறப்பெறு வேறுபா டுஉயர்சி வத்துடன்
இறப்புறின் அனையதுஇங்கு ஏகம் அன்றியே
பெறப்படு குவதுஇலை பேதம் என்பதே. 500

பசுத்துவ மொடுபதித் துவம்ப கர்ந்திடின்
முசிப்புறும் மாயையாம் மோக கற்பிதம்
நசிந்திடின் அதுபசு யார்சொல் நன்றுற
இசைப்புஅறு நற்பதி யார்சொல் இங்கு அரோ. 501

சாருறு பேதவல் மீகம் தங்கிய
கோரசம் சாரமாம் கொடிய பாம்பினுக்கு
ஆருறு பரமஅத் துவித பாவனை
நேருறு மருந்ததாய் நிற்கும் என்பவே. 502

நந்துறு பேதபுத் தியினில் நண்ணியே
வந்துறு பவக்கடல் தன்னை மன்னிய
சிந்தனை அறுசிவாத் துவித புத்தியாம்
சுந்தர அம்பியால் கடக்கும் தோம்இலான். 503

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

மயங்கும்அஞ் ஞானவல் இருளொடு ஒன்றியே
அயர்ந்துள காமமாம் அரக்கர் செய்கையில்
முயங்குறு பவமெனும் மூடு கங்குல்தான்
பயந்துஇரி தருநல்அத் துவித பானுவால். 504

மிக்குறு பவத்துயர் விட்டு நீங்குறத்
தக்குறும் யோகிகள் தங்கட்கு இவ்விடை
பக்குஒழி வருசிவாத் துவத பாவனை
ஒக்குறும் உபாயம்இங்கு ஒன்றும் இல்லையே. 505

ஒருகணம் உயர்சிவாத் துவித பாவனை
தருசுகம் யாதுஅது தக்க போகம்இங்கு
அரிதுஉறு பவர்களால் கோடி யாண்டினும்
பருகுற வரும்ஒரு பான்மைத்து அன்றுஅரோ. 506

சென்றுறு சகம்அடங் கியநல் சித்தமோடு
ஒன்றிய பரசிவ யோகிக்கு ஓய்வற
நின்றுஉயர் சிவானந்த நிறைவுஅ தேபரம்
என்றுரை தரும்தனி முத்தி என்பதே. 507

அயிக்கியத்தலம் - முற்றும்.

ஓம் சாமபிரியாய நம:

நாற்பத்து இரண்டாவது

(2) ஆசாரசம்பத்தித்தலம்

கலிவிருத்தம்

உடம்பொடு மருவினும் ஒருமைப் பால்துளை
தொடங்குறும் அவர்க்கிலைச் சூத காதிஅத்
திடம்பெறும் ஒருசிவாத் துவித தேசிகற்கு
அடைந்துள இருவினைப் பயனும் ஆகுறா. 508

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சமதரி சநன்எனும் தகுதி பெற்றுளோன்
அமைவுறு சிவனுடன் அயிக்க பாவமோடு
இமைபெற மாவினை இயற்றும் ஆயினும்
சமையும்அவ் வினைப்பயன் அவனைச் சார்ந்திடா. 509

அந்தணன் ஆயினும் புலையன் ஆயினும்
பந்தனை வினையுடைப் பாவி யாயினும்
முந்துறு புண்ணியன் எனினும் ஒக்குமால்
நந்துறும் அயிக்கியம் நண்ணி னற்குஅரோ. 510

வன்னமோடு உறுநிலை வழியொ ழுக்கினால்
என்னுறு பயன்சிவ ஞானம் எய்தினோற்கு
அன்னிய உலகஆ சாரம் என்பது
தன்னிகர் அவற்குஇலை என்று சாற்றுவார். 511

இலகுறு ஞானஅங் கியினில் இட்டுஅயல்
விலகுஅற வறுத்துள வினைவித் தோடுதான்
நிலைவுறு தேகிபோல் அமர்ந்த ஞானிமெய்
உலகினர் உடலினை ஒத்து இயங்குமால். 512

புனலுறு மரையிலை போல ஞானிதான்
வினையொடு புணர்கிலன் வேறி லாஅவன்
கனவிலும் நனவிலும் கதியி ருப்பினும்
தனைநிகர் சங்கரன் பூசை சார்ந்துளான். 513

காண்பன பரசிவ காட்சி உன்னுவ
மாண்படு தியானம்வாய் வார்த்தை நல்துதி
ஏண்படு தொழில்சிவ பூசை யேவினை
நாண்பரி அயிக்கிய ஞானி கட்குஅரோ. 514

ஆசாரசம்பத்தித்தலம் - முற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் ஸ்வரமயாய நம:

நாற்பத்து மூன்றாவது

(3) ஏகபாசனத் தலம்

கலிவிருத்தம்

அகிலமும் சிவமென அறிந்த பாவனை
நிகழ்வுறு நிலையினோற்கு என்று நீள்சிவ
மகிழ்ஒரு பாசந வடிவம் ஆதலால்
இகலற இயம்புவர் ஏக பாசனம். 515

சகம்தனக்கு ஒருதனக்கு உயர்ப ரற்குவண்
மிகுந்திடும் அத்து விதநல் காட்சியால்
நிகழ்ந்திடும் ஏக பாசநம் நிலைத்தலால்
புகும்பிர சாதத்தும் ஏக புத்தியே. 516

இச்சகம் சிவத்திடை எய்தி நின்றிடும்
அச்சிவம் சகத்திடை அமர்ந்து இலங்குறும்
முச்செய லால்இவை ஒன்றிற்கு ஒன்றுதான்
வைச்சஆ தாரஆ தேயம் மன்னுமால். 517

அறிவொரு சிவமயம் ஆகும் பாசநம்
அறியுலகு எலாமுமாம் அறிவை அன்றியே
அறிவுறு பொருளிலை ஆதலால் மிகும்
அறிவினை உடையவர்க்கு அகிலம் இல்லையே. 518

தன்னுள் விருத்திபோய்த் தனிச்சி வத்தினுள்
மன்னுற ஆகுலம் அழிந்து பெற்றுள
செந்நெறி யோகியே சீவன் முத்தன்என்று
உன்னரும் அறிவுடை உலகம் ஓதுமே. 519

ஏகபாசனத் தலம் - முற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் திரயீமூர்த்தயே நம:

நாற்பத்துநான்காவது

(4) சகபோசனத் தலம்

கலிவிருத்தம்

மன்னிய சிவன்தனைக் குருவை மைந்தனைத்
தன்னொரு வடிவுஎன உணரும் தன்மைதான்
உன்னரும் உலகெலாம் உண்டல் ஆதலால்
பன்னுற வருசக போச னத்தலம். 520

அறிவுரு வாம்தனில் அகிலந் தன்னையும்
செறிவுறு குருவையும் சிவபி ரானையும்
பிறிவுஅற வேகமாய்க் காணும் பெற்றியே
குறிசக போசனம் என்னக் கூறுவார். 521

குருஇவன் சிவன்இவன் கூறப் பட்டிடும்
சரமுடன் அசரமாம் சகமது இங்கிது
திரமுறும் இனையனாம் என்னும் சிந்தனை
ஒருவினோன் யார்அவன் உலகம் உண்பவன். 522

இறைசிவன் அடிமைநான் இவன்அ ருட்குரு
உறும்மகன் நான்எனும் உளம்இ லாதவன்
மறுவறும் ஒருசிவாத் துவித வான்பதம்
பெறுதவன் எனமறை பெரிது இயம்புமே. 523

குருவும்நான் உலகுமுநான் கூறு தற்குஅரும்
பரமும்நான் எனவொரு பரிசு அறிந்திடல்
இருள்அறு பூரண அகந்தை என்னவே
திரிவுஅறும் அறிவினோர் தெரிந்து கூறுவார். 524

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அனைத்தினும் இலங்குபூ ரணஅ கந்தையாய்
மனிப்பொலி தருபரம் ஆன அங்கியில்
தனித்திடு துவிதநல் சமிசை வேள்வியான்
இனைப்புஅறும் அகிலஓ மத்தன் என்பவே. 525

போதம்என் றிடும் ஓரா தாரப் பூந்தழற்
பேதம்ஒன்று உலகுஅவி பெய்து வேட்பவன்
ஓதுறு சகஅவி உண்டு நின்றிடும்
ஏதம்ஒன்று உறாதுஉயர் ஞான யோகியே. 526

அறிவுரு வாம்பரா காசத்து ஆசற
நிறைதரு பரானந்தம் என்ன நின்றுள
செறிகதிர் இடைவிரி சித்தம் ஒன்றினோர்க்கு
உறுசக நிலைமைகண் உறுவது இன்றுஅரோ. 527

ஆசறு சிதம்பரம் அதனில் தன்னையே
பாசம்இல் சமரச பாவத்து ஒன்றிய
தேசுஉளன் ஆகவே சிந்தை செய்திடின்
மாசறு வித்தையென்று உரைப்பர் மாதவர். 528

சிதம்பர ஒளிநிகழ் சிவனொடு ஒன்றுற
விதம்தரும் அயிக்கியபா வத்தை எய்தினோன்
மதம்செய்பத் தாதி நல்மார்க்கம் நண்ணலால்
பதம்தனி முத்தியே ஆகப் பற்றுவான். 529

சகபோசனத்தலம் - முற்றும்.

6-ஆவது அயிக்கியத்தலம் முற்றிற்று.

ஆக - காப்பு பாயிரம் உள்பட செய்யுள் - 530

முதல் பரிச்சேதமாகிய
அங்கத்தலம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இரண்டாவது பரிச்சேதம்

இலிங்கத்தலம்

1-ஆவது ஆசாரலிங்கத்தலம்

(பக்கத்தலத்தைச் சேர்ந்த உட்பிரிவுகள்)

கலிநிலைத் துறை

ஆறுஎ னும்தலங் களின்முறை அறிந்தஆ சாரப்
பேறுஅ டைந்தவன் தனக்குஇலிங் கத்தலம் பிறங்கக்
கூறி டும்சிவ பிரான்அருள் ஆகமம் குறித்து
மாறுஒ ழிந்திடு சீவன்முத் தியில்வழங் குவஆய். 530

பத்த னேமுதல் அயிக்கன்ஈ றாகவே பகர்ந்த
அத்த லங்களின் திறம்உரைத்து அருளினை ஐய
சத்தது என்றுஉரை செயும்இலிங் கத்தலம் தான்யாது
எத்தி றங்களின் உரைத்திடப் படும்அஃது இயம்புவாய்.
531

தொலைத்த பந்தபத் தாதியாம் அறுதலம் தொடர்ந்த
இலங்கும் ஒண்குரு முதல்ஞான சூனியம் ஈறாய்ப்
பலந்த ரும்தலம் ஏழ்தலை யிட்டஐம் பதுவும்
நலந்த ரும்பொறை முனி இனி நவின்றிடப் படுமால்.532

முன்னர் ஒன்பதுஇங்கு உளபத்தத் தலம்தொடர் முறையால்
அன்ன முன்திகழ் தீட்சைபின் சிட்சைஞா னத்தால்
பன்னு றும்குரு கிரியைஒண் பாவஞா னத்தால்
மன்னி லிங்கநல் தலம்சுய சரபரம் வகுப்பாம். 533

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் அநீசத்வராய நம:

நாற்பத்துஐந்தாவது

(1) தீக்ஷா குருஸ்தலம்

கலிநிலைத்துறை

யாதி னால்பர ஞானம்ஈந் திடப்படும் இங்ஙன்
ஓது பாசபந் தனம்கெடுத் திடப்படும் அதுதான்
தீதில் தீட்சைஎன்று உரைத்திடப் படும்இது செய்யும்
நீதி ஒண்குரு மிக்கதீட் சாகுரு நிகழ்த்தின். 534

கூற ரும்குணா தீதமே குகாரமாம் ருகாரம்
வேறு இலங்குஉ ரூபாதீதம் என்குவர் மேலோர்
தேறி டுங்குணா தீதமாம் அருஅருள் செய்யும்
ஆறுஅ டைந்தவன் யாரவன் குருஎன மதிப்பாய். 535

சாத்தி ரப்பொருள் விளங்குற விரித்திடும் தகையால்
வாய்த்த மிக்கஆ சாரத்தின் வழிநிறுத் துதலால்
சீர்த்த அச்செயல் தானும்ஆ சரித்திடும் செயலால்
ஏத்து றப்படும் என்றும்ஆ சாரியன் என்றே. 536

அத்து வாமுடி யோகம்உற்று அருஞ்சிவம் ஆகும்
மெய்த்த தேசிக னேபவக் கடற்கரை விடுவோன்
எய்த்த டாஅறி வாய்உலகு இலங்குறும் எவனால்
அத்த யாகுரு உலகெலாம் விளக்குறு பவனாம். 537

தீட்சாகுருஸ்தலம் - முற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் சர்வஜ்ஞாய நம:

நாற்பத்தாறாவது

(2) சிக்ஷாகுருஸ்தலம்

கலிநிலைத்துறை

போத கத்தினன் ஆகியே தனையடை புதல்வர்க்கு
ஏதம் அற்றிடு கடாவினுக்கு எதிர்விடை இசைப்பால்
தீது அகற்றுசிட் சாகுருப் பெயரினைச் செறியும்
ஓதல் உற்றதீட் சாகுரு வேஎன உணர்வாய். 538

போத கம்சிவ தந்திரம் போதகப் படுதல்
ஓத ரும்சிவ ஞானம்என்று உணர்வுற உரைப்போன்
தீது அகன்றசிட் சாகுருப் பவஇருள் சிதைக்கும்
ஏது இந்துவாம் வாசகன் ஆரியன் என்பான். 539

உலகம் உற்றிடும் மாயையை ஒழித்திட அற்றாய்
இலகும் அத்துவி தத்தினுக்கு ஏதுவாய் இருந்த
தலைமை யின்பதி ஞானம்நல் குறும்அவன் தானே
புலமை பெற்றுள ஆரியன் என்பவன் புவியில். 540

பேதம் ஆகிய சகவிகற் பத்தொடு பிறங்கும்
ஆதி பூருவ பக்கமாக் கொண்டுமுற் றறிவால்
தீது இலாதவோர் அத்துவி தம்செய்சித் தாந்த
மேதை யோடுஉள இக்குரு பரன்குண மிகுத்தோன். 541

யாவன் வாய்மொழி ஐயம்என் வனத்தினை எறிய
வாவும் ஒண்பர சாம்அவன் குருசிகா மணியாம்
மேவும் தன்மொழி ஆடியில் விம்பமாய் விளங்கும்
மேவின் முத்தியம் திருவுளன் பவக்கடல் எடுப்பான். 542

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பரிந்து சீடர்தம் அகத்தினை ஞானதீ பத்தால்
திருந்த இங்குஇல குறுபவற்கு ஒப்பிலை செப்பின்
பொருந்து றும்பவப் பிணியினுக்கு ஏகமாம் போத
மருந்து தந்தருள் குருபரன் வாய்க்குமோ மண்ணில். 543

சிக்ஷாகுருஸ்தலம் - முற்றும்.

ஓம் பரமாத்மநே நம:

நாற்பத்தேழாவது

(3) ஞான குருத்தலம்

கலிநிலைத்துறை

ஐயம் நீக்குஉப தேசம்செய்து இவன்திகழ் அறிவைச்
செய்யும் உண்மையால் பெயர்ஞான குருவெனச் செறியும்
மையல் இன்றியே வளர்ஒளி மலிசிதம் பரத்தை
உய்ய நல்குவோன் ஞானதே சிகன்என உரைப்பார். 544

தேய்ந்து தான்அல மரும்மதி மறுவொடு செறியும்
வாய்ந்த ஞானமா மதிமறு வற்றது மருங்கில்
சேர்ந்த வல்இருள் அகற்றுவது ஒளிமணித் தீபம்
ஏய்ந்த ஞானநல் விளக்குஇருள் இரிப்பதுஎவ் விடத்தும்.
545

அனைத்தி னுக்கும்ஓர் காரணம் ஆகிய அறிவை
நுனித்து உரைத்தருள் குரவனே சிவனருள் நோக்காம்
பனிக்க திர்க்குஞா னக்கடல் பொங்குறப் பவமாம்
தனித்தஇ ருட்டுஅற வருகுரு ஞானபா ரகனால். 546

பொங்கு செங்கதிர்ப் புறத்துநின்று இணைவிழி புதைக்கும்
கங்கும் வல்லிருள் ஒன்றையே போக்குறும் கருதின்
இங்கு நல்லருள் ஞானதே சிகன்எனும் இரவி
தங்கும் உள்ளொடு புறத்துறும் இருள்எலாம் தள்ளும்.
547

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கடைக்கண் நோக்கினால் தியானாதி கற்பனை இன்றி
அடுக்கும் ஓர்சிவ வேதகம் ஆக்குறும் அறிவை
விடுக்கும் மால்உடை உயர்சீவன் முத்தனாய் மேவக்
கொடுக்கும் ஆரியன் ஞானசா கரன்எனக் குறிப்பாய்.548

ஞானகுருத்தலம் - முற்றும்.

ஓம் சோமசூர்யாக்நிலோசனாய நம:

நாற்பத்தெட்டாவது

(4) கிரியாலிங்கத்தலம்

கலிநிலைத்துறை

ஞான தேசிகன் ஞானயோ கம்கொடு நண்ணி
மானம் மேவிய கிரியைஎவ் இடத்தினில் மாயும்
ஆன இங்கது தான்கிரி யாலிங்க மாம்என்று
ஊனம் இன்றிய நூல்முறை உணர்ந்தவர் உரைப்பார்.549

அறிவு மேனியாய் உண்மையாய் ஆனந்த வடிவாய்ப்
பொறியு றாஒரு பிரமமே கிரியையின் பொருட்டுக்
குறிஉ றாவரும் இலிங்கம்என்று ஆதலால் கொண்ட
மறிவி லாஇலிங்க அர்ச்சனை பலமெலாம் வழங்கும்.550

யாகம் ஆதிய கிரியைகள் யாவையும் விடுத்து
யோக மாதவர் சித்தர்கள் யாவரும் உவந்தே
ஏகம் ஆகிய இலிங்கபூ சனையையே இசைவர்
ஆகை யால்இலிங் கம்சிறந்து ஒப்பிலாது ஆகும். 551

அரிய மாதவம் யாகங்க ளால்பயன் என்கொல்
பெருகும் ஆதரவில் இலிங்கபூ சனையினில் பெற்றான்
கிரியை யாவையும் தரும்பலம் அவன்அரோ கிடைத்தான்
தெரியி லோஅவற்கு அரிதென இல்லைஓர் சிறிதும். 552

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

வேதன் மால்முதல் ஆகிய விண்ணவர் குழாமும்
தீதுஇ லாதுஉயர் சித்தர்தம் கணங்களும் சிறந்த
போதம் ஆகிய இலிங்கபூ சனையினைப் புரிந்து
பேதம் ஆயதம் பதமொடு தம்தொழில் பெற்றார். 553

கிரியாலிங்கத்தலம் - முற்றும்.

ஓம் ஹவிஷே நம:
நாற்பத்து ஒன்பதாவது

(5) பாவலிங்கத் தலம்

கலிநிலைத்துறை

கிரியை எவ்வணம் இலயம்உற் றிட்டது கிளத்தின்
அரிய பாவமும் அவ்வகை அவ்விடத்து அடங்கும்
உரிய தாம்அது வேபாவ லிங்கம்என்று உரைப்பர்
தெரிய நூல்பல கற்றணர் உடையதே சிகரே. 554

பகவன் ஆகிய பரசிவன் பாவம்உற் றிடுவன்
திகழ்ப ராபரற்கு அனையதால் செய்திடும் செயல்என்
நிகர்இ லாதஅவ் இறையவன் நித்தபூ ரணனாம்
திகையு ளான்என உள்கஎன்று அருமறை சாற்றும். 555

கண்டி தப்படா அறிவுரு ஆகிய கடவுள்
கொண்டு பத்தர்செய்து உறும்உப சாரமே கொள்வான்
விண்த லத்துஉயர்ப் பாவத்தில் விளங்குறும் என்று
பண்டு கற்றறி நல்லிசைப் புலவர்தாம் பகர்வார். 556

மண்ணில் அம்சிலை முதலிய கொண்டுதாம் வகுத்துப்
பண்ணு றும்செயல் இலிங்கம்எங்கு அதின்நிகழ் பாவம்
நண்ணி லிங்கமே சிறந்தது ஞானகா ரணமாய
எண்ணு றும்குறை இன்றியே அமைவுறும் இயல்பால். 557

Digitization by Hindu-Heritage Foundation Academy. HHFA(USA)

புறத்தில் லிங்கம்விட்டு உளத்தினில் போதலிங் கத்தை
மறப்பு அறும்படி வைத்துளிப் பாவம்என் மலரால்
சிறப்பு றும்சிவ பூசனை அன்பொடு செய்யும்
அறப்பெ ருந்தகை தனைப்பாவ லிங்கிஎன்று அறிவாய். 558

மருவும் ஆதிஆ தாரநல் மனமலர் வரிவில்
புருவ நாப்பண்என்று உரைத்திடப் பொருந்துஇவற்று ஒன்றில்
திரிவில் நல்விளக்கு உருவமாம் சிவன்தனைப் பாவ
உருவ நற்பொருள் கொண்டுஅருச் சிப்பவன் யோகி. 559

மரம்கல் மண்ணினால் வகுத்துள இலிங்கவந் தனையைப்
புரிந்தி டான்அநு பூதியால் பரஞ்சுடர்ப் புணர்வோன்
விரிந்தி டுங்கிரி யாபூசை புல்லறி வினர்க்குஅந்
தரங்க பூசனை உரித்துமெய்ஞ் ஞானிகள் தமக்கே. 560

பாவலிங்கத்தலம் - முற்றும்.

ஓம் யஜ்ஞமயாய நம:

ஐம்பதாவது

(6) ஞானலிங்கத்தலம்

கலிநிலைத்துறை

அன்ன பாவஞா பகஞானம் எவ்விடத்து அடங்கி
மன்னி நின்றிடும் அதுஞான் லிங்கமாம் மதிக்கின்
என்ன இங்குஉரை யாடுவர் நன்றுற இலங்க
உன்ன ரும்சிவ தத்துவம் உணர்ந்திடும் உரவோர். 561

முக்கு ணங்கள் மும்மூர்த்திகள் கடந்துணர் முதன்மை
தக்கு றும்பரப் பிரமமே ஞானலிங் கம்தான்
பக்க தூலசூக் குமங்களில் கிரியைநல் பாவம்
புக்கு றும்பரால் பரத்தினில் ஞானமே பொருந்தும். 562

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தூல சூக்கும உருவங்கள் கற்பனை சொல்லின்
மேல தாம்பரஞ் சுடர்க்குஅவற் றால்விளை பயன்என
மால்இ லாதுஉயர் ஞானலிங் கத்தையே மதிக்க
நூல்ஏ லாம்ஒரு வந்தம்இங்கு உரைத்திடும் நுனித்து.563

சிறந்த சச்சிதா னந்தமெய்ச் சோதியாம் சிவனை
அறிந்து உளான்எவன் அவன்ஞா ன லிங்கிஎன்று அறிவாய்
புறந்த ரும்செயல் கிரியையும் பாவமும் போக்கி
நிறைந்தி டும்சிவம் அடைபவனே முத்தன் நிகழ்த்தின்.
564

ஞானலிங்கத்தலம் - முற்றும்

ஓம் சோமாய நம:

ஐம்பத்து ஒன்றாவது

(7) சுயத் தலம்

கலிநிலைத்துறை

பாவ ஞாபக ஞானமெய்ஞ் ஞானத்தின் பால்போய்
மேவி யேஒடுங் குறும் அந்த ஞானவான் விளம்பின்
பூவில் மேவுறுஞ் சுயன்நாமம் என்னவே புகல்வர்
காவி வாள்நெடுங் கண்உமை பங் கன்நூல் கற்றோர்.565

சோதி லிங்கதற் பரனுமாய்த் தோன்றுறும் உலக(ம்)
யாதும் ஓர்சிவ மயமெனக் கண்டுதன் இச்சை
நீதி செய்துறும் ஒருமுனி புங்கவன் நிகழ்த்தின்
ஆதி யாய்உயர் சுயநாமம் உடையவன் ஆகும். 566

பிச்சை ஊண்அடைந்து ஒழிந்தஆங் காரமும் பெற்று
நிச்சம் இந்தியம் அவித்துறு கிலேசங்கள் நீக்கி
நச்சு பூதியன் ஆகியே நடுநிலை நண்ணி
இச்சை யோடுஉவர்ப்பு இலான்பர முத்தன்என்று இசைப்பர்.
567

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

துன்ப வெம்பவ நேமியில் சுழன்றிடு பவரைத்
தன்பெ ரும்கணில் கண்டுஇறும் பூதொடு சார்வுற்று
இன்ப வெள்ளத்தின் மூழ்கினோன் ஆகியே இருப்பன்
முன்ப கர்ந்துள நிலையிடை நின்றிடும் முனிவன். 568

நண்ணு றும்சிவத் தியானநல் சைவஞா னம்தான்
உண்உ றும்செயல் பிச்சையே காந்த சீ லத்தோடு
எண்ணும் இங்கிவை நான்கையும் அன்றிமேல் எண்ணப்
பண்ணு றும்செயல் ஒன்றிவை பரமயோ கிக்கே. 569

சுயத்தலம் - முற்றும்.

ஓம் பஞ்சவக்த்ராய நம:

ஐம்பத்து இரண்டாவது

(8) சரத்தலம்

கலிநிலைத்துறை

ஒழிந்து போகும்ஆங் காரமும் மமதையும் உளனாய்
மொழிந்தி டாததன் சொரூபஞா னத்தினில் முதிர்ந்தோன்
தழங்கு வேலைசூழ் உலகினில் தானேதான் ஆகி
வழங்க வேசரித் திடுதலால் சரப்பெயர் மருவும் - 570

தீர்ந்த காமமே முதலன செறிந்துயர் சாந்தி
தாந்தி யோடுஎலாம் சிவமயம் ஆகவே சார்ந்து
போந்து ஈதுஉயர்வு ஈதுஇழிவு என்பது போக்கிச்
சார்ந்தி டும்சம புத்தியால் சரித்திடும் யோகி. 571

அரிய கூடத்தன் ஆயதன் நிலையினை அடைந்த
துரிய யோகிதான் தனைத்தொழு வாரிடைத் தோன்றும்
பரிவு றான்இகழ்ந் தவரிடை வெறுத்துளம் பகைக்கும்
திரிவி லான்ஒரு பரிசினாய் சரித்திடல் செய்யும். 572

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மாயை பெற்றிடாக் குணமொடு மருவியே என்றும்
ஆய அத்துவி தானந்தப் பெருங்களிப்பு அடைந்த
தூய மெய்ச்சிவ யோகிதான் தொல்சகம் நகைத்துச்
சாயும் மற்றுள உடம்புபோல் சரித்திடும் அன்றே. 573

விதிவி லக்கினில் பட்டிடா ஒருஞான வீரன்
கதிஅ டுத்திடு புண்ணிய பாவமும் கருதான்
மதிம யக்குறு மாயைவாழ் வினைஉளம் மதியான்
அதிக அத்துவி தானந்தம் உற்றுஅக மகிழ்வான். 574

சரத்தலம் - முற்றும்.

ஓம் சதாசிவாய நம:

ஐம்பத்து மூன்றாவது

(9) பரத்தலம்

கலிநிறைத்துறை

வேண்டு மாறுதான் சரித்திடும் விமலநல் யோகி
யீண்டு தன்சொரூ பம்தனில் பரம்இலை என்னும்
மாண்ட ஞானத்தி னுக்குஉயர் பரமரூஉம் எனவே
நீண்ட நூற்பொருள் உணர்ந்துளோர் நிகழ்த்துவர் அன்றே.
575

தன்னை யேபரத் துவத்தினால் பாவிக்கும் தகையான்
என்ன வாயின தொழில்களும் சுதந்திரத்து இயற்றி
இன்ன லாம்உல கினைஒரு பொருள்என எண்ணான்
வன்னம் ஆச்சிர மங்கள்ஆ சாரங்கள் மதியான். 576

உருவ ஞானமாய் உலகுஇறந்து ஒருசிவம் என்னப்
பரவு றும்பரப் பிரமமே நான்எனப் பார்க்கும்
உரவ னேஉயர்ந் தோன்உல குஉறுமயல் ஒழித்துக்
கரவி லாததன் சொரூபமே காண்பவன் முத்தன். 577

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பன்ன ரும்கரு மம்கடந்து உளஒரு பதத்தில்
தன்னை ஒன்சிவ மாகக்கண் டிருப்பவன் தனக்கு
முன்னு றும்கரு மத்துஉறு பதத்துஅயன் முதலோர்
என்ன செய்கிலர் ஏவல்என்று இசைப்பதற்கு இசைந்து. 578

விட்ட தேகமா னத்தினை உடையவன் வேண்டும்
இட்டம் ஆகிய நெறியினில் சரித்திரு வினையுள்
பட்டு ளோர்க்குஉறு தரிசன பரிசனங் களினால்
கட்டு மாய்வுறச் செய்வன்என்று இயம்புவர் கற்றோர்.579

மயல்இ லா தகச் சிதானந்த வடிவமாம் சிவத்தில்
அயல்இ லாதஓர் சமாநதை அடைந்துள யோகி
செயல்ல லாம்தனது இச்சையாச் செய்துதே சிகன்போல்
சுயம்உ றாஉயிர் முத்தனாய் வியப்பொடு சரிக்கும். 580

பரத்தலம் - முற்றும்.

1-ஆவது ஆசாரலிங்கத்தலம் - முற்றிற்று.

2-ஆவது குருலிங்கத்தலம்

(மாஹேஸ்வரத்தலத்தைச் சேர்ந்த உட்பிரிவுகள்)

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

முன்புற மொழிந்து நின்ற
முறைபத் தத்தலம் தொடர்ந்த
ஒன்பது தலமும் ஐய
உரைத்தனை தமிய னேனுக்கு
இன்புற இனிமா கேசத்
தலத்தினை எய்தி நிற்கும்
துன்புறு தலபே தங்கள்
தம்மையும் தோன்றச் சொல்வாய். 581

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கிரியைநற் பாவ ஞானம்
கிடைக்கும் ஆ கமம்ச காயம்
பரிவறும் அகாயம் பின்னர்ப்
பரகாயம் தருமம் பாவம்
மருவறும் ஆசா ரத்தால்
மகேசநற் றலம்ஒன் பானாம்
உரைசெயும் அவற்றின் உண்மை
உரைக்குதும் முனிவ கேண்மோ. 582

ஓம் விஸ்வேஸ்வராய நம:

ஐம்பத்து நான்காவது

(1) கிரியாகமத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அப்பர யோகி தானே
அருஞ்சிவம் அவன்தன் பூசை
ஒப்புறு கிரியை ஆகும்
உரைத்தஅக் கிரியை தன்னை
மெய்ப்புறு முதன்மை யாக
மேவும்ஆ கமம் த னக்குச்
செப்புறு பெயர்யாது என்னில்
செழுங்கிரி ஆக மம்தான். 583

ஒள்ளழல் அரணி தன்னின்
கடைதலை ஒழிந்துண் டாகாது
உள்ளுறும் சிவனும் செய்யும்
கிரியையை ஒழிந்து தோன்றான்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தெள்ளுறு நியம நாசம்
சேர்ந்திடாது ஆக மத்தில்
கொள்ளுறும் முறைவ ழாமல்
குறித்துநல் கிரியை செய்க. 584

விதித்திடு கருமம் தன்னுள்
விசேடமாம் சிவனது ஏவல்
மதித்தது தனையே செய்க
மாசில்ஆ சானைக் கொண்டு
பொதுத்தவிர் பூசை செய்க
புராரியைப் பரமன் தன்னைத்
துதிப்பொடு பூசை செய்வோன்
சுரர்எலாம் பூசை செய்வோன். 585

கருதுறு சிவபூ சைக்கண்
கருவிக ள்ஆன வற்றில்
ஒருதனி மனம்வைத்து என்றும்
உயர்சிவ யோக வேட்கை
புரிதரும் அமல யோகி
பொருந்திய மலங்கள் எல்லாம்
இரிதர அகற்ற வல்லன்
இதில்இலை ஐயம் அன்றே. 586

கண்ணிலன் முடவன் போலக்
கருதரு ஞான கண்மம்
எண்ணுறும் இரண்டும் ஒன்றை
ஒன்றவா யிருத்த லாலே
நண்ணுறு பலன்வி ருப்பின்
நன்றுறத் துறந்தா னேனும்
பண்ணுக அவைஇ ரண்டும்
எனமறை பகரும் அன்றே. 587

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அறிவினர் தமக்கு ஞானம்
அடைந்ததிங்கு எனினும் என்றும்
நெறிதரு கருமம் கூடி
நின்றிடும் அதனால் அம்ம
செறிதரு பலனில் தீர்ந்து
செய்கரு மங்க ளேனும்
வறிதென விடல்என்று ஓது
மதிமுடி வள்ளல் நூலே. 588

யாவர்க்கும் ஆசா ரம்தான்
எழிலணி யாகி நிற்குய
ஓவுற்றோன் அதனை நிந்தை
உறுகுவன் ஆசா ரத்தை
மேவுற்ற ஞானம் தன்னால்
விளங்குறும் ஈசன் என்றால்
சாவுற்று மெய்வீழ் காறும்
சார்வதுஆ சாரம் அன்றே. 589

கிரியாகமத் தலம் - முற்றும்.

ஓம் வீரபத்ராய நம:

ஐம்பத்துஐந்தாவது

(2) பாவாகமத் தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

வீவுறும் அவாவி னோடு
விளங்கறி உடைமை யோன்தன்
பாவசின் னங்கள் தாமே
பகர்பாவா கமமது என்ன

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யாவரும் அறிய நிற்கும்
என்றுளம் துணிந்து கோடி
பூவல யங்கள் ஏத்தப்
பொதியமா மலையில் உற்றாய். 590

சீரணி சிவோகம் என்னும்
பாவனை சிவம்அ தற்குக்
காரணம் வேறு ஞான
கருமம்கா ரணமே ஆகா
பூரண வத்து வாகும்
பொலிதரு ஞானம் அத்தின்
காரணம் தியானம் அந்தத்
தியானமே கருத்திற் கொள்க. 591

நிரந்தரம் உட்பு றம்பு
நிறைந்துள மகேசன் தன்னைப்
பரந்தரு பரமா னந்தப்
பயன்பெறும் பொருட்டு மேவி
விரிந்துள கலைகள் எல்லாம்
விளங்கிய அறிவி னாலே
தெரிந்துள புலவர் என்றும்
தியானமே செய்க மாதோ. 592

பொருளறு மொழியும் நூலில்
புக்குறா மதியும் தன்பால்
அருளுறு கொழுநற் தீர்ந்த
அரிமதம் மழைக்கண் செவ்வாய்ச்
சுருளுறு மலர்மென் கூந்தல்
துடியிடை மாதும் போலும்
தெருளுறு பாவ மோடு
சேர்ந்திடாக் கிரியை யன்றே. 593

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

கண்ணிலான் வடிவம் ஒன்றும்
காண்கிலா வாறு போல
எண்ணுபா வனையி லாதான்
இறைவனைக் காணான் முக்கண்
பண்ணவன் தனை அர்ச் சிக்கப்
பாவனை மனத்தி னோடு
கண்ணுறான் சிவனை அந்தப்
பாவனை நழுவி னோனே. 594

கீடசிந் தனையி னாலே
கிருமியுங் கீட மாகும்
பீடுறுஞ் சிவன்ன என்றும்
பிரிவறத் தியானஞ் செய்வோன்
நீடுறு சிவமே ஆவன்
நிட்கள சிவத்தி யானம்
கூடுஅரு தகைய தேனும்
குறிக்கொள்நீ அவன்தன் வாழ்வே. 595

ஓம் கணநாதாய நம:

ஐம்பத்தாறாவது

(3) ஞானாகமத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

நவின்றிடும் பரம யோகி
ஞானசின் னங்கள் தாமே
பவம்தொடர் மனிதர்க் கெல்லாம்
பவம்அற இன்ப வீடுஇங்(கு)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உவந்துஅருள் செய்யும் ஞானா
கமம்என உரைப்பர் மேலோர்
தவம்தனி உருவு கொண்ட
தனையசந் தனவெற்பு உள்ளோய். 596

கிரியைபா வங்கள் தம்மால்
கிடைத்திடும் பயனொன்று இல்லை
கிரியைபா வங்கள் மேவு
ஞானத்தால் கிடைக்கும் முத்தி
பிரிவுஇலா நூறு கோடி
பிறப்பினில் எனினும் கன்மம்
உரியவீடு உதவாது அம்ம
உதவுவது உயர்ஞா னம்காண். 597

ஞானம்மற்று ஒழிந்த கன்ம
நவைதரு பிறப்பிற்கு ஏது
வானவக் கருமம் தானே
அறிவொடு கூடும் ஆயின்
ஈனஅப் பிறவி மாற்றும்
ஈவது கருமம் பொன்றும்
வானிலைப் பதவே ஞானம்
வழங்குவது அழியா வீடு. 598

முன்னுறு நூல்கள் ஆதி
முயற்சியால் குரவன் சொல்லால்
பன்னரு ஞானம் ஒன்றே
பயிலுக ஒழிந்த வற்றால்
என்னறு பலன்ஞா னந்தான்
இயல்சிவாத் துவிதம் நல்கித்
துன்னுறு பவங்கள் எல்லாம்
தொலைத்திடும் நல்லோர்க் கன்றே. 599

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

தெரிந்திடும் உலகம் எல்லாம்
சிவமயம் சிவனில் வேறா
இருந்துஉள பொருள்ஒன்று இல்லை
ஆதலால் சிவன்நான் என்றே
புரந்தரும் உணர்வு தானே
உத்தம ஞானம் என்பர்
அருந்தவ முனிவர் ஏறே
ஆகம நெறிஉ ணர்ந்தோர். 600

கண்ணிலான் எதிர்ந்து ஒன்றைக்
காண்கிலான் அதுபோல் நீங்காது
உள்நிலாம் இறையை ஞானம்
ஒழிந்தவன் காணான் என்று
நண்ணுறாது ஒழிக்கும் பாச
நற்சிவ காட்சி ஞானக்
கண்ணுளார் தங்கட்கு அந்தக்
காட்சிதான் எளிது மாதோ. 601

எறிசுடர் அன்றி இல்லில்
இருளறா ததுவே போல
அறிவினை ஒழிய நீங்காது
அகத்துறும் மோகம் தானும்
மறிவறு ஞானம் ஆகும்
வலிகெழு கதவம் கொண்டு
பொறிவழி அடைத்து மிக்க
பொதியில்வீற் றிருக்க வல்லோய். 602

ஞானாகமத்தலம் - முற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் பிரஜாபதயே நம:

ஐம்பத்தேழாவது

(4) சகாயத் தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

கிரியைநற் பாவ ஞானம்
கிடைத்திடா காயம் இன்றேல்
விரிதரும் உலகில் யார்க்கும்
விளம்புறின் அதனால் யோகி
தரையுறு சகாய னாகச்
சரிப்பன்என்று எடுத்து ரைப்பர்
அரிமதர் மழைக்கண் மங்கை
பாகன்ஆ கமங்கள் வல்லோர். 603

ஏகமா ஞான யோகி
என்னினும் உடம்பி னானே
போகமா முத்தி ஆதி
பொருந்துவன் விறகை யின்றி
ஆகுறாது ஒளிரும் அங்கி
அதுவென ஆக்கை இன்றி
யோகிதான் ஆன்ம ஞானம்
உடையவன் ஆகான் அன்றே. 604

ஒப்பறு பரமன் தானும்
உருவொடு பூசை கொள்வன்
அப்பரிசு உடம்பின் மேவி
அருச்சனை கொள்வன் யோகி
செப்பும்ஐந் தொழிற்கும் ஆகச்
சின்மயன் ஆகும் ஈசன்
மெய்ப்புறும் மூர்த்தி மானாய்
விளங்குவன் என்பர் மேலோர். 605

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அயன்முதல் ஆகி நின்ற
அமரரும் முத்தி வேட்ட
மயல்முனி முனிவர் தாமும்
யாவையும் வழங்க வல்ல
செயல்மிகு தவம்உ டம்பால்
செய்தனர் அத்த வத்திற்கு
இயன்முதல் ஆய ஆக்கை
யினைவிடல் ஆகாது அன்றே. 606

சகாயத்தலம் - முற்றும்.

ஓம் ஹிரண்யரேதஸே நம:

ஐம்பத்தெட்டாவது

(5) அகாயத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆகிரிய விருத்தம்

சாற்றிய பரம யோகி
சகம்சிவ மயம தாகத்
தோற்றுறு நிலையி னால்பொய்
மாயையின் தொடக்கி லாத
ஆற்றலால் உதவி யாகும்
ஆக்கையன் ஆத லாலே
போற்றுறும் அகாயன் என்றே
புகன்றிடப் படுவன் அன்றே. 607

சங்கரன் எனமெய் யோடு
சாரினும் பரம யோகிக்கு
இங்குறும் உடல்வி காரம்
இலாமையால் அகாயன் ஆகும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொங்கொளி யம்ப ரத்திற்
புக்குறும் யோகிக்கு ஆகம்
எங்குளது உடம்பி போல
இருப்பது பிராந்தி யன்றே. 608

ஆக்கையின் மானம் இல்லாது
அருஞ்சிவம் ஆகி நிற்கும்
நோக்குறு மியோகிக்கு ஆக்கை
நுவன்றிடும் உலகம் என்றால்
போக்கறும் உடலம் ஒன்றால்
பொருந்துறும் வாதை யாதோ
ஈர்க்கும்இந் தியஆங் கார
இடரவற்கு இல்லை அன்றே. 609

மயக்குறு மனிதன் அல்லேன்
வானவன் தானும் அல்லேன்
இயக்கனும் அல்லேன் மிக்க
இராக்கதன் அல்லேன் என்றும்
உயர்த்துறு சிவமே நானென்று
உணர்ந்தவன் தனக்கு வந்து
பயக்குறும் உடம்பு செய்யும்
கருமம்என் பயனைச் செய்யும். 610

அகாயத்தலம் - முற்றும்.

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

ஓம் துர்த்தர்ஷாய நம:

ஐம்பத்தொன்பதாவது

(6) பரகாயத் தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பகுதியை வசிக ரிக்கும்
பான்மையால் மாயா மார்க்கத்
தொகுதியை நீங்கி நிற்கும்
தூய்மையால் அறிவா னந்தத்
தகுதிகொள் பிரமம் தானாய்த்
தகும்பர காயன் ஆவன்
மிகுதிகொள் தவத்தர் கோவே
விளம்புறும் அகாயன் அன்றே. 611

பேரறி வுருவாய் நின்ற
பிரமமே வடிவம் ஆனோற்கு
ஏரறு மாயை யாக்கை
யாற்பயம் என்னே ஞான
ஆரழ லாற்பி றப்பிற்கு
ஆதியாம் உடலம் சுட்டு
நேரறு சிவம்அ டைந்தோன்
நிகழ்பர காயன் என்பான். 612

வினைதரும் மனோவி ருத்தி
விடயஇந் தியங்கள் எல்லாம்
எனையதில் அடங்கும் அந்த
இரும்சிவ மே இ வற்குத்
தனியுரு ஆகும் நானே
சிவமெனச் சகங்கள் எல்லாம்
நனியறி வாகிக் கண்டோற்கு
உடல்சொலல் நல்மால் ஆகும். 613

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சோதியாம் பிரம மேதன்
சொரூபமாய்ச் சிந்தை செய்வோன்
மேதையாம் உடம்போ டுற்று
மெய்யிலி சீவன் முத்தன்
போதமா மியோகி யாக்கை
யிருப்பினும் போகி னுந்தான்
தீதிலா முத்தி யாகும்
என்பர்நூல் திருந்தக் கற்றோர். 614

பெரும்பவ நோய் வ ருத்தல்
பிறங்குதல் சொரூப ஞானம்
பொருந்துறும் அளவே அன்றோ
பொங்கொளி இரவி தோன்றப்
பரந்திடும் இருளும் உண்டோ
பகர்ந்திடின் காலா தீத
அரும்பதம் அடைந்து ளோனுக்கு
ஆக்கையுள் படுதல் இன்றே. 615

பரகாயத்தலம் - முற்றும்.

ஓம் கிரீசாய நம:

அறுபதாவது

(4) தருமாசாரத் தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அப்பர காயன் செய்வது
யாதொரா சாரம் அம்ம
செப்புறும் அதுதான் யார்க்கும்
செய்திடும் தருமம் ஆகி

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

ஒப்பறும் உதவி யாம்என்று
உரைப்பர்கள் உணர்வின் மிக்கோர்
துப்புறழ் சடிலக் கற்றைச்
சுடர்முடி முனிவர் வேந்தே. 616

கூறரும் தருமா சாரம்
கொல்லாமை வாய்மை யோடு
வேறுறும் களவு இலாமை
வெகுளாமை பிரம சரியம்
பேறெனும் தயையே தானம்
பிறங்குறு செபம்தி யானம்
மாறரும் பூசை யென்று
வகுத்துரை செய்வர் மேலோர். 617

வினையிலி ஆக மத்தின்
விதித்தஇத் தருமஆ சாரம்
புனையிழை யாகக் கொள்வோன்
புராரிதன் அருளுக் கேற்றோன்
நினைவுஅற அறம்அ லாமை
நியமஞ்செய் தருமம் தன்னை
நனிவரு காமம் இன்றி
நவிற்றுதல் ஞான ஏது. 618

உலகெலாம் ஒருதான் ஆக
உன்னலால் வடிவம் ஆதி
விலகலால் உயிர்கள் எல்லாம்
வேறறத் தானாய்க் காண்பான்
உலகெலாம் சிவம்ஒன் றாக
உணர்ந்தவற்கு எனதென்று எண்ண
இலகும்ஓர் பொருளும் உண்டோ
இலைஎன விளம்பும் நூலே. 619

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அறிநெறி முத்தி யேது
ஆதலால் அவ்வ றத்தைத்
துறவினன் எனினும் செய்க
தொல்லறி அமுதந் தன்னால்
நிறையினும் அறத்தை நீங்கான்
நின்றதன் ஒழுக்கம் நோக்கிப்
பிறரிது நெறியென் றெய்தப்
பெறுதலால் பரம யோகி. 620

விமலனும் சதாசா ரத்தில்
விருப்புளன் ஆகி என்றும்
அமலுறும் ஆசா ரத்தால்
அருச்சிக்கப் படுவன் கண்டாய்
நிமலமாம் ஆசா ரத்தை
அன்றியே நெற்றி நாட்டத்து
உமையொரு பாகன் செய்யும்
ஓங்குஅருள் உண்டா காதால். 621

தருமாசாரத்தலம் - முற்றும்.

ஓம் கிரிசாய நம: .

அறுபத்தொன்றாவது

(8) பாவாசாரத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அறமுறும் இவன்தன் பாவம்
அனைவர்க்கும் பாவா சாரம்
திறமுறு பாவம் தன்னைச்
செப்புறின் மனவ ழக்காய்

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

நிறைதரு சிவனைப் பற்றி
நிற்பதென்று அறிந்து கொள்நீ
மறிதிரை சுருட்டும் ஆழி
வாய்மடுத்து உண்ண வல்லோய். 622

பாவனை யாற்செய் கன்மம்
பாவனங் களினுள் மேலாம்
பாவனை யால றத்தைப்
பண்ணுக அதனால் என்றும்
பாவனை யால்செய் கன்மம்
பலித்திடு மனமும் தூய்தாம்
பாவனை யாலென் றெண்ணிப்
பாவனை விடாமற் செய்க. 623

நித்திய கருமம் ஆதி
நிகழ்சிவ பாவந் தன்னால்
சுத்தநல் யோகி செய்து
துரிசினில் கட்டு றானால்
சித்தெனும் இரவி தன்னைச்
சிந்தையில் பாவித்து எய்தல்
உத்தமம் ஆய சந்தி
வந்தனை உணர்ந்து கொள்ளே. 624

பரசிவ அங்கி தன்னில்
படர்புல இந்த நத்தைத்
துரிசறு பாவத் தாலே
சுடுதலே யாக மாகும்
பரிசுறு கருமம் எல்லாம்
பரமனுக் காவ ஆகக்
கரிசுறு பவந்தொ லைப்பான்
கருத்தினில் கொள்க மாதோ. 625

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

. செயத்தகு செயல்செய் யாத
செயலெல்லாம் சிவன்பால் வைத்த
மயக்கமில் அறிவன் தீமை
மருவுறான் என்பர் தன்னை
வியக்குறும் உலகை ஞான
விமலனை வேறி லாமல்
அயிர்ப்பற வொன்றாய்க் கண்டோன்
கண்டவன் ஆகு மன்றே. 626

பாவாசாரத்தலம் - முற்றும்

ஓம் அனகாய நம:

அறுபத்திரண்டாவது

(9) ஞானாசாரத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இந்நிலை யோகி தன்பால்
இலங்குறு ஞானா சாரம்
மன்னிய வுலகில் யார்க்கும்
மருவிய ஞானா சாரம்
என்னநன் குரைப்பர் கற்றோர்
இரைந்திழி யருவிக் குன்றந்
தன்னைவென் றிணையெ றிந்த
தவத்தினில் உயர்ந்த மேலோய். 627

. ஞானமா வதுசி வாத்து
விதிஞானம் என்பர் நல்லோர்
ஏனைய ஞானம் எய்திற்று
என்னினும் எய்தா தேனும்

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

தானதால் ஆவது என்கொல்
சாற்றுமப் பரஞா னத்தால்
ஊனமாம் பிறவி நீங்கும்
ஒழிந்ததால் ஒழிந்தி டாதால். 628

பூரண ஞானம் பற்றிப்
புரிவதே ததுதான் மிக்க
வேரணி ஞானா சாரம்
என்பர்நற் சிவமி தென்னும்
பேரணி பரத்தில் எல்லாம்
பேரறி வாலொ டுக்கும்
சீரணி பவனே யாகும்
திகழ்தரு ஞானா சாரி. 629

முத்தியை உதவும் ஞானம்
குருவருள் முறையின் பெற்றோன்
எய்த்திடும் பவம்பெ ருக்கும்
கருமத்தில் இச்சை செய்யான்
தத்துஅலை ஒழுகு நீர்போல்
சார்ந்துள கரும பந்தம்
சுத்தமெய்ஞ் ஞானத் தீயாற்
சுடுதலான் மறித்துந் தோன்றா. 630

ஞானம்இ லாதான் கன்ம
நாணினாற் கட்டுப் பட்டான்
ஞானமு ளான்அக் கன்ம
பந்தனை நழுவி னோனாம்
ஞானஆ சாரம் நண்ணிப்
பரசிவ நாட்டம் பெற்ற
ஞானிதான் சீவன் முத்தன்
ஆகியே நடிக்கும் அன்றே. 631

ஞானாசாரத்தலம் - முற்றும்.
2-ஆவது குருலிங்கத்தலம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

3-ஆவது சிவலிங்கத்தலம்

(பிரசாதிக்குச் சேர்ந்த உட்பிரிவுகள்)

கலிநிலைத்துறை

தாவி லாதமா கேசநற் றலத்தவாந் தலங்கள்
யானு மோதினை யினிப்பிர சாதியத் தலத்தை
மேவு றுந்தல பேதமும் விளங்குற எனக்கு
நாவ லோர்புகழ் தருகண நாயக நவில்வாய். 632

காயம் இந்தியம் பிராணநல் லநுகிர கந்தாம்
காய மோடுறு கரணபா வார்ப்பிதம் கருதின்
ஏய சீடனற் சிசுருடை சேவியத் தலமென்று
ஆய அத்தலம் ஒன்பதாம் அவற்றையும் அறைவாம்.633

ஓம் புஜங்கபூஷணாய நம:

அறுபத்துமூன்றாவது

(1) காயாநுக்கிரகத்தலம்

கலிநிலைத்துறை

இந்த யோகிதன் மெய்யினை யிலங்குறக் காட்டி
வந்தி யாரையும் உலகினில் அளித்திடும் ஆற்றால்
உந்து பேரெழில் உடலநுக் கிரகனென் றுரைக்கும்
முந்தும் நாமமுற் றிடுமென அறைகுவர் முன்னோர். 634

அண்ண லாகிய பரசிவன் வடிவுகொண் டடுத்திங்கு
எண்ணி லாவுயி ரியாவையும் அளித்திடும் இயல்போன்
மண்ணில் யோகியும் வடிவொடு மருவியா வரையும்
நண்ணி யேயளித் திடுபவ னாமென நவில்வார். 635

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஈசன் மேனியோடு ஒன்றினும் பற்றிலன் என்ப
மாசில் யோகியும் உடம்பினன் எனினுமவ் வாறாம்
பாசம் மாய்வுறும் அருஞ்சிவ பாவனை அதனால்
தேசு லாவுறு பரசிவ னாமவன் திண்ணம். 636

இன்ப வெள்ளமாம் சிவத்தினில் மனவழுக்கு இறந்த
துன்பில் யோகிமா யைப்பொருள் தோன்றுறக் காணான்
முன்பு வெள்ளியன் றிதுவென இப்பிகாண் முறைபோல்
பின்பு இலங்குறும் இதுசகம் அன்றெனப் பிரமம். 637

சொற்ப னப்பொருள் விழித்திடத் தோன்றிடா மாயா
கற்ப னைப்பொருள் ஞானம்வந் துற்றிடிற் காணா
முற்பெ றச்சக மயக்கினுக்கு அவித்தையே முதன்மை
நிற்பது அற்றிடின் அதுபினை உலகெதிர் நில்லா. 638

விண்ட மூலஆங் காரனாய் விளிந்திடும் உபாதி
கொண்டு தான்விளை யாடலான் மெய்யொடு கூடிக்
கண்ட யோகிமெய் யாளர்போல் நடித்திடும் கண்டாய்
மண்டு வெண்டிரைக் கருங்கடல் மடுத்தவாய் மலரோய்.
639

காயாநுக்கிரகத்தலம் - முற்றும்.

ஓம் பர்க்காய நம:

அறுபத்துநான்காவது

(2) இந்திரியாநுக்கிரகத்தலம்

கலிநிலைத்துறை

வடிவு கொண்டருள் பவனது காட்சியான் மருவும்
ஒடிவில் இந்திய விவேகமே உலகுளார் யார்க்கும்
படிவில் இந்தியா நுக்கிர கம்மெனப் பகர்வர்
முடிவ றுஞ்சிவ தத்துவம் உணர்வரு முனிவர். 640

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இந்தி யங்கள்தத் தம்புலன் இதமொடு வெறுப்பாய்
வந்து றும்படி அடைந்திடும் இவனவை மருவான்
இந்தி யங்கள்தாம் புறந்திரிந் திடுதலே பந்தம்
இந்தி யங்கள்நின்று அகத்தடங் கிடுதலே முத்தி. 641

உள்ளு றுஞ்சிவத் தொடுங்கிய மனமுடை யோகி
கொள்ளும் இந்தியம் யாவையும் கூடினும் கூடான்
தெள்ளு றும்பர சிவத்தையே காண்குவன் சிறிதும்
விள்ளு றும்பிற பொருளினைக் கண்டிடான் விழித்து.642

மானம் இன்றியே சிவத்தினில் வைத்தவிந் தியத்தோன்
ஊனம் ஒன்றிய மூப்பொடும் உயிர்விடு மரணந்
தானு ணும்பசி தாகமென்று இவற்றினைச் சாரான்
வான மொன்றொடும் பற்றிலா வாறென மன்னோ. 643

எங்கண் எய்துறும் மனமவன் எய்துமிந் தியமுஞ்
சங்க ரன்தனை உறின்மனஞ் சரிக்குமோ புலன்கள்
இங்க ருஞ்சிவ யோகிதான் மனத்திடை எண்ணிப்
பங்க மின்றியே பார்த்திடும் பொருளெலாம் பரமாம்.644

கரண மோடுறு பிராணனாம் மனத்தொடு கலந்தோன்
புரண மாஞ்சிவ மாகுவன் சகமயல் பொன்றி
முரணு றும்புலன் யாவினு முயன்றும்உட் புறமோர்
அரண அஞ்சிவம் அடைந்தவன் எங்குமின் படைவான்.
645

இந்திரியாநுக்கிரகத்தலம் - முற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் கிரிதந்விநே நம:

அறுபத்தைந்தாவது

(3) பிராணாநுக்கிரகத்தலம்

கலிநிலைத்துறை

சிவமெ னும்பர வடிவமாய்த் திகழ்ந்திடும் இவன்தன்
உவகை யந்தரி சனமிகும் உலகுஅனைத் தினுக்கும்
பவம்அ றும்படி உயிர்அநுக் கிரகமாப் பகர்வர்
தவம்அ டைந்துயர் தத்துவம் உணர்ந்துள தலைவர். 646

யோகி னாற்சிவத் தொடுங்கிய உயிருளன் எனினும்
ஆக மேவுறும் தன்சத்தி வாசனை அதனால்
ஏக மாஞ்சிவத்து அடங்கிய பிராணனோ டிருப்போன்
போக மார்புல னொடுமனம் எங்ஙனம் பொருந்தும். 647

தத்தம் வெவ்விட யங்களைச் சார்வுற மீள
உய்த்தி டுங்கர ணங்களோடு உள்ளடங்கு உயிரான்
மெய்த்த சாந்தியன் ஆகியே விளங்குவன் என்று
முத்தன் ஆகமம் முழுதையும் உணர்ந்தவர் மொழிவார்.
648

சாந்தி யாம்எனில் இங்குயிர் விருத்திதான் தழைந்து
போந்த வன்மன விருத்தியோடு அமைந்திடும் புகலின்
ஏய்ந்த அம்மனச் சாந்தியா இலங்குறும் யோகி
ஆர்த்தி டுஞ்சிவம் அன்றிவே றொருபொருள் அறியான்.
649

உடம்பி னுக்குயிர் உயிரினுக்கு இறைவன்ஆ தாரம்
அடைந்த காரணன் ஆகிய சிவன்நிரா தாரன்
தொடர்ந்து மாபர னால்உயிர் உயிரினால் தோன்றி
மடங்கு காயநின்று இயங்குறும் எனமதி மதித்தே. 650

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இந்த வாயுநற் பயிற்சியால் இன்பபூ ரணமாய்
அந்தம் ஆதியி லாததாய் அறிவுரு வாகிப்
பந்தம் ஆகிய தத்துவம் கடந்துயர் பரத்தில்
வந்து மாய்தலில் யோகிதான் சலித்திடான் மன்னோ. 651

நீங்கு வாசனை உடையனாய் நிகழுயிர் விருத்தி
ஈங்கு மாறுபு சிவத்தினில் ஏகமா யிருப்போன்
ஓங்கு தாணுவொத்து அசைந்திடான் என்றுமென் றுணர்க
வாங்கு வார்திரைக் கடல்குடித்து உயர்ந்திட வல்லோய். 652

பிராணாநுக்கிரகத்தலம் - முற்றும்.

ஓம் கிரிப்ரியாய நம:

அறுபத்தாறாவது

(4) காயார்ப்பிதத்தலம்

கலிநிலைத்துறை

அருள்செ யப்பர யோகிதான் அருச்சனைப் பொருட்டு
மருள்செய் யிவ்வுடல் மானமற் றிடுவதே மதிப்பின்
தெருள்செய் கின்றகா யார்ப்பிதம் என்றுரை செய்வர்
இருள்செய் வெம்பவம் அகன்றுநல் லறிவறிந் திருப்போர். 653

என்று தன்னுடம்பு ஈசனுக்கு அர்ப்பிதம் செய்வன்
அன்று தன்வடிவு வொருசிவ வடிவமே யாகும்
ஒன்றும் இந்திய விடயஇன் பங்களை யோகி
நின்ற சின்மய சிவத்தினுக்கு ஆக்குவன் நேர்ந்து. 654

கண்டு கேட்டுமற்று உண்டுஉயிர்த்து உற்றிடு காலைக்
கொண்ட இன்பங்கள் யாவையும் சிவத்தினில் கொடுத்து
மண்டி இவ்வுடல் வழிவரும் மற்றுள சுகமும்
விண்ட வெம்தளைப் பரமனுக்கு ஆக்குவோன் விமலன். 655

காயார்ப்பிதத்தலம் - முற்றும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் கிருத்திவாச நம:

அறுபத்துஏழாவது

(5) கரணார்ப்பிதத்தலம்

கலிநிலைத்துறை

ஆதி ஆகிய சிவத்தினில் கரணங்கள் அனைத்தும்
வேதி யாவதன் இடைப்புணர்த் திடுதலே விளங்கத்
தீதில் நூல்கர ணார்ப்பிதம் என்னவே தெரிக்கும்
பூத நாயகன் அருள்கொடு பொதியிலிற் புகுந்தோய். 656

யாது தானொரு கரணங்கொண் டுறுபுலன் இடத்தில்
போதும் ஓர்சுகம் சிவத்தினிற் சமர்ப்பணை புரியும்
நீதி யான்கர ணார்ப்பிதன் என்னவே நிகழ்த்து
மாது பாதியன் அருளிய ஆகமம் வகுத்து. 657

அகந்தை யாமதம் பொழிதரு கரணவா ரணத்தை
மிகுந்த மாசிவம் எனுந்தறி பிணிப்பவன் வீரன்
பகுந்த விந்தியத்து அதிபதி யாமனம் பரத்தில்
புகுந்து ளான்தனக்கு அதுதொடர் பொறிகொடென் பொருந்தும்.
658

இந்தி யங்களை மறித்தருஞ் சிவத்தினில் இசைத்தோற்கு
அந்த வெம்பவம் முழுகுத லியாண்டுளது அறையின்
இந்தி யங்கள்தன் வழிப்படுத் திடல்பவம் என்னும்
பந்த வல்வனம் எறிந்திடற்கு ஒருபெரும் பரசாம். 659

இந்தி யங்களால் பாவபுண் ணியங்கள்வந்து எய்தும்
இந்தி யஞ்சிவத்து ஆக்கினாற்கு இருவினை இல்லை
அந்த வெம்பவம் உறான்மனத்து ஆம்சக அவியை
முந்து ஞானவார் அழலிடை யிட்டிடும் முறைபோல்.660

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அகம்பு றங்களும் நிறைந்துள ஞானஅங் கியினின்
மிகும்பு லன்கள்எ னஅவியிடை யிட்டுவேட் கின்றோன்
உகந்தி டும்பர முத்தன்ஒத் தொருசிவ மாம்என்று
இகம்ப ரங்களும் உணர்ந்தவர் இயம்புவர் அன்றே. 661

பொறிகள் யாவையும் போகசா தனம்எனும் புரமும்
நெறிகொள் ஈசனது அருச்சனை அங்கமா நினைந்தோன்
குறிகொள் அங்கமில் ஒருபர முத்தியே குறுகும்
வெறிகொள் வண்டினம் இசைமுரல் சந்தன வெற்போய்.
662

கரணார்ப்பிதத்தலம் - முற்றும்.

ஓம் புராராதனே நம:

அறுபத்து எட்டாவது

(6) பாவார்ப்பிதத்தலம்

கலிநிலைத்துறை

சலனம் இன்றிய பாவனை கொண்டுசற் பாவ
நலமு றும்சிவன் இடத்தினில் அர்ப்பிதம் நவிற்று
நிலையில் அங்குபா வார்ப்பிதம் என்னவே நிறுப்பர்
புலமை கொண்டுயர் சிவநிலை உணர்ந்திடும் புலவர்.
663

மான சந்தனைப் பாவமென்று அறைகுவர் மனத்தில்
ஆன அப்பொருள் நினைவுஒரு சிவத்தில் அர்ப் பிதமாம்
ஈன வெம்பவம் அடைகிலன் பாவசுத் தியினோன்
தானது இங்கிலன் பவத்தினிற் சுழலுவான் தளர்ந்தே.664

பாவ சுத்திதான் சிவோகமென் யோகமாய்ப் பகர்வர்
பாவம் அற்றது தீர்ந்துளன் பவத்தினிற் படுவான்
மேவி யுண்பவன் உணும்பொருள் ஊட்டுவோன் விளம்பின்
யாவும் ஓர்சிவ மயம்என எண்ணுவோன் சிவனாம். 665

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மித்தை என்றுலகு அனைத்தையும் விடுத்தறிவு இன்பச்
சத்து எனும்சிவந் தன்னையே நினைந்துறுந் தகையோன்
எத்தி றங்களின் ஆயினும் மலத்துடன் இசையான்
முத்தன் என்றவன் தனைமொழி குறுவர்மூ தறிஞர். 666

கருமம் யாவும்ஓர் பரசிவ பூசனை கழறும்
உரைகள் யாவும்ஒண் துதியென உண்ணுவோற்கு இல்லை
கரும பந்தனை இன்பதுன் பங்களைக் கருதாது
ஒருப ரன்தனக்கு ஆக்குவோன் உயர்சீவன் முத்தன். 667

பாவார்ப்பிதத்தலம் - முற்றும்.

ஓம் பகவதே நம:

அறுபத்தொன்பதாவது

(7) சீடத்தலம்

கலிநிலைத்துறை

பிரம மே வடி வாகும்அப் பெரியவன் தன்னால்
அருள்பு ரிந்தளிக் கப்படு வோனவன் அருளால்
பரம வின்பவீ டவாவுளோன் எவனவன் பகரின்
இருமை தங்கிய சீடன்என்று உயர்ந்தவர் இசைப்பார்.668

பாவ நற்குணங் கட்குஇட மாகியே பரமாய்
மேவு சற்குரு பரனிடை மனமொழி மெய்யால்
யாவும் உற்றவன் தன்னையே சீடனென்று இசைக்கும்
காவி யொத்தகண் மலைமகள் பாகனா கமங்கள். 669

சாந்தி தாந்திநற் றவஞ்சம தரிசனம் வாய்மை
வாய்ந்து மாண்குரு சிவனிடை யொத்தநன் மனத்தால்
ஏய்ந்து ளான்றனைச் சீடசூ டாமணி என்பர்
தீர்ந்த மாலுடை ஒருபர சிவமுணர் திறத்தோர். 670

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குருவை மெய்ச்சிவம் ஆகஅச் சிவன்தனைக் குருவாய்
ஒருமை பெற்றிடக் காண்கஅக் குருபரன் உரைத்த
திரிஅ றச்சிவ நெறிசிவத் தியானமெய்ஞ் ஞான
மருவல் உற்றவை நிட்டையின் ஓங்குக மாதோ. 671

அண்ட மொக்குள்சேர் மாயையங் கடலுய ராசான்
கண்ட நல்லருள் கடைக்கணால் வற்றுறுங் கலப்பப்
பண்டி ரும்பிர தத்தினால் பசும்பொன்ஆ மாபோல்
மண்ட லந்தனின் மனிதருஞ் சிவமயம் ஆவார். 672

தேசி கன்தனது ஆணையைக் கடந்திடல் செய்யான்
ஆசு அகன்றுள ஞானமுற்று அடைகுவன் அவனால்
பேசு றும் சக மித்தைபேர் அறிவது பிரமம்
ஏசல் இன்றது நீஎன இசைந்தவன் முத்தன். 673

பிறவி நன்மருந்து ஆகிய பிரமஞா னத்தை
அறவன் என்றுயர் குரவனால் அடைந்துவந் தமர்வோன்
உறவு வெம்பகை யிலாவுயிர் முத்தனென்று உரைப்பர்
மறு அ கன்றுள கலைமுழுது உணர்ந்துறு மதிஞர். 674

சீடத்தலம் - முற்றும்.

ஓம் விஸ்வேஸ்வராய நம:

எழுபதாவது

(8) சிசுருடைத்தலம்

கலிநிலைத்துறை

பீடு றுங்குரு வால்அருள் செய்திடப் பெற்ற
சீடன் ஒண்குரு சிசுருடை விருப்பினைச் செயலால்
நாடு றுஞ்சிசு ருடைப்பெயர் நண்ணுவன் என்னப்
பாடு றும்புகழ் மாதவ ஆகமம் பகரும். 675

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மெய்ம்மை யாதுபொய் யாதுயிர் யாதுதான் விளங்கும்
செம்மை யார்சிவம் யாதென வினவுவோன் சீடன்
இம்மை யேசிவம் அருள்குரு வின்மொழி கேட்டுப்
பொய்ம்மை போயகம் அமைபவன் வீட்டினைப் பொருந்தும்.
676

ஆரி யன்தனது உரையிலாது அலர்வுறாது இதயம்
சூரி யன்தனை யலால்மரை அலர்வுறா சொல்லின்
ஆரி யன்றிகழ் வால்விளங் குவன்அருட் சீடன்
சூரி யன்திகழ் வாற்கதிர் காந்தமும் சுடரும். 677

சீட னக்குரு பரனெதிர் அஞ்சலி செய்து
கேடி லத்துவி தானந்தம் ஒன்றையே கேட்க
நாடு தத்துவம் யாதுலகு எதன்கணே நண்ணும்
வீட டுத்துறல் யாதினால் விளம்புக என்பான். 678

இன்ன வாறுஅருஞ் சீடனோர் வினாவுறல் இறைவன்
இன்னல் அம்பவம் ஒழிகுவான் தத்துவம் இசைப்பன்
உன்ன ருஞ்சிவ னேபரம் உண்மையும் அவனே
அன்னி யங்களாம் இச்சகம் அநித்தம்என்று அறிவாய்.
679

மித்தை யாம்சகம் சிவனிடை மேவுறும் வெள்ளி
சுத்தி மேவல்போல் சிவோகம்என் பாவனை தோன்றின்
அத்த னாகிய சிவநிலை உண்மையை அடைய
முத்தன் ஆகுவன் பவநெறி மூலமாம் மோகம். 680

மைந்த நீஉனைச் சிவமயம் என்னவே மதித்திங்கு
இந்த வேறெனும் உலகினை எண்ணலை இங்ஙன்
வந்து றுஞ்சிவாத் துவிதவின் பத்தினான் பருவிப்
பந்தம் இன்றிய வுயிர்முத்தன் ஆயினை பகரின். 681

மேவு நற்குணக் குன்றமாம் குரவனால் விளங்கப்
பாவம் அற்றுயர் போதனை அருள்செயப் பட்டோன்
யாவும் இச்சகம் சிவமய மேயெனக் கண்டு
சிவன் முத்தனா குவன்என ஆகமம் தெருட்டும். 682

சிசுருடைத்தலம் - முற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் மிருத்யுஞ்ஜயாய நம:

எழுபத்தொன்றாவது

(9) சேவியத்தலம்

கலிநிலைத்துறை

போத மாபாலன் குருமொழி அமுதினால் பொருந்தும்
மேதை யாம்இவ னேயுலகு அடங்கவும் விரும்பித்
தீதி லாதுசே வித்திடப் படுவனால் தெரியின்
ஆத லால்இவன் சேவியன் எனும்பெயர் அடைவான். 683

குரவன் நல்குமெய்ஞ் ஞானநெஞ்சு அகத்தினிற் கூடி
விரவு றுஞ்சிவ வடிவமாஞ் சீடனும் விளம்பிற்
பரவு றுங்குரு பரனெனப் பூசிக்கப் படுவன்
வரமு றுஞ்சிவ ஞானவாழ் வினன்என மதித்து. 684

என்று மெய்ச்சிவம் நான்எனும் பாவனை எய்தி
நின்ற வற்கிடை யீடிலாது இறைநிலைத் திடலாம்
நன்று றச்சிவன் போலவே யிங்கவன் நாளும்
குன்றல் அற்றுயர் பூசனை கொள்வனென் றறிவாய். 685

ஒழிவ றுஞ்சிவ பாவனை யுடையநல் யோகி
இழிவு றும்செயல் விடயநெஞ்சு உடையவன் எனினும்
மொழியும் அவ்விட யங்களின் முத்தனாய் மருவும்
வழிப டுஞ்செயல் பரவுமா சிவனென மன்னோ. 686

பந்த நாசகஞ் செயும்சிவ ஞானமே பற்றுஞ்
சிந்தை யால்உல கோர்பவந் தொலைத்திடல் செயுமா
னந்த ஞானமெய்ச் சிவபதம் அடைந்தநல் யோகி
இந்த மாநிலத்து அனைவரும் போற்றிட இருப்பன். 687

சேவியத்தலம் - முற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4-ஆவது ஜங்கமலிங்கத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

நற்பிர சாதி எய்தும்
தலத்திறம் நயந்து உரைத்தாய்
பிற்பெறு பிராண லிங்கி
தலத்தினிற் பேதம் தானும்
சொற்பொருள் விளங்கு மாறு
சொல்லுக அடிய னேற்குப்
பொற்புறு கயிலை காக்கும்
புகழ்மலி கணங்கள் வேந்தே. 688

பொற்புறும் ஆன்மா மூன்றும்
புகழும்ஆ கமங்கள் மூன்றும்
தற்பிர சாத மூன்றும்
ஆகவே தலங்கள் ஒன்பான்
சொற்பெறு பிராண லிங்கி
தொடர்ந்துள தலம் இ வற்றை
வெற்பமர் முனிவர் வேந்தே
விளம்புதும் முறையிற் கேண்மோ. 689

ஓம் ஸூக்ஷ்மதநவே நம:

எழுபத்திரண்டாவது

(1) சீவான்மாத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஆரியன் அருளும் ஞான
போதனை அடைந்த இந்தச்
சீரியன் சீவ பாவந்
தீர்ந்துநல் தத்து வத்தை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓர்இயல் பொடு பா விக்குங்
கானலில் உணர்ந்து ளோர்நற்
பேரியல் ஆன்மா என்னப்
பெற்றிடும் உலகில் அன்றே. 690

பகந்திடின் உண்மை வாலாக்
கிரசத பாகம் ஒத்து
நுகர்ந்துறு வினையின் பேறு
நுண்ணியன் ஆகும் ஆன்மா
அகந்தனில் இருளி ரிக்கும்
அருஞ்சுடர் போல்இ ருந்து
திகழ்ந்திடும் என்று சொல்வர்
சிவாகம நெறியு ணர்ந்தோர். 691

ஆணவத் தடையி னாலோர்
அணுவென ஆதி கன்மம்
நாணுற அசைக்கப் பட்டு
நவிலின்நுண் ணியனாம் ஆன்மா
ஏணுறுங் கரணம் தன்னை
இசைந்துளான் என்றுஇ சைப்பர்
தாணுவின் அமல நூலால்
தமையுணர்ந்து அமைந்த மேலோர். 692

தெள்ளுறு பளிங்கு தானோர்
சேயொளி அரத்தச் சார்வால்
கொள்ளுறும் இலங்கு செம்மை
குறித்திடின் அவ்வா றேபோல்
விள்ளரும் ஆங்கா ரத்தின்
சார்வினால் விளங்கும் ஆன்மாத்
தள்ளரும் உடலின் மானம்
தரிக்குமென்று அறிந்து கொள்ளே. 693

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நிரஞ்சனம் ஆய ஆன்மா
நிறைந்தவன் எங்கு மேனும்
வரும்செயல் உடல்இ லாதான்
ஆயினும் மாயை தந்த
புரஞ்செறி பவனாய் நின்று
புகலரும் பவங்கள் தோறும்
திரிந்திடும் என்று கூறும்
சிவனருள் ஆக மங்கள். 694

மெய்யுடன் இந்தி யங்கள்
வேறுசெய் வழியி னாலே
பொய்யறும் அகண்டா நந்த
பூரண பிரம ரூபால்
ஐயமது அறவே ஆன்ம
சொரூபநன்கு அறிதல் செய்யச்
செய்யும்எந் நாள்அந் நாள்ஆன்
மாவினைச் சேர்தல் என்பார். 695

உடம்பறும் ஆன்மா விற்குஓர்
உடலிலை இயல்பா லேனும்
மடம்தரும் அவித்தை கன்மம்
மருவலால் அவன்தான் இங்குத்
தொடர்ந்துள நுகர்விற் காகத்
தோன்றுவன் தேகி யாய்என்று
ஒடுங்கிய புலவ ழக்கம்
உடையவர் உரைப்பர் அன்றே. 696

தேவலன் இயக்கர் நல்கந்
திருவரோடு அரக்கர் மக்கள்
மாவலன் நிற்ப வற்றின்
வடிவலன் வயங்கும் ஆன்மா

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யாவன்மற்று என்னின் அவ்வவ்
வுடம்புறும் இசைவி னாலே
மேவுவன் அவற்றால் நாமம்
என்றறி விளக்கம் மிக்கோய். 697

பற்பல கருமந் தன்னால்
பற்பல யோனி எய்திப்
பற்பல மதிபொ ருந்திப்
பற்பல நெறியின் எய்தி
அற்பனென்று அறிவு டன்சிற்
றிறைமையும் அடைந்த சீவன்
சிற்பரன் ஆட லுக்கோர்
இடமெனச் செறியும் அன்றே. 698

தன்னுறு வினையி னால்அச்
சம்புவால் இயக்கப் பட்டு
வெந்நர கொடு து றக்கம்
மேவிய கரும சேடம்
மன்னுற வனைவ யிற்றில்
வந்துஉதித்து இறந்து தோன்றி
இன்னணம் உழலும் சீவன்
இரும்பவத்து அமைதி யின்றி. 699

அருந்துயர்க்கு இடம தாய்அஞ்
ஞானகற் பிதமே யாகிப்
பொருந்திநின்று உள்ள சீவத்
துவமுடன் போகும் ஆசான்
திருந்தருள் மொழியால் ஞான
சத்தியும் திகழும் என்பர்
பரந்துள கலைகள் முற்றும்
பழுதறக் கற்ற மேலோர். 700

சீவலன்மாத்தலம் - முற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் ஜகத்வியாபிநே நம:

எழுபத்துமூன்றாவது

(2) அந்தரான்மத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தேசிகன் அருளி னாலே
சீவபா வந்தான் என்று
நாசமது அடையு மன்று
நசித்திடப் பட்ட வற்குப்
பாசமில் அந்த ரான்ம.
பாவம்வந் துறுமென்று ஓர்வாய்
மாசறு தவத்தின் மிக்க
மலயவெற்பு அமர்ந்த மேலோய். 701

அறைந்தஅச் சீவன் மெய்யோடு
அடுக்கினும் உடல பந்தம்
துறந்தொரு பரமான் மாவை
உள்கலால் துளங்கு சீவன்
நிறைந்துள பரமன் நாப்பண்
நிற்றலாம் உபயத் தன்மை
பெறுந்திறம் அதனால் எய்தும்
பிறங்கும்அந் தரான்ம நாமம். 702

முற்றுறு மனிதத் தன்மை
முதலவாங் காரச் சார்வால்
மற்றவை இயல்புஅன் றென்று
மதிப்பவன் அந்த ரான்மாச்
சொற்றிடும் அவன்பு னற்கண்
தோன்றுபா சிலையும் துன்னத்
தெற்றுறு குடம்பைப் புள்ளும்
போலவே மெய்யிற் றீர்ந்தான். 703

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மதிதனை அடையா மேகம்
மறைத்திடப் படல்போல் ஆன்மாப்
பொதியுடல் அகல நின்று
புணர்ந்திடப் படுவன் மெய்யாம்
இதனிடை உறினும் மாழ்கி
யான்எனது என்பது இல்லோன்
பதியெனும் சிவனை யோகப்
பயிற்சியால் காண்பன் என்றும். 704

போத்துரு வாம்அ வற்கும்
போக்கிய மாம்அ வற்றைப்
பேர்த்திடு தலினால் மிக்க
பிரேரகன் அருளி னாலே
போத்துருப் பாவம் நீங்கிப்
பொலிகுவன் எங்கும் நின்று
காத்தருள் பரமற் கண்டு
களிக்குவன் அந்த ரான்மா. 705

அந்தரான்மாத்தலம் - முற்றும்.

ஓம் ஜகத்குரவே நம:

எழுபத்துநான்காவது

(3) பரமான்மத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பரமமெய்ஞ் ஞானம் அதன்னால்
பவநெறிக்கு ஏது வாகும்
இருள்மலம் அகலும் ஆற்றால்
பரமனோடு இருக்கும் பற்றால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உரமுறு பரமான் மாவென்று
உரைத்திடப் படுவன் அன்னோன்
திரைமலி கடல் கு டித்துத்
தேக்குஎறி முனிவர் ஏறே. 706

தன்னொளி யால்நி றைந்து
தான்மிளிர் சிவனே இங்ஙன்
உன்னுமான் மாக்கட்கு எல்லாம்
உயர்தலால் பரமான் மாவாம்
மன்னுமா மாயை என்னும்
வாரியுள் அண்ட மொக்குள்
சின்னமாய் எழுந்துஅ டங்கச்
செய்பவன் பரமான் மாவாம். 707

யாதினில் ஒளிகள் எல்லாம்
எரியினிற் பொறிபோல் தோன்றி
மாய்தரும் பரம னுக்குஅவ்
வடிவமாம் தத்து வங்கள்
யாதினிற் கடல்த ரங்கம்
என்னவந் தெழுந்து ஒடுங்கும்
ஓதுவ் வடிவ மாகும்
ஒருபர மான்மா விற்கே. 708

உலகினுக்கு உயிரு மாகி
ஒழிந்திடு மலத்தன் ஆகி
இலகும்அப் பரமன் தன்னை
இசைப்பர்தத் துவத்தின் மேலாய்
அலரிதன் கதிரால் எங்கும்
அவிர்தல்போல் பரமன் தானும்
விலகில் அச் சத்தி தன்னால்
வியாபித்து விளங்கும் அன்றே. 709

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எங்கணும் ஒளிர்வோ னேனும்
அகிலமும் இறந்து நின்ற
பொங்கறி வுருவ மாகப்
புகன்றிடு பரமன் சீவர்
தங்களுக் கொருதன் சோதி
வடிவமாயச் சாரும் என்பர்
மங்கலப் பொருளை ஈன்ற
மலயவெற்பு அமர்ந்த மேலோய். 710

பரமான்மத்தலம் - முற்றும்

ஓம் வியோமகேசாய நம:

எழுபத்தைந்தாவது

(4) நிர்த்தேகாகமத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஓவுறும் அகந்தை யோனாய்
உயர்தரு பரமான் மாவைப்
பாவனை புரிவோன் ஆகிப்
பழுதுடல் தருமம் நீங்கி
மேவுறு தேகிக்கு இங்கு
விளம்புவர் அறிவ றிந்த
நாவலர் விளங்கு நிர்த்தே
காகமம் நயந்து மாதோ. 711

இரும்பவ மூலம் ஆகும்
யான்எனது என்பது இன்றி
அரும்பரன் நானென் தன்மை
அடைந்தவற்கு உடலம் உண்டோ

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வருஞ்சகம் கடந்து ஞான
வாரிதி தன்னின் மூழ்கும்
உரம்பெறு யோகி எவ்வாறு
உடம்பினைச் சிந்தை செய்வான். 712

தன்னையோர் எல்லை இல்லாத்
தனிச்சிதம் பரமாய்க் கொள்வோன்
மன்னுமா யினும் உ டம்பில்
வடிவுறு விகாரம் ஒன்றால்
தன்னைவே றிலாமல் சச்சி
தானந்த பரமா காசம்
என்னவே உணர்ந்த யோகி
யாண்டுமோ கத்தில் சேர்வான். 713

ஒருபொரு ளிடத்தில் பேதம்
உபாதியால் தோன்றும் என்னத்
தெருளுற உணர்வோற்கு உண்டோ
தேகத்தின் அளவாய் உற்றல்
விரிவுறு பேத புத்தி
வினைப்பரிச் சேத ஏது
அரிதெனும் அபேத புத்தி
அதுதனக்கு ஏது வாமோ. 714

நிரம்பிய சிவோகம் என்னும்
நினைவுவந் தியார்கண் உண்டாம்
வரம்பெறும் அவனுக்கு எங்கும்
மருவுறாது உடல பந்தம்
இருங்கடல் முகட்டு எழுந்த
அமுதினும் இனிமை பெற்ற
அருந்தமிழ்ப் பயந்த செவ்வாய்
அகத்தியப் பெயரி னானே. 715

நிர்த்தேகாகமத்தலம் - முற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் மஹாசேனஜனகாய நம:

எழுபத்தாறாவது

(5) நிர்ப்பாவாகமத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அப்பெருஞ் சொரூபம் உள்ள
அவற்குமா றாகும் என்னச்
செப்புறு பாவ பேதம்
சிதைந்திட விகாரம் நீங்கும்
மெய்ப்புறு பாவ நிர்ப்பா
வாகமம் எனவி ளம்பும்
கைப்பொலி மழுவொன்று உள்ள
கடவுள்ஆ கமங்கள் அன்றே. 716

பிரமம்நான் எனும்இ ரண்டு
பெரும்பொருள் பாவத்து எய்தும்
பரமதில் ஒன்றுஆ தற்குஅப்
பாவம்இன்று என்பது உண்மை
புரையறு சிதம்ப ரத்தில்
ஏகமாய்ப் பொருந்தி னோற்கு
வரையறு சாதி மேனி
அலமரல் மருவு றாமால். 717

உரைமனம் இறந்து நின்ற
ஒருபெருஞ் சிதாகா சத்தில்
இருமையின்று இலயித் தோன்தான்
ஏதினால் எதைப்பா விப்பன்
திரையறு ஞான வாரி
சேர்ந்துஅடங் கினற்குச் சிந்தை
மருவுறு பாவஞ் சங்கற்
பனையிவை மருவு மோதான். 718

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நல்லிடம் அல்லி டங்கள்
எனதுசெஞ் ஞாயிற் றின்பேர்
எல்லொளி விழல்போல் யோகி
எங்ஙணும் ஒப்பக் காண்பன்
சொல்லரும் அறிவா னந்த
சுகிபசி தாகத் தின்கண்
செல்லுதல் செய்யான் மூப்பு
மரணத்திற் சிறிதும் அஞ்சான். 719

நிர்ப்பாவாகமத்தலம் - முற்றும்.

ஓம் சாருவிக்ரமாய நம:

எழுபத்தேழாவது

(6) நட்டாகமத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பேதம்இலாத மாபோ
தத்தினில் பிரிந்து நின்ற
ஞாதுரு ஆதி இங்கு
நண்ணலால் ஞானத் தின்கண்
போதுறு நட்ட பாவம்
புகல்வர்நட் டாக மம்தான்
தீதறு கலைகள் முற்றுந்
திருந்துறக் கற்ற மேலோர். 720

ஏகமா நினைவு தோன்றும்
இதயத்தில் தனைக்கண் டோன்வேறு
ஆகுஞா துருத்து வத்தை
அடைவதுஎவ் வாறு சொல்லாய்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓகையார் கருத்தா வல்லேன்
உணர்பவன் அல்லேன் அல்லேன்
தேகநான் நிமலன் என்னும்
சிந்தையாற்கு ஒளிரும் ஞானம். 721

தணந்திடும் பேதம் உள்ள
சாந்தனாய்த் தன்னில் தானே
அணைந்துஅடங் குறுநல் யோகிக்கு
அயல்ஒரு ஞேயம் உண்டோ
இணங்கிடின் தன்சொ ரூப
ஞானத்தில் ஏகம் ஆக
உணர்ந்திடு பொருள்சி றந்த
உணர்வுணர் பவன்எவ் வாறாம். 722

உண்டெனும் ஒருமா சித்தே
உலகமாய் விளங்கி நிற்கும்
கண்டிடும் அறிவை யன்றிக்
காண்பொருள் வேறொன்று இல்லை
விண்டுறு பேத புத்தி
மேவினோற்கு என்று கூறும்
பண்டரு மறைகள் எல்லாம்
பராரைவெற்பு அமர்ந்த மேலோய். 723

நட்டாகமத்தலம் - முற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் ருத்ராய நம:

எழுபத்தெட்டாவது

(7) ஆதிப்பிரசாதித்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

4117. அனைத்தினும் அதிட்டித்து உள்ள
சம்புவே ஆதி யாம்அத்
தனிப்பரன் பிரசா தத்தால்
விகாரமில் பதத்தைச் சார்வுற்று
இனைப்புறும் அவனை ஆதிப்
பிரசாதி என்று கூறும்
பனிக்கதிர் தவழும் வேணிப்
பராபரன் அருளும் நூலே. 724

4118. புனிதனாய்ப் பலபி றப்பிற்
பொருசக அகந்தை உள்ளோற்கு
இனிதுறும் ஆதி தேவன்
இரும்பிர சாதம் என்ப
வனைசிவப் பிரசா தத்தான்
மலிசிவ மாயி னோற்குக்
கனைசகம் காண்ப தாயும்
காணுறப் படாது கண்டாய். 725

4119. பிறப்பெறி மூல மாகும்
பிரான்பிர சாதம் தன்னால்
அறப்பெறும் மோக முத்தி
அடைகுவன் பிறவி வெந்நோய்
சிறப்புஅரன் பிரசா தத்தால்
அன்றியே தீர்ந்தி டாதால்
வெறுப்புஇருள் இரவி அன்றி
வீயுமோ உலகம் தன்னில். 726

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அகிலமும் அளிக்கும் ஈசன்
அருளினால் உயிர்கட்கு எல்லாம்
புகலுறு பாச நீக்கம்
புரிவன்இப் புரித லின்கண்
முகிழ்இள மதிய ணிந்த
முதல்வனுக்கு ஏது இன்றால்
இகலுறு புலன் அ டங்க
ஞானவாள் எடுத்த மேலோய். 727

ஆதிப் பிரசாதித்தலம் - முற்றும்.

ஓம் பூதபதயே நம:

எழுபத்தொன்பதாவது

(8) அந்தியப் பிரசாதித்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஆகிய பதார்த்தம் எல்லாம்
அடங்குறும் இடமாய் நிற்கும்
ஏகன்அந் நியனாம் என்பர்
இவனது பரமே யிங்குச்
சீர்கெழு பிரசா தப்பேர்
சேர்ந்திடும் இதனைப் பெற்ற
யோகிஎன் பவன்தா னேஅந்
தியப்பிர சாதி ஓர்வாய். 728

சுரர்நரர் மிருகம் ஆதி
தோற்றுறு மாயை மாயின்
பரனிடை அதுப யந்த
பதார்த்தமும் மாயும் என்பர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உரம்உறு சத்தா னந்த
ஒருபொருள் உண்மை பெற்றால்
நிரைதரு பதார்த்த ஞானம்
யாதுஉயர் ஞேயம் யாதோ. 729

கனவிடைக் கண்டது எல்லாம்
கழிந்திடும் விழிப்ப மாயை
தனில்வரு வனமெய்ஞ் ஞானம்
சார்ந்திட மாய்ந்து போகும்
உனல்அருஞ் சுழுத்தி யோனுக்கு
ஒன்றும்அங்கு எதிரா வாபோல்
இனல்அறு சீவன் முத்தற்கு
எதிர்ந்திடாது ஒன்றும் அன்றே. 730

அந்தரம் விகாரம் இன்றி
அகண்டிதம் ஆகும் ஆபோல்
உந்துறு சீவன் முத்தன்
உருவமும் விளங்கும் என்பர்
சிந்தனை செய்து காண்கை
செய்கையம் முத்தற்கு இல்லை
நிந்தையில் சுகம்நி றைந்து
நிச்சலன் ஆகி மேவும். 731

பரசிவாத் துவித ஞான
பலத்தினால் நழுவப் பட்ட
விரிதரு பொருளுள் ஆனாய்
மெய்யுணர் வினையே காண்போற்கு
ஒருவனால் ஆவ தாக
வுறுபொருள் இல்லை என்பர்
அரவுலாம் வேணி முக்கண்
அமலன்ஆ கமங்கள் வல்லோர். 732

அந்தியப்பிரசாதித்தலம் - முற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் ஸ்த்தாணவே நம:

எண்பதாவது

(9) சேவியப் பிரசாதித்தலம்

தேசிகன் சிவனே அந்த
தேசிகன் சேவி யன்தான்
ஆசில்இங் கவன்த னாதோர்
அனுபவம் எவற்று மேலாய்ப்
பேசுறும் பிரசா தப்பேர்
பெற்றுளது அதனைப் பெற்றோன்
வீசுறும் பவமு றுஞ் சே
வியப் பிர சாதி யாகும். 733

குரவனே பரமன் அந்தப்
பரமனே குரவன் என்ப
விரவும்இவ் வேக மாகும்
அனுபவம் மெய்ம்மை என்றும்
உரைமனம் இறந்த தன்பேர்
உருவ இன் பம்கண்டு உற்றோன்
மருவுறு மயல்ஒன் றின்கண்
மனம்விழைந் திடுமோ சொல்லாய். 734

ஞானவார் அமுதம் தன்னால்
நன்றுற நிரம்பி னோனுக்கு
ஏனையூண் பொருளால் என்கொல்
எய்துதல் சத்தாம் ஈசன்
ஞானமே கொண்டு பேரா
னந்தம்நின் றிலக்கும் என்னும்
பானல்வாள் அரிநெ டுங்கண்
பாவைபங்கு உடையோன் நூலே. 735

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

சத்துடன் அறிவா னந்தத்
தகுமிலக் கணத்த தாகும்
முத்தியே உயர்தி ருத்தி
என்குவர் முதனூல் கண்டோர்
நித்திய நிரம்பல் பெற்ற
நிகரில்அம் முத்த னுக்குத்
துய்த்திடு பொருள்கள் தம்மால்
தோன்றுறு பயனென் சொல்வார். 736

சிவம்பெறு மேக ஞானம்
சேர்ந்துடன் மயக்கு இலாற்குப்
பவம்பெறு கருமம் இல்லைப்
பகர்தரின் புறவ கத்துந்
தவஞ்செபத் தியானம் யோகம்
சார்ந்திடா அவற்றின் மேலாய்
உவந்துள ஞானம் தன்னில்
உற்றிடும் அவனுக்கு உள்ளம். 737

சேவிய பிரசாதித்தலம் - முற்றும்

4-ஆவது ஐங்கமலிங்கத்தலம் - முற்றிற்று.

5-ஆவது பிரசாத லிங்கத்தலம்

(சரணனுக்குச் சேர்ந்த உட்பிரிவுகள்)

கலிவிருத்தம்

உரைத்தனை விளங்குற உயிரி லிங்கிதன்
நிரைத்தலம் அனைத்தையும் நீள னக்கினி
அருட்சர ணத்தலம் அடைந்த வற்றையும்
கருத்துற அருளுதி கணங்கள் வேந்தனே. 738

Digitization by Hindu Heritage Foundation Trust, America. HHFA(USA)

அத்தலம் அடைவுற அடிப்பு னல்பின்நிட்
பத்திவிண் ணொளியின்மும் மூன்று பாலவாய்
வைத்துள பன்னிரு தலமும் மாசுஅற
மெய்த்தவ! அறைகுதும் விழைந்து உனக்கரோ. 739

ஓம் அஹிர்புத்ந்யாய நம:

எண்பத்தொன்றாவது

(1) தீக்ஷாபாதோதகத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஆரிய னோடு சீடன்
ஆனந்தத்து அயிக்க மாகச்
சீரிய தீட்சை யாலே
தீர்ந்துள பேத முள்ள
பேரியல் ஞானம் தன்னால்
பெருங்கலை உணர்ந்த மேலோர்
ஏரியல் முனிவ தீட்சா
பதோதகம் இயம்பு வாரால். 740

பாதமென் கிளவி யாலே
பகர்தரப் படுவன் ஆசான்
மேதைகொள் உதகச் சொல்லால்
விளம்புறப் படுவன் சீடன்
தீதறு தீட்சை தன்னால்
செப்புறும் இவர்அ யிக்கம்
ஏதமில் உலகில் தீட்சா
பதோதகம் என்ன நிற்கும். 741

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

பரிந்திடும் பரமா னந்தம்
பாதமென் கிளவி ஞானம்
உரைத்திடும் உதகம் தீட்சை
உரைத்திடும் இவற்று அயிக்கம்
தெரித்தவிஞ் ஞானா னந்தம்
சேர்ந்துதான் பேதம் இன்றி
வரைத்தொரு பொருளும் கண்ணால்
காண்குறான் மான யோகி. 742

ஆரியன் அருளி னாலே
ஞானவா ரமுதம் உண்டு
சீரிய பரம யோகி
தீர்ந்துவெம் பிறவி நோய்தான்
ஓரியல் ஆடல் செய்தே
ஒழுகுமென் றறிந்து கொள்நீ
கூரிய இலைவேல் செங்கைச்
குமரனால் தருமங் கண்டோய். 743

தீட்சா பாதோதகத்தலம் - முற்றும்.

ஓம் திகம்பராய நம:

எண்பத்திரண்டாவது

(2) சிட்சாபாதோதகத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

யாதொரு சிட்சை யிங்குக்
குருசீட மயமாம் ஞானம்
தீதறும் யோகிக் காகச்
செய்திடும் அவையி ரண்டும்
பேதமது அறக்க லந்த
பெருமையை உரைப்பர் நல்லோர்
மாதவ முனிவ சிட்சா
பதோதகம் என்ன மாதோ. 744

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மதியெனும் அந்த ரத்தால்
வாய்த்தநூற் கடலை ஆசான்
விதிமுறை கடையத் தோன்றும்
விளங்கறிவு அமுதம் உண்பன்
எதிரறு .ம்யோகி முத்தி
இரவினிற் பரமா காசத்
துதிதரு ஞானத் திங்கள்
இன்பநல் ஒளியே காண்பன். 745

வரைந்துள தேச கால
மருவறும் பரமா னந்தம்
பொருந்தினோன் காண்ப கேட்ப
அறிவவாம் பொருளிங்கு இல்லை
ஒருங்கிய பரமா னந்த
யோகிபால் விடய வேட்கை
வருங்கொல்ஒண் கங்கை பெற்றோன்
மதிப்பனோ கூவ நீரை. 746

அலையில் பே ரின்ப வாரி
அமிழ்ந்துவன் பரம யோகி
எலையில்அவ் வாரி திக்குஓர்
எல்லையும் உண்டோ சொல்லாய்
கலைமலி குரவன் மிக்க
கருணைவான் நிலவு திப்ப
மலர்தரு நெஞ்சம் நீலம்
மருவினோன் மயங்கு றானால். 747

சிட்சாபாதோதகத்தலம் - முற்றும்.

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

ஓம் அஷ்டமூர்த்தயே நம:

எண்பத்துமூன்றாவது

(3) ஞானபாதோதகத்தலம்

கலிவிருத்தம்

நாடும்ஆ னந்த ஞானங்க ளே யிவண்
தேடரு ஞானதே சிகன்மற் றன்னவை
கூடிய சமரசம் குலவு பாதநீர்
சீடனென்று உரைத்திடச் சிறந்து ளோர்க்கரோ. 748

நிறைவொடு நிமலமாய் நின்று அவித்தையாம்
மறைஅர வொடுபுயல் மாறி யின்பமாம்
அறைகடல் பொலிய ஆ னந்தத் சோதியால்
கறையறு ஞானவெண் கதிர்இ லங்குமால். 749

அறிவெனும் மதிவர அவித்தை ஆகிய
செறியிருள் ஒழிதரச் சிதானந் தங்களே
குறியெனும் ஒருபெரும் கோலம் தோன்றுமால்
உறவொடு பகைதவிர் யோகி கட்கு அரோ. 750

மாயைவல் லிரவற வந்து ஞானமாம்
சேயொளி இரவிதான் திகழும் காலையில்
போயுற உலகியல் வழக்கம் போத்துறான்
தூயநல் யோகிதான் துயிலும் என்பவே. 751

அகன்றிட அனாதியாம் அவித்தை நித்திய
சுகந்திகழ் பரமமாம் சூரி யன்தனில்
புகுந்துறு மனமுடைப் புனித யோகிதான்
சகந்தரு கற்பனை தன்னில் தோய்வுறான். 752

மெய்ப்பர சுகமொடு விளங்கு சோதியர்க்கு
ஒப்பலர் அயன்அரி உருத்தி ரன்கதிர்
அப்படி தமையுணர்ந் தவர்க்குஅத் தேவர்தாம்
துய்ப்புறு சுகஞ்சிறு துளியொன் றாகுமால். 753

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மானுடர் சிறுசுகம் மருவும் இந்திய
ஞானமது அடைகுவர் நச்சி இந்திய
மானமது அறுபரா நந்த வாழ்வினைத்
தானெவர் விரும்புவார் சார்தற்கு எண்ணியே. 754

ஞானபாதோதகத்தலம் - முற்றும்.

ஓம் அனேகாத்மனே நம:

எண்பத்துநான்காவது

(4) கிரியாநிட்பத்தித்தலம்

கலிவிருத்தம்

உன்னரும் பரமநல் யோகி தன்கணே
மன்னுறும் கிரியையோர் வன்க யிற்றினில்
பன்னகம் போன்றுகற் பிக்கப் பட்டதால்
அன்னவன் தான்கிரி யாநிட் பத்திமான். 755

சிறப்புறு ஞானிசெய் செயல்கள் யாவும்இப்
பிறப்புறு காரணம் அல்ல பேரழல்
வறுப்புறு விதையினை மண்ணில் ஒண்முளைக்கு
உறப்பெறும் ஏதுவென்று உரைக்க லாகுமோ. 756

தீதறு ஞானிதன் செயல்க ளால்அவற்கு
ஏதுளது எய்துவது இருள்வி ழுங்குறு
சோதிகொள் மதிக்கெதிர் தோன்றும் விம்பமார்
வாதைய துளதுகொன் மதித்து நாடினே. 757

திங்களுக்கு இரிதரும் செயல் வி சும்பினால்
இங்குரைத் திடுதல்போல் இசைந்த ஆக்கையால்
மங்கலத்து ஒளிகொள்ஆன் மாவி னுக்குமால்
தங்கும்அ செயும்தொழில் சாற்றப் பட்டிடும். 758

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வினைபல விரவினும் விமல ஞானிதான்
அனையவை தருபயன் அவண்அ டைந்திடான்
இனியன பலபொருள் இசைந்து அருந்தினும்
நனியுணு நாவவை நண்ணு மோ சொலாய். 759

விடுத்துள உபாதியான் வினைகள் யாவுமிங்கு
அடுத்துள அளவதாய் அவன்கண் மாயுமால்
நடப்பினும் இருப்பினும் நனியு றங்கினும்
தொடக்குறும் உயிர்வினை ஞானி தோய்ந்திடான். 760

நிறையுறு பரானந்த சுத்த நெஞ்சனாம்
அறிவுடை யவன்தனை அணங்கு வல்வினைச்
செறிதொடர் பந்தனை செயாதுஎன்று ஓர்கநீ
குறுமுனி என்றுயர் குணப்பொற் குன்று அனாய். 761

கிரியாநிட்பத்தித்தலம் - முற்றும்.

ஓம் சாத்விகாய நம:

எண்பத்து ஐந்தாவது

(5) பாவநிட்பத்தித்தலம்

கலிவிருத்தம்

உடைந்திடு மயலுடை யோகி தன்கணே
அடுத்துள பாவம்இப் பியின்கண் ஆகிய
கடுத்துள வெள்ளிபோல் காட்ட லால்இவன்
படைத்துள பாவநிட் பத்தி மான்அரோ. 762

பரமஞா னிக்கொரு பாவ பந்தனம்
மருவுறாது எனினுமே வருத்த வெம்பவம்
ஒருவவார் அருள்புரி ஒருசி வத்தினில்
விரவுபா வனையது மேவ வேண்டுமால். 763

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நிரம்பிய சிதானந்த நித்தன் தன்கணே
விரும்பிய பாவனை விடேல்அ வன்தனில்
பரம்பெறு பாவனை பரவு வெம்பவக்
கருங்கடல் கடந்திடக் கடத்தும் என்பவே. 764

இங்குறு பவவிடாய் யாவும் நீக்கியே
சங்கர பாவனை தாணும் நீங்குமால்
பொங்குஅழல் விறகினைப் பொடித்து நின்றுதான்
அங்குஅவி யாமலே அடுக்கு மோசொலாய். 765

ஏத்துறு சிவானந்தம் எய்தின் என்செயும்
வாய்த்தபா வனைஇனி மனத்தின் எண்பொருள்
சாத்திய மாய்உறின் சாத னங்களால்
பேர்த்தொரு பயனிலை பேசுங் காலையே. 766

பாவமும் ஞானமும் பரனில் ஏகமாய்
மேவிடின் ஒருசிவ மாய் வி ளங்குமான்
பாவமும் ஞானமும் வேறு பட்டுநின்று
ஆவன இன்மையால் அவைவி டேல்அரோ. 767

பாவநிட்பத்தித்தலம் - முற்றும்.

ஓம் சுத்தவிக்ரஹாய நம:

எண்பத்தாறாவது

(6) ஞான நிட்பத்தித்தலம்

கலிவிருத்தம்

உலகினில் உணர்பொருள் உணர்விற்கு இன்மையால்
இலகுறும் இவன்கனவு என்ன ஞாலமேல்
பலர்புகழ் ஞானநிட் பத்தி மேவலால்
நலமலி ஞானநிட் பன்னன் என்பரால். 768

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சொற்பனம் தனில்வரும் உணர்வு தோன்றும் அப்
பற்பல பொருளொடு போகும் பான்மைபோல்
தற்பரம் இலகுறத் தன்னு ணர்ச்சியால்
முற்பெறு ஞேயமும் முடிந்து போகுமால். 769

நிறைந்திடு பரானந்த நிமலன் தன்னிடை
இறந்துள மனமுடை யிவற்கு ஞேயமாய்
அறிந்திடு பொருள்சிவம் அன்றி யில்லையென்று
உறுந்தவ முனிவர உலகம் ஓதுமால். 770

சச்சிதா னந்தமாம் தன்மை யோன்சிவன்
இச்சகம் யாவுமோ மித்தை என்பதிங்கு
அச்சுறா ஞானமென்று அறிவி லக்கணம்
வச்சநூல் உணர்பவர் வகுத்துக் கூறுவார். 771

உற்றிடு பரனில்வேறு ஆம்க டாதியில்
பற்றிநின் றிடுவன பார்த்து மித்தையென்று
அற்றிட விடுதலை அறிவென்று ஓதுவார்
தெற்றென அறிவறி திறத்தின் மேலையோர். 772

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

காரண கார்ரி யங்கள்
கடந்துபா திகள்அ னைத்தும்
ஆரணம் அடைய நின்ற
வத்துவே பிரமம் அந்த
ஏர்அணி பிரமம் நான்என்று
இருந்திடு நிட்டை தானே
சீரணி ஞானம் என்பர்
செழுமறை கற்று ணர்ந்தோர். 773

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விரிந்துள பொருள்அ னைத்தும்
விடுத்தொரு முதலாய் நின்ற
பரந்தனில் அபேதம் எய்தப்
படும்எனின் அறிகு வேனான்
தெரிந்தறி ஞேயம் ஈதென்று
உணர்தருந் திறத்து ஞானம்
பொருந்துவது எவ்வி டத்தும்
இலைஎனப் புகல்வர் கற்றோர். 774

ஞானநிட்பத்தித்தலம் - முற்றும்.

ஓம் சாஸ்வதாய நம:

எண்பத்தேழாவது

(7) பிண்டாகாசத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

நெடியவான் பிண்டத் துற்று
நிறைவெனப் படுதல் போலப்
படியறும் ஆன்மா வுந்தான்
நிறைவெனப் படுமென்று ஓர்வாய்
விடலரும் இவனது இந்தப்
பொருள்தெரி விவேக மேதான்
தடையறு பிண்டா காசத்
தலமென அறைவர் மேலோர். 775

குடத்தினில் உறுவி சும்பு
குறிக்கிற்பூ ரணமா மாபோல்
அடுத்துறு பிண்டத்து ஆன்மா
அதனது சொரூபத் தானே
தடுப்பறு நிறைவது ஆகித்
தயங்குமென்று அறைவர் மேலோர்
கடத்தினில் உதித்து மிக்க
கடல்குடித்து உயர்ந்த மேலோய். 776

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அகத்தினில் பரவி சும்பாய்
அத்துவி தத்தது ஆகி
மிகுத்துறு சிவத்தை என்றும்
விமலமா மனத்திற் பாவம்
இகப்பற இயற்று வோனே
இயம்பிற்பிண் டாகா சத்தன்
தகக்கலை முழுதும் ஓர்ந்து
தயங்கிய முனிவர் ஏறே. 777

தத்துவம் முப்பத் தாறால்
சமைத்திடப் பட்டு மாசில்
சுத்தநன் மனமாம் பீடம்
துளக்கற அமைத்து ஞானப்
புத்தொளி மணி வி ளக்குப்
பொருந்துறும் இந்த யாக்கை
அத்தன்நம் சிவன்இ ருக்கும்
ஆலயம் என்பர் மேலோர். 778

மிக்குறு பரமா காச
மேனியாய் விளங்கும் ஈசன்
மெய்க்கணின் அவர்உ ளத்தின்
மேவுவோ னாகக் காண்க
இக்குறி உடலம் ஆகும்
சிவபுரத்து இதயக் கோயில்
புக்குறும் அமல நீரில்
பொருந்திய விசும்பு போல. 779

அந்தரா காச விம்பத்
தடுத்துபா திகள்அ னைத்தும்
வந்துறாது ஒழிந்து நிற்கும்
மணிக்குட வானம் போல

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முந்தையோர் சின்ன மாகி
மூதறி வுருவாய் நின்ற
எந்தையாம் சிவத்தை என்றும்
இயல்பிற்பா விக்க மாதோ. 780

பிண்டாகாசத்தலம் - முற்றும்.

ஓம் கண்டபரசவே நம:

எண்பத்தெட்டாவது

(8) விந்தாகாசத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

உலகினில் எவர்க்கும் மேலாய்
உயர்தரும் அகல்வி சும்பை
இலகுற விபுஎன்று ஓரும்
இயல்பென மேலாம் ஆன்மா
அலகறு விபுஎன்று ஓர்க
ஆயஇவ் வுவமை கொண்டு
விலகறு பொருளை யே தான்
விந்துவின் தலமது என்பர். 781

யாவர்தம் இடத்தும் ஓர்காற்று
இருப்பினும் நிறைவா மாபோல்
யாவர்தம் இடத்துந் தானே
யிருப்பினும் விபுவாம் ஆன்மா
மேவுறு வன்னி யொன்றே
எங்கணும் விளங்கல் போலத்
தேவர்கள் தேவன் தானும்
கண்டிதந் தீர்ந்தோன் ஆவான். 782

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேசிகன் அனைவர் உள்ளும்
சித்தம்ஆ கியகண் ணாடி
தேசுற விளங்கும் என்றும்
விபுஎனும் சிவன்தான் ஆன்மா
வாய்உடல் அதில்விம் பித்திட்டு
அமர்குவன் மேலின் மேலாம்
ஏகன்இவ் வன்னவர் கண்ணும்
இருப்பினும் விபுவாம் என்பர் 783

செங்கதிர் ஒன்று தானே
தேசுறு கிரணம் தன்னால்
எங்கணும் நிறைதல் உற்றே
இலங்குறும் அதனைப் போல
மங்கல வடிவாம் ஆன்மா
மல்குதன் சத்தி தன்னால்
எங்கணும் மிடைந்தோன் ஆகி
இலங்குவன் என்பர் மேலோர் 784

விந்தாகாசத் தலம் - முற்றும்.

ஓம் அஜாய நம:

எண்பத்தொன்பதாவது

(9) மகதாகாசத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அண்டபிண் டத்தில் உற்ற
அம்பரம் வேறா காமைக்
கண்டனம் அதனைப் போலக்
கருதரும் இவனான் மாவில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உண்டெனும் பரமான் மாவே
று உறுவதின் றிதை உணர்ந்து
கொண்டிடன் மகதா காசத்
தலமெனக் குறிப்பர் அன்றே. 785

கடத்தினு மடத்தின் கண்ணும்
கலந்தவா காசம் வேறாய்
அடுத்திடல் இலாத வாபோல்
அண்டபிண் டத்தின் கண்ணே
எடுத்துரை செயும்ஆன் மாவும்
பின்னமன்று இனைய மாற்றம்
தடுத்திடல் அரிய வேதந்
தலையினால் சுமக்கும் அன்றே. 786

ஓங்கொளி யாகிக் காலம்
ஒப்புரை மனங்க டந்து
தீங்கறு சுவாநு பூதிப்
பிரமாணம் செறிவுற் றியாவும்
தாங்குறு நிலைமை சச்சி
தானந்தம் பரமா காசம்
ஆங்கது சிவமி லிங்கம்
பிரமமென்று அறையா நிற்கும். 787

யோகிகண் மனம டங்கும்
ஒருபரஞ் சோதி யாய்மால்
போகிய அறிவா னந்த
பூரண உண்மை யாகி
மோகமில் முனிவர் கூறும்
முதன்மையாம் பரமா காச
மாகன லிங்கம் என்று
வகுத்துரை செய்வர் மேலோர். 788

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திரைநுரை கடல்வே றாகாச்
செழுமலர் இலைகாய் எல்லாம்
மரனில்வே றாகா வாபோல்
வகுக்குமிவ் வுலகம் தானும்
பரனில்வே றாவ தின்று
பற்பல வுடுக்கள் வானில்
விரவல்போல் பரமா காசம்
மேவியிவ் வுலகுஇ லங்கும். 789

நீங்கிய வுபாதி கொண்டு
நிமலமாம் பரமா காசம்
ஓங்குறும் உலகம் என்னும்
ஓவியம் பலவும் தோன்றத்
தாங்குறு பித்தி யாகித்
தயங்குமென்று அறிஞர் சொல்வர்
தீங்குறு புலக்கு றும்பு
செற்றுயர் முனிவர் வேந்தே. 790

மகதாகாசத்தலம் - முற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் பாசவிமோசகாய நம:

தொண்ணூறாவது

(10) கிரியாப்பிரகாசத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

நிறைவுறும் அதுவாய் ஞானா
காசமாய் நிகழ்சி வத்தின்
அறைவுறு சொரூபந் தன்னோடு
அனுசந்தா னத்தி னாலே
உறுவினை அறுமி வன்தான்
கிரியைமா ஒளியன் என்ன
மறுவறு கலையு ணர்ந்தோர்
வகுத்துரை செய்வர் அன்றே. 791

மாசறு ஞானா காய
மயமதாய் நிறைவ தாகும்
ஈசனது உருவி றந்த
வொளியினில் மனம டங்கும்
தேசுடை அவன்த னாது
திறல்வலிக் கிரியை அந்தப்
பாசமில் ஒளியே யாகப்
பகர்ந்திடப் பட்டு நிற்கும். 792

முழுமையும் உணர்ந்தோன் ஆகி
முழுவிரை யாகி எங்கும்
ஒழிவற நிறைந்தோன் ஆவன்
ஒருசிவன் அவன்பாற் சென்றுற்று
அழிதரு சிந்தை யானே
அவன்தனி வடிவம் ஆகப்
பழுதற ஒளிர்வான் என்று
பகர்ந்தனர் அறிஞர் எல்லாம். 793

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

இந்திய வழக்கம் எல்லாம்
எய்தியும் மேல்நோக் குற்ற
சிந்தையால் அசல மாகும்
சிவத்தினைக் கண்டு உவப்பன்
உந்துறும் அறிஞன் ஆன
உயர்ந்தகூ டத்தன் தன்னைப்
பந்தமில் சிவமாய்க் கண்ட
படிவத்தால் உவப்பன் யோகி. 794

கிரியைகள் அனைத்தும் வானில்
கிளந்தகந் தர்வ வூர்போல்
பரவடிவு ஆயி னோன் பால்
பரந்துநின்று இலங்க லாலே
உரவிய அறிஞர் எல்லாம்
கிரியைமா ஒளியது என்பர்
பொருவறு புகழ்ம லிந்த
பொதியில்வீற் றிருக்கும் மேலோய். 795

கிரியாப்பிரகாசத்தலம் - முற்றும்.

ஓம் மிருடாய நம:

தொண்ணூற்றொன்றாவது

(11) பாவப்பிரசாதத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தரங்கம்ஆ திகள்தாம் வேலை
தன்னில்வேறு ஆகா வாபோல்
பரந்துள புத்தி யாதி
பாவங்க ளான்மா வில்வேறு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இருந்தன அலவென்று ஓதும்
இதுபாவ ஒளியாம் என்பர்
புரங்கடந் தவன்தன் நூலின்
பொருள்தெரிந்து உணர்ந்து ளோரே. 796

சகமெலாம் சிவமே தானும்
தற்சிவ மேயென்று உன்னும்
பகவிலா யோகி தான்வெம்
பவத்தினால் வருத்த மெய்தான்
நிகரிலாச் சிவபா வந்தான்
நிலைத்திடு மேல் அ வற்குத்
திகழ்வுறு பாவம் எல்லாம்
சிவமயம் ஆகும் அன்றே. 797

வேறறு சிவபா வத்தால்
விலக்குறு வினைகள் உள்ளோன்
மாறறு சிவமே யன்றி
மற்றொரு பொருளுங் காணான்
பாறிய மலமு டைத்தன்
சொரூபானு பவி பு லன்கள்
ஏறிய விடங்கள் எல்லாம்
இருஞ்சிவ மயமே யாகும். 798

விருப்பொடு வெறுப்பு மேவும்
பாவனை விளையா நிற்கும்
உருப்பவம் அவ்வையொ டுங்கும்
பாவனை சிவமே நாட்டும்
இருட்படாம் இரவி தன்னை
எய்திடா ததுபோல் பாவம்
தரிப்புடன் இலகும் ஆன்மாத்
தனையுறாது அவித்தை யன்றே. 799

பாவப்பிரகாசத்தலம் - முற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் பசுபதயே நம:

தொண்ணூற்றிரண்டாவது

(12) ஞானப்பிரகாசத்தலம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

முக்கியப் பொருளிற் கூட்டம்
முளைத்திடு மாசெ யான்மன்
மிக்குறும் இலக்க ணார்த்தம்
மேவுறு நிமலன் தன்னால்
புக்குறும் அந்த ஞானம்
பொருந்துதல் தனைய வற்குத்
தக்கவர் மொழியு ஞானப்
பிரகாசந் தானென்று ஓர்வாய். 800

முத்தனுக்கு அந்த ஞான
சம்பந்த முறைமை கூறின்
வைத்திடும் இயல்பால் ஞேயம்
இலாமையாம் வகுத்து நின்ற
மெத்துறும் உபாதி யோடு
மேவிநிற் கின்ற ஞானம்
இத்தலை என்னும் பேதம்
இறந்திடாது என்பர் நல்லோர். 801

பொருளுறு பரிச்சே தம்தான்
புகன்றிடும் ஞானம் ஆகும்
மருளறும் பரிச்சே தம்பின்
வரும்பர மான்மா வின்கண்
உரைசெயும் ஞானம் இல்லை
உணர்விற்கு விடயம் அல்லாப்
பரசிவ னிடத்து அ யிக்கம்
பண்ணலே ஞான மாகும். 802

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உலகொரு மயமாய் இன்ப
உண்மையாய் அபரிச் சேதம்
நலமலி பிரமம் என்னும்
ஞானமே பிரம ஞான
மலிசக உபாதி நீங்கி
மலர்வுறு பிரம ஞானம்
இலகுறின் அறிவாம் எங்கும்
காண்பதொன் றில்லை வேறு. 803

முத்தி கா ரணமாம் அத்து
விதஞான முற்றி னானுக்கு
எய்த்திடும் பவமே யில்லை
எங்கணும் நிறைந்து நின்ற
நித்தியா னந்த ஞான
நிட்கள சிவத்தொ டுங்கும்
சித்தனாம் யோகி பேதந்
தீர்ந்தொரு தானே யாகும். 804

ஞானப்பிரசாதத்தலம் - முற்றும்.

5-ஆவது பிரசாதலிங்கத்தலம் - முற்றிற்று.

6-ஆவது மஹாலிங்கத்தலம்

(அயிக்கியனுக்குச் சேர்ந்த உட்பிரிவுகள்)

கலிநிலைத்துறை

இலங்க ஓதினை அச்சர ணத்தலம் எய்தும்
தலங்க ள்யாவையும் இனிஅயிக் கத்தலம் சார்ந்த
நலம்கு லாம்தல பேதமும் எனக்குநீ நவில்வாய்
கலங்கி லாவுளத்து அருளினாற் கணங்கள் நாயகனே. 805

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சாத மேவரும் சுவிகிரு தப் பிர சாதம்
ஆதி ஞானசூ னிய முடி வாகிய ஒன்பான்
பேதம் ஆகிய தலங்களை அயிக்கியன் பெறுதற்கு
ஓது வாமுறை யினில்அவை அகத்திய உணர்வாய். 806

ஓம் தேவாய நம:
தொண்ணூற்று மூன்றாவது

(1) சுவிகிருதப்பிரசாதத்தலம்

கலிநிலைத்துறை

முக்கி யார்த்தமும் இலக் கணார்த் தமும் இலை மொழியில்
தக்க பேரறி வுருவமாம் அவற்குஅவன் தனக்கு
வைக்கும் ஓர்தடை இலாமையால் மகிழ்பிர சாதம்
துய்க்கு மாறு கொண் டிடப்படும் எனமறை சொல்லும்.
807

மாது ருப்பிர மேயமொண் பிரமாண வழக்கில்
பேதம் அற்றுயர் சின்மயம் ஆக்குறப் பெற்றே
ஏதம் அற்றிடும் யோகிதன் சொரூபம்உற் றிருப்பன்
போதம் அற்றவத் துவிதனைப் பொருந்துமோ பேதம்.
808

போதம் ஆகிய சிவனிடைப் பொருந்துமிவ் வுலகம்
யாதும் ஆரழல் படுவன போற்சிவ மேயாம்
சோதி யாஞ்சிவங் கண்டிடின் மண்முதற் சொல்லும்
பூத மோடுமற்று உள்ளவும் பொருந்திநின் றிலங்கா. 809

சோதி லிங்கம்நின்று அகத்தினில் சுடர்வுற யோகி
பூதம் ஆதிய தத்துவம் கண்டவை பொருந்தான்
போத வாரழல் இடைப்புலன் யாவையும் போக்கித்
தீதி லாமனத்து உவகைபெற் றிடுஞ்சிவ யோகி. 810

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நவையில் யோகிதான் சச்சிதா னந்தமாய் நண்ணும்
சிவனின் மேவுற விடயங்கள் சமர்ப்பணம் செய்தே
அவன்நி லாம்பிர சாதம்உண் குவன்என அறிவாய்
தவமெ லாம்ஒரு வடிவுகொண் டனையமா தவனே. 811

சுவிகிருதப்பிரசாதத்தலம் - முற்றும்.

ஓம் மஹாதேவாய நம:
தொண்ணூற்றுநான்காவது

(2) சிட்டோதனத்தலம்

கலிநிலைத்துறை

மாயை யாதஃ்தி யாவர்க்கும் தோன்றியே மறையும்
மாய மாயைதான் அறிவுரு வாகிய அவற்குத்
தூய ரால்சொல் சிட்டோதனப் பெயர்பெறுந் தொன்மை
மூய மாமல இருளற முனிவுற முனியே. 812

மாயை தந்துள சகம்வடி வாயதன் சொரூபம்
தூய ஞானத்தின் மூடுறப் படுதலால் தோன்றும்
மாயை ஒன்றுமே எஞ்சிய தொருசிவ மயமே
யாய முத்தனுக்கு ஏவல்செய் தொழிலியம் மாயை. 813

எண்ணில் சத்தியால் உலகெலாம் மயக்குமிம் மாயை
நண்ணு மெய்ச்சிவத்து அயிக்கனை நண்ணுற வற்றோ
கண்ணி னிற்றிகழ் சோதியாம் சிவத்தினிற் கலந்தோன்
உண்ணல் உற்றிடு விடயங்கள் ஒழிந்திடும் தாமே. 814

பொறிக ளால்உணும் புலன்கடல் புகுந்திடு நதிபோல்
அறிஞ னாகியோன் இடத்திற்புக்கு அடங்குறும் என்பர்
மறிவில் யோகியிப் பொருளொழி அறவடிவு அடக்கிச்
செறியும் ஆர்கதிர் எலாம்கொடு வீழ்தின கரன்போல். 815

சிட்டோதனத்தலம் - முற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் அவ்யயாய நம:

தொண்ணூற்றைந்தாவது

(3) சராசரலயத்தலம்

கலிநிலைத்துறை

பாகு பாடுறு சராசரத்து உறுபரத்து ஒன்றாம்
யோகி தானுடம் புறுகிலன் ஆகியே ஒழிவில்
ஏகம் ஆகிய சராசர நாசகன் என்ன
மோக மாயையை முனிந்தவர் மொழிந்திடப் படுவான். 816

உலக ஞானம்ஓர் அவித்தையாம் காரணம் உடைத்திங்கு
அலகி லாததன் சொரூபஞா னம்பெற அவிச்சை
மலமி ராதெனின் இச்சகம் விளங்கிட வற்றோ
கலையெ லாம்உணர்ந்து உயர்தரு கலயமா முனிவ. 817

வானின் மாமுகில் எழுந்தடங் குதல் என மயங்கா
ஞானிபால்எழுந்து அடங்குறும் விடயங்கள் நவிலின்
ஆன தோர்கன விற்பொருள் நனவில்அற் றிடல்போல்
ஊன மாஞ்சகத் தோற்றமெய் உணர்வினில் ஒழியும். 818

சாக்கி ரந்தொடர் சொற்பனம் சுழுத்தியைத் தணந்து
மீக்கி ளந்திடும் அவத்தையை மேவிய வொருவன்
ஆக்கு ஞாதுரு ஞானஞே யங்களாம் அனைத்தும்
நீக்கி நின்றிடும் என்பர்நல் அறிவினில் நிலைத்தோர்.819

துரியா தீதமாம் பதத்திடைத் துளக்கற இருந்த
பெரியான் இவ்வுல கத்துஉருக் காண்கிலன் பின்னர்க்
கரியாய் நின்றமெய்ச் சிவத்தினைக் கண்டவன் காணான்
திரியா மற்றொரு பொருளினைச் செவிக்கொளான் அறியான். 820

மித்தை யாகும்இவ் வுலகம்முன் உண்மைபோல் விளங்கும்
சத்துஅது ஆகிய பரசிவம் வெளிப்படின் தனது
மெய்த்து நின்றமெய்ச் சொரூபமே எங்கணும் விளங்கும்
சித்த மாமயல் ஒழிந்துமுன் னூல்பல தெரிந்தோய். 821

சராசரலயத்தலம் - முற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் ஹரயே நம:

தொண்ணூற்றாறாவது

(4) பாண்டத்தலம்

கலிநிலைத்துறை

அண்ட நூறுகோ டிகள்படைப் புடன்நிலை அழிவு
கொண்ட தோர்இட மாகிய அதனையே குறித்துக்
கண்ட தோர் விம ரிசந்தனைக் கசடற உணர்வால்
பண்டை நூலுணர் பவர்பாண்டத் தலமெனப் பகர்வார். 822

தத்து வங்களுக்கு ஒருகரி ஆகியே சகத்திற்கு
உய்த்த காரண மாய் விம ரிசப் பெய ருடைய
சத்தி தானிலங் குறுஞ்சகம் அடங்கிடத் தானாய்
மெய்த்த ஆருயிர் விளங்கிடும் விமரிச கலையே. 823

ஈச னோர்பர அகந்தைசேர் விமரிச வானாய்ப்
பேசும் யாவையும் உணர்ந்துஒழி வறுபெருந் தகையாம்
தேசு லாம்பர அகந்தையிற் சிறந்துளது ஆகி
மாசி லாவிம ரிசம்நிகழ் வுறும்என மதிப்பாய். 824

பரந்த தாகிய விமரிச பாண்டத்தில் அடங்க
விரிந்த தத்துவம் யாவையும் மேவுற வைத்துத்
தெரிந்த தன்னையே கண்டிருப் பன்திகழ் முத்தன்
அருந்த வர்க்குஅர சாகிய அகத்திய முனியே. 825

பாண்டத்தலம் - முற்றும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் பகநேத்திரபிதே நம:

தொண்ணூற்றுஏழாவது

(5) பாசநத்தலம்

கலிநிலைத்துறை

4219. ஓதும் அண்டங்கள் யாவும்வந்து உதித்துநின்று ஒடுங்கற்கு
ஏது வாகிய விமரிசம் யாதன்கண் இலங்கும்
ஏதை யாம் அது பாசநம் எனஇவண் விளம்பும்
மாது பாதியன் அருளிய ஆகம மறைகள். 826

4220. வேறு பாடுறும் உலகினுக்கு ஒருதனி வித்தாய்க்
கூறும் ஓர்விம ரிசப்பெயர் பராசக்தி குறுகும்
பேறு யாதெனின் பெற்றிடும் பிரமமாம் அதுவே
தேறு பாசநம் அனைத்திற்கும் என்றுரை செய்வார். 827

4221. ஆதி யாயசிற் சத்தியிச் சகமுளை ஆகி
ஓது மாகர ணத்துரு வால்எதில் ஒளிரும்
தீதி லாவது பிரமமென் சிவமென அறைவர்
வேத மோடுயர் ஆகமம் உணர்ந்திடு விமலர். 828

4222. திங்கள் வெண்ணிலா அனைத்தையும் திகழ்த்துதல் போலச்
சங்க ரன்தனில் உறுவிம ரிசமெனும் சத்தி
இங்கு அனைத்தையும் ஒருங்குற விளக்கும் என் றிசைப்பர்
மங்க லப்பெருங் கலைகளில் நுழைந்திடும் மதியோர். 829

4223. ஆதி யிற்பெறும் அகரமே உயர்சிவம் அம்தான்
ஓது தற்குஅரும் சத்தியிச் சிவசத்தி உருவாம்
ஏதம் அற்றிடு பிரமம்ஒன் றேஅகம் என்னும்
மேதை நற்பதம் பொருந்தும்என்று அறைகுவர் மேலோர்.
830

4224. திகழு றும்பரம் ஆகியே சிவசத்தி மயமாம்
அகமெ னும்பதம் அடைந்துயர் அருஞ்சிவ யோகி
சகம் அ டங்கலும் தன்னுரு வாகவே சார்ந்து
நிகழும் என்றுரை செய்திடும் நிமலன்ஆ கமங்கள். 831

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மரம்அ டுத்துள பாசிலை மலர்முத லனவோர்
தரைஅ டுத்துள வித்தினில் அடங்குறும் தகைபோல்
பரவும் இச்சகம் யாவும்ஓர் பரமநல் யோகி
இருத யத்தனி வித்தினில் அடங்குமென்று இசைப்பர். 832

பாசநத்தலம் - முற்றும்

ஓம் அவ்யக்தாய நம:
தொண்ணூற்றுஎட்டாவது

(6) அங்கலேபத்தலம்

கலிநிலைத்துறை

காலம் திக்கிவை ஆதியால் கண்டிதம் இன்றிக்
கோலம் சச்சிதா னந்தமாம் இதுமுனங் கூறும்
சீலம் கொண்டவற் குருவெனச் செப்புவர் அவன்தான்
மால்இங்கு ஓவும்அங் காலேபன் என்பர்நூல் வல்லோர். 833

போத மேனியா மதிஞன்வெண் புகைமுத லனவால்
ஓதும் வானென ஒன்றொரு தொழிலொடும் உறானால்
மேதை யாம்இவன் தனக்கிலை விதியொடு விலக்காம்
பேதம் ஆகிய விகற்பமும் என்றிடும் பெருநூல். 834

வேறு பட்டிடு கடாதியால் விசும்புவே றுறினும்
வேறு பட்டிடா வாறென விமலமெய்ப் பிரமம்
வேறு பட்டிடும் உபாதியால் வேறுவே றுறினும்
வேறு பட்டிடாது எனமறை விளங்குற விளம்பும். 835

வான மேயென அளவற வயங்குறும் பிரமம்
ஆன அங்குஅதில் சிற்கலை விசேடமென்று அறிவாய்
மானி டம்கட வுளர்விலங்கு எனும்தகை மருவான்
ஞானி யாவையும் தன்வடிவு ஆகவே நண்ணும். 836

அங்கலேபத்தலம் - முற்றும்.

Digitization by Hindu-Heritage Endowment of America. HHFA(USA)

ஓம் தக்ஷாத்வரஹராய நம:
தொண்ணூற்றொன்பதாவது

(7) சுபராஞ்ஞத்தலம்

கலிநிலைத்துறை

ஏகம் ஆகியே அறிவுரு வாய்அளவு இசையாது
ஆகும் ஓர்பிர மத்தினில் கலந்திடும் அரிய
யோகி யாம்அவன் தன்னையும் பரனையும் உணரும்
பாகு பாடுறும் இயல்பினை உடையனோ பகராய். 837

ஞான சீலமே வினற்குநீ நானெனும் மயலோடு
ஆன இன்பதுன் பம்புணர்பு அகறல்தே வாதி
மானம் ஞாதுரு ஞேயம்வா றறிவுஅறி யாமை
யீனம் மேலொடு பந்தம்வீடு இவைமுதல் இல்லை. 838

தேச காலமற் றொளிதரு தேசடை தலினால்
ஆசி தன்னையும் பரனையும் அறிந்திடா மையினால்
ஏசுஇல் தன்னொடு பரம்அறி யாத்தலம் இதனைப்
பேசும் ஆகமம் என்றறி அருந்தவப் பெரியோய். 839

சபராஞ்ஞத்தலம் - முற்றும்.

ஓம் ஹராய நம:
நூறாவது

(8) பாவாபாவலயத்தலம்

கலிநிலைத்துறை

பகுத்து நின்றுநீ நானெனும் பரிசில தாகி
உகபுஅ டைந்திடு சூனிய சிதம்பரத் தொன்றாந்
தகப் பெ ருந்தகை ஆகிய யோகியைச் சாரா
மிகுத்து நின்ற பா வாபாவம் எனஅறி மேலோய். 840

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஈங்கு நானெனும் பாவத்திற்கு இலாமைவந் துறவால்
தீங்கி லாத ஆன் மாவினது அ பாவமும் செப்புற்று
ஆங்கி லாமையை அடைதலால் அச்சீவன் முத்தன்
ஓங்கு பாவமோடு அபாவமும் இலனென உணர்வாய்.
841

பந்தம் ஓவிய பெருமையோன் இன்பதுன் பத்தில்
வந்த பாவமும் அபாவமும் இலன்என மதிப்பாய்
உந்து ஞானியாய்ப் பாவமும் அபாவமும் ஒழித்தோன்
அந்தில் உள்ளதா யினும்இல்ல தாயினும் அறியான். 842

தோன்று பாவமும் அபாவமும் எங்கணுந் தோயான்
சான்ற தாம்சிவத்து ஏகமாம் தகையினோன் அதனால்
ஆன்று நின்றபா வாபாவ லயத்தலம் அதனை
ஞான்ற வார்சடைக் கடவுள்ஆ கமம்எலாம் நவிலும்.843

பாவாபாவலயத்தலம் - முற்றும்.

ஓம் பூஷதிந்தபிதே நம:
நூற்றுஒன்றாவது

(9) ஞானசூனியத்தலம்

கலிநிலைத்துறை

பராப ரத்தினை விழைந்தபா வாபாவ விவேகம்
விராவு நற்பெரு ஞானம்ஒண் பிரமத்தின் மேவுற்று
இராதெ னப்பட லால்ஞான சூனியம் இசைக்கும்
அராவு டைச்சடை எம்பிரான் ஆகமம் அனைத்தும். 844

நீரில் நீரும் வெந் நெருப்பினில் நெருப்புமே போல
ஆரும் ஓர்பிர மத்தினில் அயிக்கமுற்று அடைந்த
பேரி னோன் விபா கத்தினால் காண்குறான் என்று
சாரும் ஆகம நெறியுணர்ந் தவருரை தருவார். 845

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

பேத மாறிய அனைத்துமாம் ஒருபிர மத்தின்
ஞாது ராதிகள் வழக்கினால் தோன்றுறு ஞானம்
யாது மேவுறும் யாதுமே வாதென எய்ப்பாய்
போத வாரமுது உண்டருந் தமிழ்க்கலை புகன்றோய்.846

வான மாம்என வடிவில்சின் மாத்திரம் ஆகி
மானம் இன்றிவே றொன்றொடும் படாதுதான் மலர்ந்தொன்
றான வோர்பிர மத்தினில் நானெனும் அதனான்
ஞான பாவனை பாவிப்போன் யாவன்நீ நவில்வாய்.847

ஞேய மாகஒன்று எதிர்உற நின்றிடா மையினால்
பாய ஞானசூ னியமென்றும் பாவிக்கப் படுமால்
தூய தானசத் தானந்த வடிவமாம் சோதி
மேய வோர்பரா காசம்ஒத்து எங்கணும் விளங்கும். 848

சூனி யம்பெறு ஞானாதி கற்பனைச் சோதி
யான வொண்சிவ லிங்கமாம் தன்னுரு வதனில்
தான் இ ரண்டற அடைந்துள தகுதியோன் தனக்கு
ஞானம் என்பதுஒன்று இலையென அறைகுவர் நல்லோர்.
849

சாற்று காரணத் துவமொடு காரியத் தன்மை
ஏற்ற சேடமோடு உற்றசே டித்துவம் இலானைப்
போற்றும் ஓர்பர முத்தன்என்று அறைகுவர் புலவர்
ஆற்றில் சாறஅத் துயர்தரும் அகத்தியப் பெயரோய். 850

ஞான சூனியத்தலம் - முற்றும்.
6-ஆவது மஹாலிங்கத்தலம் - முற்றிற்று.

ஆக காப்பு பாயிரம் உள்பட செய்யுள். 851

இரண்டாம் பரிச்சேதமாகிய
இலிங்கத்தலம் முற்றிற்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம் சகஸ்ராட்சாய நம:

அந்தியகதை

ஸ்ரீ ரேணுகாகஸ்த்ய சம்வாதம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

முக்கணன் அம்பி கைக்கு
முன்சொலத் துவித ஞானம்
அக்கண நாதன் இவ்வாறு
அகத்திய முனிக்கு உணர்த்தி
நெக்குறு மனத்தில் ஈசன்
நினைவொடு மவுனி யானான்
கைக்கம லங்கள் கூப்பிக்
கடமுனி கசிந்து சொல்வான். 851

வருத்துறு பிறவி நோய்தீர்
மருத்துவ நெஞ்சக் கோட்டம்
திருத்துறும் உரவ ஞானச்
செல்வவே தாக மங்கள்
கருத்துணர் புலவ நீநின்
கருணையால் அடிய னேனுக்கு
உரைத்தருள் ஞான நூலால்
உளத்துறும் உவகை பெற்றேன். 852

இன்றுநான் மனித யாக்கை
எய்திய பயன் அ டைந்தேன்
இன்றுநான் முனிவர்க்கு எல்லாம்
இறைவனாம் பெரியே னானேன்
இன்றுநான் அவிச்சை என்னும்
இருள்விடி காலை பெற்றேன்
இன்றுநான் அளவி னோன்பால்
எய்த்ததற்கு உறுதி கண்டேன். 853

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பரம நூல்இதனைக் கேட்க
அருந்தவம் பயின்றோர் என்போல்
ஒருவரும் உலகில் இல்லை
உமையொரு பாகன் எங்கோன்
அருளினால் அடிய னேனை
அடிமைகொண்டு அருள வேண்டி
மருவினை என்று சீர்சால்
மலயமா தவன் து தித்தான். 854

அறைந்தநூல் இதற்கு நீயே
அதிகாரி அன்றி யில்லை
பிறந்திடா வடிவ முக்கண்
பெருந்தகை அருளி னுக்குச்
சிறந்துளாய் என்னும் ஆற்றல்
செப்பினன் இதனைப் போல
மறைந்திடாது இலகு ஞான
சாதனம் மற்றொன்று இல்லை. 855

ஆகம சாரம் ஆகி
அருமறைப் பொருள் நிறைந்து
சீர்கெழு கிரியை ஞானம்
திகழ்த்தும்இவ் இணையில் நூலைப்
பாகம்அது அடைந்த சீடன்
பால்உகந்து அளிப்பது அன்றி
மோகமது அடைந்து ளோற்கு
மொழிந்திடத் தக்க தன்றே. 856

இப்பரிசு அருளி எங்கள்
இரேணுகன் கடிது எழுந்தங்கு
ஒப்பரும் முனிவர் கோமுன்
உயர்விசும் பிடைக்க ரந்தான்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அப்பெரு முனிவன் நோக்கி
அற்புத முடன் இருந்தான்
செப்பரும் வீர சைவ
சித்தாந்த நூல்உ ணர்ந்து. 857

விபீஷணாபீஷ்ட தானம்

வேண்டுரு அடைய வல்ல
விழுமிய இரேணு கன்தான்
சேண்தொடும் மதில் இ லங்கைத்
திருநகர் தன்னிற் சென்றான்
பூண்திகழ் குலவுத் திண்தோள்
பொருவலி விபீட ணன்தான்
காண்டலும் உவகை பூத்துக்
கரிப்பகை அணையில் உய்த்தான். 858

அருக்கிய முதல் அ ளித்துஅங்கு
அருச்சனை முறையின் ஆற்றித்
திருக்கிளர் கமலப் பொற்றாள்
சென்னியின் வணங்கி நிற்பச்
செருக்குஒழி உளத்த ன்அன்பால்
செய்பணி உவந்து யோகி
இருக்குஎன வயல் ஒ டுங்கி
இருந்தனன் இயம்பல் உற்றான். 859

கண்ணுதல் கயிலை காக்கும்
கணங்களின் தலைவ நீஇம்
மண்ணுலகு உய்ய வந்த
மாற்றமும் உணர்ந்து இருந்தேன்
புண்ணிய மூர்த்தி நீஇப்
புரத்திடைத் திருத்தாள் வைக்கப்
பண்ணிய தவங்கள் என்னோ
வுணர்ந்திலன் பண்டு யானே. 860

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பரிந்துஉடல் இருந்த தற்குப்
பயன்உனை இன்று கண்டது
ஒருத்தரும் என்னை ஒப்பார்
உளர்கொலோ என்று கூறக்
கருத்துவ கையினின் மூழ்கிக்
கணங்கள்நா யகன் உ ரைப்பான்
பெருத்துள வறத்தில் இன்பேர்ல்
பெரியர்இவ் வுலகில் இல்லை. 861

சங்கர பத்தி தன்னால்
தலைமையோய் நின்னைக் காண்பான்
இங்குற அடைந்தேம் எம்பால்
எய்துறும் வரம்ஒன்று உண்டேல்
சங்கையது அற வு ரைத்தி
தருதும்என்று அவன் உ ரைப்பப்
பங்கய மலர்த்தாள் போற்றி
அரக்கர்கோன் பகரல் உற்றான். 862

கலிவிருத்தம்

இன்று நீஇங்கு எழுந்த ருளப்பெறு
நன்றி மேவிய நான்குறை ஈதுஎனச்
சென்று கூறும் செயலினை ஆயினும்
ஒன்று கூறுவது உண்டுஉனக்கு இன்றுஅரோ. 863

எனக்கு முன்னவன் ஆகும் இராவணன்
சினக்கும் வென்றி இ ராமன் சிலையுமிழ்
நுனிக்கும் அம்புற நொந்துயிர் போம்பொழுது
துனிக்க வன்றிது உரைத்திடல் மேயினன். 864

நம்கு லம் பெறு நன்மை பெருக்கினால்
திங்கள் என்னத் திசைகள் விளங்குறும்
பொங்கி ரும்புகழ்ப் புண்ணியன் ஆகும் நீ
இங்குஒ ழிந்தனை எம்பிஎன்று ஓதினான். 865

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இலங்கை ஒன்றஇ லிங்கம் புதியவாய்
நிலங்கள் ஒன்பது கோடி நிறுவுவான்
மலங்கல் இன்றி மனங்கொண்டு அவற்றினுள்
நலந் த யங்கறு கோடிகள் நாட்டினேன். 866

கலிநிலைத்துறை

மூன்று கோடிலிங் கங்கள்இங்கு ஒழிந்தன முறைநீ
ஊன்று வாய்என உரைத்துஇறந் தனன்அவன் உரையால்
ஆன்ற ஆகம முறையது செயத்துணிந்து அகத்து எஞ்
ஞான்று நாளினைத் திருந்தனன் என்றுஇது நவில்வான்.
867

மூர்த்தம் ஒன்றின்முக் கோடிலிங் கமும்முறை நிறுவித்
தீர்த்த என்கருத் தினைமுடித்து அருள்எனச் செப்பி
ஏத்தி நின்றனன் அரக்கர்கோன் இரேணுகன் அதுகேட்டு
ஆத்த நன்றுஅது புரிகுவன் என்றனன் அருளால். 868
மூன்று கோடியார் இயவுரு வாயினன் முயன்று
மூன்று கோடிலிங் கங்களும் முறையுளி வழாமல்
ஊன்றி னான்ஒருங்கு எயினருள் ஒருவனால் அன்றி
ஊன்றி னான்இருங் கணத்தினுள் உயர்ந்துள ஒருவன்.
869

அரக்கர் கோன்அது கண்டுஉளத்து அற்புதம் அடைந்து
நிரைக்கு மாமணி முடிஅகல் நிலம்பட இறைஞ்சி
உரைக்கு மாறுஉள துதியெலாம் உரைத்திட அருளிச்
செருக்கு மாறிய கணேந்திரன் மறைந்தனன் சென்றான்.
870

சென்ற திக்கினை நோக்கினன் அஞ்சலி செய்துஅங்கு
என்றும் அற்புடன் இருந்தனன் அரக்கர்கோன் அப்பால்
நன்றி யுற்றுஅருள் யோகிதான் நல்லருள் புரிந்து
தன்தன் இச்சையில் தடைஅற உலகுஎலாம் சரித்தான்.
871

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸ்ரீ ரேணுகர் ஸ்ரீசைலம் அடைதல்

எண்ணி லாவகை ஆடல்கொண்டு ஓங்குறும் இன்ப
மண்ணு ளோர்தமக்கு உதவினன் உலாவினன் வந்தே
அண்ணல் மேவிய கொல்லிபாக் கத்தினை அடைந்தான்
கண்ணி லால்அடி யவர்கள்கண்டு உவந்திடக் கணேசன்.
872

ஆல யத்தினில் அடைந்து சோ மேசனாம் அரனை
மால் அ யற்குஅரி யான்தனை அன்பொடு வணங்கிச்
சால மெய்த்துதி செய்துஇரு தடங்கணீர் அருவி
போல நெக்குளம் உருகினன் இன்றிது புகலும். 873

இன்று காறும்நின் ஏவலால் மண்ணிடை இருந்தே
நன்று நீஇனித் திருவடித் தாமரை நல்கி
என்றும் நானுடற் பொறைஎடாது அருளென இரந்து
நின்று ஞானமே னியன்உருப் பெற்றிட நினைந்தான்.874

ஆன காலையில் அங்கணன் தனதுபே ரருளால்
மானம் ஆகும்நின் பத்தியால் மகிழ்ந்தனம் உள்ளம்
ஞான மாமொழி மைந்தநீ வருகஎன நவின்றான்
வானு ளார்மலர் பொழிந்தனர் மண்ணுளார் ஆர்த்தார்.
875

ரேணுகர் மகாலிங்கத்து அந்தர்த்தானம் ஆதல்

ஆதி நாயகன் அருண்மொழி கேட்டுஅகம் மகிழ்ந்து
போத மாதவர் அனைவரும் முறைமுறை போற்றச்
சோதியாய் எழுந்து இலங்கு சோமேசன் மெய்ச் சொரூபத்து
ஓதியால் மிகும் இரேணுக கணேசன் உற்று ஒளித்தான்.
876

கணங்கள் நாயகன் சிவலிங்கத்து உற்றமை கண்டு
வணங்கி வானவர் கணங்கள் மாதவர்எலாம் வழுத்தி
மணம்கொள் மாமலர் பொழிந்துநின்று ஆர்த்தனர் மண்மேல்
அணங்கு பாதியின் புகழ் வளர்ந்து ஓங்கியது அம்மா.
877

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

வேதமோடு ஆகமங்கள் வேறுபாடு இன்றி நல்கும்
தீதுஅறு பொருளை எல்லாம் திரிவுஅற உலகில் காட்டும்
ஆதவன் அனைய இந்நூல் ஆதரவொடு பொறிப்போர்
ஓதுநர் ஓதுவிப்போர் உயர்தனி முத்தி சேர்வார். 878

கலிவிருத்தம்

மாரி பெய்க மநுநெறி ஓங்குக
பாரில் ஒண்சிவ பக்தர்கள் மல்குக
சீரின் மல்கும் சிவன்புகழ் வெல்குக
வீர சைவம் விளங்குக எங்குமே. 879

அந்தியகதை முற்றும்
ஆக - காப்பு பாயிரம் உள்பட செய்யுள் - 880

இவ்விதமாய் ஸ்ரீரேணுகாசாரியார்
அகத்திய முனிவருக்கு உபதேசித்தருளிய வீரசைவ
சித்தாந்தசிகாமணி மூலம் முற்றுப் பெற்றது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வாழ்த்துக் கவிகள்

வீரசிங்காதன புராணம்

கலிவிருத்தம்

வேதம் ஓங்குக வேதியர் ஓங்குக
மாத வத்தினர் மாதவம் ஓங்குக
பூத லத்துஉயிர் ஓங்குக பொற்பொடு
காதல் மங்கையர் கற்பு அடர்ந்து ஓங்கவே.

அகமும் ஓங்குக ஆனினம் ஓங்குக
மகமும் ஓங்குக மன்னவன் ஓங்குக
சகமும் ஓங்குக தண்புனல் காவிரி
மிகவும் ஓங்க விளைபயிர் ஓங்கவே.

வானம் ஓங்குக மாமகம் ஓங்குக
தானம் ஓங்குக சத்தியம் ஓங்குக
ஞானம் ஓங்குக நன்னெறி ஓங்குக
வான ஈசன் அருள்தழைத்து ஓங்கவே.

நேர்இ லாத்திரு நீறுமிக்கு ஓங்குக
வார்உ ருத்திர அக்கமும் ஓங்குக
சாரும் அஞ்செழுத்து ஓங்குக சந்ததம்
வீர சைவம் விளங்கிநின்று ஓங்கவே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஸ்ரீமுருகன் துணை

திருக்கயிலாய பரம்பரை

மயிலம் பொம்மபுர ஆதீனம்

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம்

மயிலம் & பொம்மையபாளையம்

திருமடம் வெளியீடுகள்

வெளியீடு எண்	நூல்களின் பெயர்	பதிப்பு ஆண்டு
20	இட்டலிங்க அபிடேக மாலை (மூலமும் - பழைய உரையும்)	1965
21	காசி வழித்துணை விளக்கம்	1965
22	ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் நெஞ்சுவிடு தூது (மூலமும் - குறிப்புரையும்)	1966
23	நெடுங்கழி நெடில்இ குறுங்கழி நெடில் (மூலமும் - உரையும்)	1967
24	ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் பிள்ளைத்தமிழ் (மூலமும் - குறிப்புரையும்)	1968
25	கைத்தல மாலைஇ சிவநாம மகிமை (மூலமும் - உரையும்)	1969
26	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 1-ஆம் தொகுதி	1987
27	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 2-ஆம் தொகுதி	1988
28	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 3-ஆம் தொகுதி	1989
29	நிரஞ்சன மாலை (மூலமும் - உரையும்)	1990
30	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 4-ஆம் தொகுதி	1990

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

31	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 5-ஆம் தொகுதி	1991
32	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 6-ஆம் தொகுதி	1992
33	ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் தாலாட்டு (மூலமும் - உரையும்)	1992
34	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 7-ஆம் தொகுதி	1993
35	அல்லமாபிரபு தேவர் சடுத்தலம்	1993
36	ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளி எழுச்சி மூலமும் உரையும்	1993
37	சோணசைலமாலைஇ நால்வர் நான்மணிமாலை, நன்னெறி மூலம் மட்டும்	1993
38	இட்டலிங்கப் பெருமான் தோத்திரத் திரட்டு - மூலம் மட்டும்	1993
39	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 8-ஆம் தொகுதி	1994
40	மிசிர சடுத்தலம் (குறிப்புரை)	1994
41	சோணசைலமாலை (நூலாய்வு)	1994
42	நால்வர் நான்மணிமாலை ஓர் ஆய்வு	1994
43	திருச்செந்தில் நிரோட்டகயமக அந்தாதிஇ பழமலை அந்தாதி (மூலமும் உரையும்)	1994
44	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 9-ஆம் தொகுதி	1995
45	ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் நெஞ்சுவிடுதூது - 2ஆம் பதிப்பு	1995
46	பெரியநாயகியம்மை கலித்துறை (மூலமும் உரையும்)	1995
47	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 10-ஆம் தொகுதி	1996

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

48	பரம ரகசிய சடுத்தலம் (மூலமும் பழைய உரையும்)	1996
49	ஸ்ரீ பிட்சாடன நவமணிமாலை (மூலமும் உரையும்)	1996
50	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 11-ஆம் தொகுதி	1997
51	சிவ சடுத்தல சாரம் சிவயோக இலக்கணம் அக்கமாதேவி சிருட்டி	04.07.1997
52	திருவெங்கைக் கலம்பகம் (மூலமும் உரையும்)	04.07.1997
53	திருவெங்கை உலா (மூலமும் உரையும்)	1998
54	ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் தனிப்பாடல்கள் (மூலமும் உரையும்)	1998
55	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய தேசிகேந்திர சுவாமிகள் அட்டகம் போற்றிப் பஞ்சகம்.	1999
56	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் பதிற்றுப் பத்தந்தாதி	1999
57	திருக்கூவப்புராணம் (மூலமும் உரையும்)	1999
58	ஸ்ரீ மகான் பசவேசர் பொன்மொழிகள் 1 - 100 முதல் பகுதி	1999
59	ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் சீர்த்தி மாலைத்திரட்டு - (6 தலைப்புகள்)	1999
60	ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் பனுவல் திரட்டு (மூலமும் - உரையும்) (2 தலைப்புகள்)	2000
61	ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் மும்மணிக்கோவை	2000
62	ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் நூற்றிரட்டு மூலம் (5 நூல்கள் தொகுப்பு)	2000
63	ஸ்ரீ மகான் பசவேசரின் பொன்மொழிகள் 101 - 200 இரண்டாம் பகுதி	2000

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

64	ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத் தமிழ் (மூலமும் உரையும்) (24.06.2000)	2000
65	ஒருவாறும் இன்றி பாடல் விளக்கம் (ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத் தமிழ்ப் பாடல் விளக்கம்)	2001
66	கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர் செந்தமிழ் நூல்களில் திருக்குறள் ஆட்சி (25.05.2002)	2002
67	கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள் நன்னெறி வெண்பா நாற்பது (மூலமும் உரையும்)	2002
68	ஸ்ரீமகான் பசவேசரின் பொன்மொழிகள் நான்காம் பகுதி	2003
69	குருகுகேசம் - 1	2003
70	நல்லாற்றூர் - சிவப்பிரகாச சுவாமிகள் செந்தமிழ் நூல்களில் கற்பனைகள் (30.06.2003)	2003
71	ஸ்ரீ மகான் பசவேசரின் பொன்மொழிகள் 3 ஆம் பகுதி	
72	சோணசைல மாலை (மூலமும் உரையும்)	2003
73	நல்லாற்றூர் - துறைமங்கலம் கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் செந்தமிழ் நூல்கள் (இரண்டு தொகுதிகள்)	2004
74	குருகுகேசம் - 2	2005
75	நால்வர் நான்மணிமாலை மூலமும் உரையும்	2005
76	ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் வரலாறு (17.09.2005)	2005
77	சோணசைல மாலை (மூலமும் உரையும்) பகுதி 2	2005

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

78	இட்டலிங்க பெருமான் தோத்திரத்திரட்டு (5 நூல்கள் தொகுப்பு)	2005
78A	பசவேசர் பொன்மொழிகள் - 5	2008
79	பசவேசர் பொன்மொழிகள் - 6	2009
80	பசவேசர் பொன்மொழிகள் - 7	2010
81	பரசிவப் பாமாலை (27.07.2011)	2011
82	பிரபுலிங்க லீலை மூலமும் - உரையும் (06.02.2012)	2012
83	சித்தரும் சிவஞானியும்	2013
84	மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ்	2013
85	குருகுகேசம் - 3	2013
86	இட்டலிங்க பூசை முறைகள்	2013
87	மயூராசல புராணம்	2014
88	வீரசைவம் - சுருக்க வடிவமைப்பு	2014
89	சித்தாந்த சிகாமணி - மூலம்	2014

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முந்துஉறும்எச் சைவதந்தி ரங்களுக்கும்
விளங்குதனி முடியாய் வீர
தந்திரம்உத் தரம்ஆகித் தனக்குமேல்
இலாமையினால் சாற்றும் நாமம்
நந்துஉறு சித் தாந்தசிகா மணி ஆகும்
சிவாத்துவித ஞான வாழ்வைப்
பந்தம் அறத் தரும் இதன்கண் திகழ்வீர
சைவர்மனம் பட்டு நிற்கும்.